கல்கி



KALKI ஜனவரி 22, 1956 4 அணா



அவள் ஒரு கவலையுற்ற தாயாராக இருந்தாள் - இது அவளுடைய முதல் குழந்தை - அதுவோ எப்பொழுதும் அசௌகரியத்துடன் கதறிய வண்ணம் இருந்தாள் - அவளுடைய எடையில்மாறுதலே இல்லை -வளர்ச்சியே கிடையாது.



ஒரு நாள், சந்தோஷமாயும், திடமாயுமுள்ள தன் குழந்தையுடனிருக்கும் தன் சிநேகிதியை விசாரித்தாள். விசேஷ மென்னவென்றால் சிநேகிதியின் குழந்தையும் அவளுடைய குழந்தையும் ஒரு வயசுக் குழந்தைகள்!

சிநேகிதி சொன்னாள் "என் குழந்தைக்கு 'க்ளாக்ஸோ' கொடுக்கிறேன்". 'க்ளாக்ஸோ' சுத்தமான புஷ்டியூட்டும் பால்-உணவு. குழந்தையின் எலும்புகளும் பற்களும் உறுதியாக வளர 'விடமின் டி'யும் ரத்தம் வளம் பெற இரும்புச் சத்தும் சேர்க்கப்பட்டுள்ளன.





அந்தத்தாயார் அன்றைக்கே'க்ளாக்ஸோ' கொண்டு வந்தாள். இப்பொழுது குழந்தையைப் பாருங்கள். அவள் குதூகலத்துக்கு அளவில்லை. அயர்ந்து தூங்கவும் செய்கிறாள்! எடையும் திரமாக அதிகரித்துக்கொண்டு வருகிறது. 'க்ளாக்ஸோ'வுக்கு நன்றி.

Glaxo

'க்ளாக்ஸோ'-குழந்தைகளின் மிகச் சுத்தமான பால்-உணவு

D. 34

மலர் 15
இதழ் 25
தை 9
மன்மத

கல்கி
பொருளடக்கம்

22, ஜனவரி 1956.

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.


பெப்ரவரி 3 முதல்
தென்னாடெங்கும்
விக்ரம்
புரொடக்ஷன்ஸ்
தெனாலிராமன்
நடிகர்கள்
தமிழ்
சிவாஜி கணேசன் • பானுமதி • N.T.ராமாராவ்
V.நாகய்யா • ஜமுனா • M.N.நம்பியார்
சுரபி பாலசரஸ்வதி • மாஸ்டர் வெங்கடேஸ்வரன்
வசனம், பாடல்கள்
கவிஞர் கண்ணதாசன் • டைரக்ஷன் B.S.ரெங்கா
GOLDEN FILMS LTD. MADRAS-17.
உரிமையாளர்கள்
கோல்டன் பிலிம்ஸ் லிமிடெட்.
2, விஜயராகவாச்சாரி ரோடு, சென்னை-17.



மலர் 15 | தமிழ்த்திரு நாடு தன்னைப் - பெற்ற | மன்மத ௵
இதழ் 25 | தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் | தை மீ 9

டல்லெஸின் போக்கு

'யாரென்ன சொன்னபோதிலும் நாங்கள் விஷ குண்டை வெடித்துத்தான் தீருவோம்' என்று அமெரிக்கத் தலைவர் டல்லெஸ் பிரபு, மற்றும் ஒரு முறை பிடிவாதமாகச் சொல்லி விட்டார். இந்த வெடிகளினால் போட்டியிலும் சண்டையிலும் சேராத பிற நாட்டு மக்களுக்கும் துன்பம் உண்டாகும் என்பதை அவர் கவனிக்க மாட்டேன் என்கிறார். அவருடைய பேச்சிலுள்ள அகங்கார தொனியை நாம் பொருட்படுத்த வேண்டியதில்லை. நம்முடைய உரிமையை நாம் காப்பாற்றிக் கொண்டால் போதும்.

இந்தியாவைப் போன்ற சார்பற்ற அரசாங்கங்கள் கண்டிப்பாகவும் ஏகோபித்தும் அமெரிக்க அரசாங்கத்துக்கு அறிக்கை விடவேண்டும். கூடவே ருஷ்ய அரசாங்கத்துக்கும் விடலாம். ருஷ்ய அரசாங்கம் நமக்குச் சொல்லாமலே சமீபத்தில் குண்டை வெடித்தது. 'இப்போது உங்களுக்குச் சொல்லியே வெடிக்கிறேன்' என்கிறார் டல்லெஸ் பிரபு. இதற்கு மேலும் மற்ற நாடுகள் சும்மா இருப்பது தவறு. முந்தி வெடித்த குண்டுகளின் அளவு இதில் புகை விஷம் இல்லை என்கிறார். ஆனால் மேலுக்கு மேல் சேர்ந்து வருகிறது விஷம். நேற்று அளவு இன்று இல்லை யென்றாலும், நேற்றிருந்த விஷத்தோடு இன்று சேர்ப்பதும் கூடுதல்தானே? விஷம் கரைந்துபோகும் விஷமல்ல. நேற்றுப் பத்துப் பொய் சொன்னேன்; இன்று ஐந்துதான் சொல்கிறேன் என்கிற மாதிரி. பொய்க்குப் பொய் கூட்டும்போது பொய் வளர்ந்து கொண்டே போகிறது.

அணுகுண்டுகளின் விஷம் பொல்லாத விஷம் என்றும், அது மானிட வர்க்கத்தின் கரு விதைக்கே ஆபத்து என்றும் அமெரிக்க விஞ்ஞான நிபுணர்களும் ஆங்கில விஞ்ஞான நிபுணர்களுமாகப் பலர் அறிக்கைகள் வெளியிட்டிருக்கிறார்கள். எனவே, இனி இந்த குண்டினால் தீமையில்லை என்று நிரூபிக்க வேண்டிய கடமை அணுகுண்டை வெடிக்கும் அரசாங்கத்தைச் சார்ந்தது. சார்பற்ற உலக நாடுகள், இந்திய அரசாங்கத்தை எதிர்நோக்கி நிற்கின்றன. உலக மகா நாடுகளிலும் உலகச் சோதனைச் சிக்கல்களிலும் இந்திய அரசாங்கம் ஒரு உன்னத ஸ்தானத்தைப் பெற்று விட்டது. முன்னணியில் நின்ற பிறகு, பொறுப்பையும் ஏற்றுத்தான் தீர வேண்டும். இஷ்டப்படி நடந்துகொண்டு போவதைத் தடுக்கவேண்டும். உலகத்தாரின் உரிமைகளை அலட்சியம் செய்வதிலும் ஒரு வரம்பு உண்டு என்று கண்டிப்பாகத் தடுக்க வேண்டும்.

இதற்கெல்லாம் தடையாக ஒன்று நிற்கிறது. அமெரிக்கர்கள் தாராளமாகப் பிற நாட்டார்களுக்குப் பண உதவி செய்து வருகிறார்கள். ஆனால் உரிமைகளை விலைக்கு வாங்கும் நோக்கத்துடன் இந்தப் பண உதவியை அமெரிக்கர்கள் செய்யவில்லை. ஆட்சேபணையை நாம் செய்யும் முறையில் செய்தால் நன்றி மறத்தல் என்னும் குற்றம் ஆகாது. தற்போது நாம் கேட்காமலேகூட உதவி செய்யும் முறையை அமெரிக்கர் கையாண்டு வருகிறார்கள். இந்த அணுகுண்டுகளை வெடிக்காமல் இருப்பதே பேருதவியாகும்.

விமானங்களில் ஆகாயத்தில் பறந்து சென்று எங்கெங்கே அணுகுண்டு உற்பத்தி நடைபெற்று வருகிறது என்று கண்காணிக்கும் திட்டம் ஒன்றை ஐஸன்ஹோவர் ஜினீவாவில் வெளியிட்டார். அணுகுண்டுகளை ஒழித்து விட்டோம் என்று வல்லரசுகள் முன்னதாகவே ஒப்புக் கொண்ட பிறகுதான் இந்தக் கண்காணிப்புப் பயன்படும் என்றும் இல்லாவிடில் இந்த விமான மேற்பார்வையினால் பயனுண்டாகாது. உற்பத்திப் போட்டிதான் உண்டாகும் என்றும் ருஷ்ய சர்க்கார் ஆட்சேபித்தார்கள். அது சரியான

ஆட்சேபணை அல்ல என்று பலர் அந்தக் காலத்தில் நினைத்தார்கள். இப்போது ருஷ்யாவில் ஒரு பெரிய அணுகுண்டு வெடித்தபடியினால், நாங்களும் இரண்டு மூன்று வெடிப்புகள் தொடர்ச்சியாக நடத்த வேண்டும் என்று டல்லெஸ் பதில் சொல்கிறார். யார் சொன்னாலும் நிறுத்த மாட்டேன் என்கிறார். அணுகுண்டு ஒழிப்பு ஒப்பந்தம் செய்யாமல் ஒரு நாட்டில் நடைபெறும் அணுகுண்டு வெடிப்பு வேறொரு நாட்டுக்குத் தெரிவதினால் போட்டி ஏற்படுமே தவிர, நன்மை உண்டாகாது என்பது இப்போது வெட்ட வெளிச்சம் ஆகிறது.

உரிமைகளைக் காப்பதற்கு ஹேக் நகரத்தில் ஒரு அகில உலக நியாயஸ்தலம் இருக்கிறது. அங்கே அரசாங்கங்கள் பரஸ்பர உரிமைகளை விவகரிக்கலாம். சார்பற்ற ராஜ்யங்கள் இந்த நியாய ஸ்தலத்தில் அணுகுண்டுச் சோதனை வெடிப்புகளைப்பற்றி வழக்குப்போட்டு வாதிக்க வேண்டிய சந்தர்ப்பம் நெருங்கி விட்டது.

தவற்றைத் திருத்திக் கொள்வார்களா?

இலங்கை சர்க்காரின் போக்கு விசித்திரமாகவும் புரியாத புதிராகவும் இருந்து வருகிறது. உலக நாடுகளில் உள்ள எந்த சர்க்காரும், குறிப்பாகப் புதிதாய் சுதந்திரம் பெற்ற எந்த சர்க்காரும் தங்களை எதிர்நோக்கி நிற்கும் பிரச்னைகளைச் சுமுகமாகத் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்றே விரும்புவார்கள். ஆனால், இலங்கை சர்க்காரோ வெனில், இலங்கை இந்தியர்களின் பிரஜா உரிமையாகிற மாபெரும் பிரச்னையைத் தீர்ப்பதற்குற்ற சுமுகமான சூழ்நிலையைச் சிருஷ்டிப்பதுடன் நிற்கவில்லை; மேற்கொண்டு புதிய பிரச்னைகளையும் புதிய சிக்கல்களையும் உண்டாக்கி வருகிறார்கள்.

அந்த நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள மொழி நெருக்கடி இலங்கை அதிகாரவர்க்கத்தினரால் சிருஷ்டிக்கப்பட்டது என்று கூறுவது மிகையாகாது. இலங்கையில் உள்ள மக்களில் பத்துலட்சம் பேர் பேசும் தமிழ் மொழி, சிங்கள மொழியுடன் ராஜாங்க பாஷையாக இருக்க வேண்டும் என்பது ஏற்கனவே இலங்கை சர்க்கார் தலைவர்களால் ஒப்புக் கொள்ளப்பட்ட விஷயமாகும். அப்படியிருந்தும் சில சிங்களத் தீவிரவாதிகளின் கிளர்ச்சி காரணமாக அவ்விஷயத்தில் இலங்கை சர்க்கார் தடுமாறி வருகிறார்கள். சிங்களம் ஒன்றைத் தவிர வேறு எந்த மொழியையும் இலங்கை சர்க்கார் ராஜாங்க பாஷையாக அங்கீகரிக்க மாட்டார்கள்



திரு வி. குமாரஸ்வாமி

என்ற பீதி இலங்கைத் தமிழர்களிடையே உண்டாகியிருக்கிறது. ஏற்கனவே, தர்ம நியாயமான பிரஜா உரிமை பெற முடியாமல் அல்லல்பட்டு வரும் அவர்களுக்கு, மொழி விஷயமாக இலங்கை சர்க்காரின் போக்கு மேலும் கலக்கத்தைக் கொடுத்திருக்கிறது.

அதன் காரணமாக இலங்கை மந்திரிகளில் ஒருவரான ஸ்ரீ வி. குமாரசுவாமி தமது பதவியை ராஜினாமா செய்துள்ளார். மேலும் இரண்டொரு தமிழ் மந்திரிகள் ராஜினாமாச் செய்யலாமென்றும் செய்திகள் கூறுகின்றன. இலங்கை சர்க்கார் தங்களுடைய தற்போதையப் போக்கை மாற்றிக் கொள்ளாவிடில், சர்க்கார் கட்சியில் உள்ள சகல தமிழ் அங்கத்தினர்களும் ராஜினாமா செய்யத் திட்டமிட்டிருக்கிறார்கள். பாஷைப் பிரச்னை இலங்கை வாழ் தமிழ் மக்களிடையே எவ்வளவு மனக் கொதிப்பை உண்டுபண்ணியிருக்கிறது என்பதை, ஸ்ரீ குமாரசுவாமி பிரதமர் சர் ஜான் கொத்தலாவலைக்கு எழுதியுள்ள கடிதத்திலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

தீவிர சிங்கள வாதிகளின் துவேஷப் பிரசாரத்தினால் ஏற்பட்டுள்ள அரசியல் சூழ்நிலையில் தாம் மந்திரி சபையில் தொடர்ந்திருப்பது அசாத்தியமென்றும், தமிழ் மொழிக்கு இழைக்கப்பட்டு வரும் அவமதிப்பைச் சுயமரியாதையுள்ள எந்தத் தமிழரும் சகித்துக் கொண்டிருக்க முடியாதென்றும் ஸ்ரீ குமாரசுவாமி தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். எனவே, இனியாவது இலங்கை சர்க்கார் தங்கள் தவற்றை உணர்ந்து, இலங்கைத் தமிழர்களுக்கும் தெய்விகத் தமிழ் மொழிக்கும் நீதி வழங்க முன் வருவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

அட்டைப்பட விளக்கம்

பாதகமலம்

"பாதங்கள் இவையென்னில்
படிவங்கள் எப்படியோ!"

என்றார் கம்பர். இறைவனுடைய திருவடி இந்த உலகெங்கும் நிறைந்திருக்கிறது. வேதங்கள் எல்லாம் அந்தப் பாதத்தைத் தேடுகின்றன. வானும், கடலும், பூமியும் வியாபித்து நிற்கக்கூடிய பாதத்தின் இயல்பு இப்படியென்றால், அந்தப் பாதத்துக்கு உரிய மூர்த்தியின் எல்லையற்ற தன்மையை எப்படி வர்ணிப்பது!

மனமும் வாக்கும் கடந்த அந்தத் திருவடி, பக்திக்கு வசமாகி விடுகிறது. இதையே இந்த இதழின் அட்டைப் படமாகச் சித்திரிக்கிறார் ஓவியர் ராஜம்.

என் அபிப்பிராயம்

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

மொழிப் பிரச்னையின் குழப்பம் பெருகி வருகிறது. முடிவு செய்யும் அதிகாரம் வெகு தூரத்தில் இருக்கிறவர்களிடத்தில் போய்ச் சேர்ந்திருக்கிறது. தவறு நடந்து விட்டால் கஷ்டப்படுகிறவர்கள் நாம். 'பிழை செய்தாய் விட்டது, இனித் திருத்த முடியாது, பொறுத்துத்தான் ஆக வேண்டும்' என்று ஒரு அர்த்தமற்ற சமாதானம் வழங்கி வருகிறது. ஆனபடியால் முன் ஜாக்கிரதை அவசியமாகிறது. பின்னால் வருத்தப்படுவதில் பயனில்லை.

மொழிப் பிரச்னைக் குழுவினர் சென்னைக்கு வந்து பலருடைய அபிப்பிராயங்களைக் கேட்டு விட்டுத் திரும்பினார்கள். போகும்போது குழுவின் தலைவர் ஸ்ரீ கேர் அவர்கள் சொன்னார்: "தென்னாட்டில் நான் எண்ணிய அளவு பொது பாஷையைக் குறித்து ஜனங்களுக்கு ஆட்சேபணை இல்லை. படிக்கும் குழந்தைகள் எல்லாம் ஹிந்தி மொழியைப் படித்து வருகிறார்கள்."

இவ்வாறு திருப்தி அடைந்தது அவர் மட்டுமல்ல; குழுவைச் சேர்ந்த பிறரும் இதே அபிப்பிராயத்துடன் திரும்பியதாகத் தெரிய வருகிறது.

உண்மைக்கு மாறாக அபிப்பிராயம் கொண்டால் பிழை செய்வதற்கு இடம் ஏற்படுகிறது. ஏதோ வீண் பிடிவாதம் சிலர் செய்தால் அதைப் பற்றிக் கவலையில்லை. அவர்களுடைய எதிர்ப்பு வேறு. அது எதாயினும், ஹிந்தி பாஷையை நிர்வாக பாஷையாகச் செய்வதில் பல கஷ்டங்கள் உண்டாகும் என்பதில் சந்தேகமில்லை. இது வெறும் அரசியல் பிடிவாதமல்ல. வீட்டில் பேசாததும், பள்ளிக்கூடத்தில் தகுந்த முறையில் பயிற்சி பெறாததுமான ஒரு மொழியை இது வரையில் ஆங்கிலம் அடைந்திருக்கும் ஸ்தானத்தில் வைத்து விடுவது அடாத செயலாகும். துன்பத்துக்குக் காரணமாகும்.

ஒரு வீடு கட்ட வேண்டுமானால், முறைப்படி கடைகால் வெட்டி, அஸ்திவாரம் போட்டுத்தான் கட்டடம் எழுப்ப வேண்டும். கடைகால் வெட்டுவதற்குஆட்சேபணை செய்து விட்டு, கட்டடம் கட்டுங்கள் என்று அனுமதி கொடுப்பது மதியீனமாகும்.

'ஹிந்திப் படிப்புக்குக் கட்டாயமே வேண்டியதில்லை. பிள்ளைகள் தாமாகவே இஷ்டத்தோடு படிக்கிறார்கள்' என்று சில பெரியோர்கள் சாட்சியம் கூறி விட்டார்கள். அதனால் மொழிக் கமிஷன் அங்கத்தினர்கள் ஒரு பெருந் தவறான அபிப்பிராயத்துடன் திரும்பிச் சென்றிருக்கிறார்கள் என்று கவலைப்படுகிறேன். ஹிந்தி மொழியறிவு பயன்படக் கூடிய அளவுக்குச் சிறிதும் தென்னாட்டில் இல்லை என்பதை அறிந்த எனக்கு இது பெரும் கவலை தருகிறது. மற்றப் பள்ளிக்கூடங்களில் இடம் பெறாத சில ஆண்களும் பெண்களும் ஏதாவது வேலை கிடைக்கும் என்று ஆசைப்பட்டும், ஏதாவது ஒரு பரீட்சை தேற வேண்டும் என்கிற சபலத்துடனும் ஹிந்திப் பரீட்சைகள் படித்து எழுதி ஸர்டிபிகேட்டுகள் பெற்று விடுகிறார்கள் என்பது உண்மை. அந்தப் படிப்பு நிர்வாகத்துக்கு எட்டாது. தற்போது உத்தியோகம் பார்க்கிறவர்களுக்கு எந்த அளவில் ஆங்கிலப் பயிற்சி இருக்கிறது என்பதைக் கவனித்துப் பார்த்தால், சென்னையில் நடைபெறும் இந்த ஹிந்திப் பரீட்சைகளின் உண்மை மதிப்பு விளங்கும். தென்னாட்டில் ஹிந்தி கட்டாயமின்றி சுயமாகவே பரவிவிட்டது என்று எண்ணுவது வெறும் பிரமையாகும். பிரமை மட்டிலும் என்றால் கவலையில்லை. பிரமையிலிருந்து கஷ்டங்கள் விளைந்து விடுமே என்பதைப் பற்றித்தான் எனக்குக் கவலை.

எப்படியாவது தென்னாட்டாரை ஹிந்தி படிக்கச் செய்ய வேண்டும் என்பது வடநாட்டாரின் நல்லாசை. நல்லெண்ணத்தில் எழுந்த இந்த ஆசையில் குற்றமில்லை. எப்படி இவர்களை ஹிந்தி படிக்கச் செய்வது என்பது கேள்வி. குழந்தைகளைக் கட்டாயப் படுத்துவதற்கு எதிர்ப்பு இயக்கம் இருக்கிறது என்று சொல்லக் கேட்டு, அந்தச் சன்னை என்னத்திற்கு என்று, 'கட்டாயமின்றியே படிக்கிறார்கள், அதுவே போதும்; கொஞ்சம் உத்தியோக ஆசை காட்டினால் போதும். படித்து விடுவார்கள்' என்னும் தவறான எண்ணத்தைச் சாட்சியம் சொன்னவர்கள் உண்டாக்கி விட்டார்கள்.

ஒருவனை ஒரு காரியத்திற்குத் தூண்ட வேண்டுமானால் கட்டாயப்படுத்துவது ஒரு

முறை, ஆசை காட்டித் தூண்டுவது மற்றொரு முறை. இரண்டாவதாகச் சொல்லப்பட்ட இந்த ஆசை காட்டும் முறையைக் கையாளுவது எளிது என்று எண்ணி, 'இத்தனை ஆண்டுகளுக்குள், இந்தத் தேதிக்குள் ஹிந்தி மொழியானது "பரஸ்பர ராஜ்ய அரசியல் மொழி" யாகும். ஆகையினால் உத்தியோகங்களுக்கு ஹிந்திப் பயிற்சி மிகவும் பயன்படும் என்று விதித்து விட்டால் பிரச்னை தீர்ந்து போகும்' என்று கமிஷன் அங்கத்தினர்கள் சிபாரிசு செய்யும்படியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. சரியான ஹிந்திப் பயிற்சி இல்லாத மக்களிடையே இம்மாதிரியான ஒரு திட்டத்தைப் புகுத்திவிட்டால் கஷ்டப்படுவோம். கட்டாயப் படுத்தி எந்த பாஷையையும் தென்னாட்டார் கற்கும்படி செய்யலாம். கற்றுக் கொள்ளும் சக்தி அவர்களுக்கு உண்டு. இதைப் பற்றிச் சந்தேகமில்லை. ஆனால் அவரவர்கள் விருப்பம் என்று அவரவருக்கு விட்டுவிட்டால் சிலர்தான் கற்பார்கள். அவர்களுக்குத்தான் சௌகரியங்கள் ஏற்படும். மற்றவர்கள் பிறகு தாபம் அடைவார்கள். ஏன், காலம் கடந்து போன பின் கோபமும் அடைவார்கள். ஆங்கில மொழிப் பயிற்சியின் சரிதம் இதுவேதான். அனுபவித்த அனுபவங்களிலிருந்து படிப்பினை அடைய வேண்டும். அனைவரும் சம அளவில் எந்தப் பயிற்சி அடைய வேண்டுமானாலும் கட்டாய முறை அவசியம். அதை விட்டு விட்டு வேறு சந்தேக முறைகளைக் கையாண்டால் தற்காலிக சௌகரியமே ஒழிய, முடிவில் சிக்கலும் துயரமுமே விளையும். பள்ளிக்கூடங்களில் கட்டாய ஹிந்திப் படிப்பு வேண்டாம் என்றால், ஹிந்தி வேண்டாம் என்றுதான் சொல்ல வேண்டும்.


அரசியல் மொழி, அதாவது ராஜ்யாந்தர மொழி எதுவாக இருக்க வேண்டும் என்று யோசிக்கும்போது, ஆங்கிலத்தை ஏன் நாம் இப்போது நீக்க வேண்டும்? ஆங்கிலத்தைப் பரஸ்பர ராஜ்ய மொழியாக வைத்துக் கொள்வதால் ஏதொரு அவமானமும் இல்லை.

அமெரிக்கப் பெரு நாட்டில், ஆங்கில ஆட்சிக்கு உட்படாத அந்தப் பெரும் நாட்டில், பல பாஷைகள் பேசும் மக்கள் குடியேறிய அந்த நாட்டில், ஆங்கிலம் கட்டாய அரசியல் மொழியாகிப் பயின்று வருவது அனைவரும் அறிந்த விஷயம். ஐரோப்பாவில் நார்வே, ஸ்வீடன் முதலிய முன்னணி நாடுகளில் ஆங்கிலம் பள்ளிக்கூடங்களில் சிறுவர்களுக்குக் கட்டாயப் படிப்பு. நாமும் இந்நாட்டில் இருநூறு ஆண்டுகள் அந்த மொழியைப் படித்தும் நல்ல முறையில் கையாண்டும், விட்டுவிட மனமில்லாத அளவுக்கு அதில் பற்றுக் கொண்டு வந்திருக்கிறோம். யாருடைய கட்டாயத்தின் பேரில் நாம் இதை விட்டு விடவேண்டும்? ஆங்கிலேயர்கள் தங்களுடைய பொருளைத் திருப்பிக் கொடுக்கச் சொல்லவில்லை. மற்றத் துறைகளில் நாம் ஆங்கில நடை முறைகளை வைத்துக் கொண்டே வருகிறோம். அவற்றில் மானக் குறைவு இல்லையானால், மொழியைப் பற்றி நாம் கூச்சம் அடைய வேண்டிய அவசியம் கொஞ்சமும் இல்லை. கணக்கெடுத்துப் பார்த்தால் சின்னஞ் சிறு உத்தியோகங்களுக்குத் தகுந்த கல்வி அடைந்த எல்லாரும், இந்தியா முழுவதிலும் எந்தப் பிரதேசத்திலும் ஆங்கிலம் படித்தே இருக்கிறார்கள். நன்றாக வழங்கியும் வருகிறார்கள். படித்த இனத்தவர்களில் ஆங்கிலந்தான் பொது பாஷை. கையிலிருக்கும் கெட்டிப் பொருளை ஏன் எறிந்து விட்டுப் புதுப் பொருளைத் தேடி அலைய வேண்டும்?

அதிகார வர்க்கத்துக்கும் பொது மக்களுக்கும் இடையில் இரு வர்க்கத்தினருக்கும் தெரிந்த மொழி ஒன்று அரசியல் மொழியாக இருப்பது நன்மைதான். ஆனால் ஹிந்தியை அரசியல் மொழியாக்குவதில் இந்த நன்மை தென்னாட்டில் உண்டாகாது. ஹிந்தியே தாய் பாஷையாக இருக்கும் பிரதேசங்களில் இந்த நன்மை உண்டாகும். எனவே, பாரபட்சத்துக்கு இடமாகும். ராஜ்ய உள்-நிர்வாகத்தைப் பொறுத்த மட்டில் அந்தந்தப் பிரதேச பாஷையைப் பயன் படுத்துவதே முறை. அந்த அளவில் அதிகார வர்க்கத்தாரின் அரசியல் மொழியும், மக்கள் பேசும் மொழியும் எல்லாப் பிரதேசங்களிலுமே ஒன்றாகும். ஒரு ராஜ்யத்துக்கும் மத்திய அரசாங்கத்துக்கும் நடைபெறும் எழுத்துக்கள் ஆங்கிலத்தில் இருப்பதனால் தென் மக்களுக்கு அநுகூலமே ஒழிய, இடைஞ்சல் இராது. ஹிந்தியில் நடவடிக்கை நடத்த வேண்டுமானால் தென் ராஜ்யங்களிலும் ஹிந்தியை நன்றாக அறிந்தவர்களை வைத்துக் கொண்டு தான் வேலை செய்ய வேண்டியதாகும். வெளிப் பிரதேசங்களிலிருந்து உத்தியோகஸ்தர்களைத் தருவித்துக்கொள்ள வேண்டியதும் ஆகும். அதில் எவ்வளவு அசௌகரியங்களும் பிழைகளும் ஏற்படும் என்பது சொல்லாமலே விளங்கும். 'அந்தர ராஜ்ய நடவடிக்கைகள், ஆங்கிலத்திலேயே இனியும் நடைபெற்று வர வேண்டும்' என்று கோருவதே தென்னாட்டினரின் நன்மைக்கு உகந்ததாகும்.

உலக விவகாரங்களிலும், வல்லரசுகள் மகாநாடுகளிலும், ஆங்கிலத்தைத் தான் நாம் கையாண்டு வந்திருக்கிறோம். அதை

பிடி - வாதம்!



யுத்தத்தின் முனை வரைக்கும் போய், யுத்தக் குழியில் விழாமலிருப்பதுதான் அமெரிக்காவின் ராஜதந்திரக் கொள்கை என்றார் டல்லெஸ்!

மாற்றுவது இயலாது. மாற்றுவது நன்மையும் ஆகாது. அதற்கு என்று ஆங்கிலம் படித்த தனி அதிகார வர்க்கத்தினரை வைத்துக் கொண்டு இயங்க முடியுமா? எந்தக் காரணத்தைக் கொண்டு பார்த்தாலும் இந்தியாவுக்கு ஆங்கிலமே அரசியற் பொது மொழியாகத் தொடர்ந்து வழங்குவது அவசியமாகும். ஹிந்தி பிரதேசங்களில் ஹிந்தியே பிரதேச அரசியல் மொழியாக இருக்க வேண்டும். அப்படியே அந்த அந்தப் பிரதேசங்களில் அந்த அந்தப் பிரதேச மொழிகளே ராஜ்ய நிர்வாக மொழியாக இருக்க வேண்டும். ஆனால் ராஜ்யங்களுக்கிடையில் நடைபெற வேண்டும் விஷயங்களுக்கு ஆங்கிலந்தான் அரசியல் மொழியாகத் தொடர்ந்து வழங்க வேண்டும். எல்லாக் கொள்கையினரும் ஒன்று சேர்ந்து இந்த முடிவுக்கு வந்து வழ வழுப்பின்றி உறுதியாக ஏகோபித்து நின்றால், ஆபத்தைத் தவிர்க்க முடியும். காலம் தாண்டி விட்டது என்று, பேசுவதற்குப் பயந்து கஷ்டத்திற்கு உள்ளாக வேண்டியதில்லை.

அகில இந்திய அரசாங்கத்தார் ஏற்கனவே ஒரு முடிவுக்கு வந்து விட்டதாய்த் தவறாகச் சிலர் எண்ணுகிறார்கள். அப்படி எண்ணி அதற்கு நாம் தடை செய்யலாமா என்று பயப்படுகிறார்கள். இது எந்தவிதத்திலும் தவறு. தேசத்தின் நன்மையைக் கருதி முக்கியமான விஷயங்களில் நம்முடைய உண்மை உணர்ச்சியை மறைத்தல் பெருந் தவறாகும். அகில இந்திய சர்க்கார் முடிவு செய்து விட்டிருந்தால், இந்தப் பிரச்னையைப் பற்றி ஒரு கமிஷன் நியமிக்கவேண்டிய அவசியமே இல்லை. கமிஷனை நியமித்து விசாரிக்கும்படி அனுப்பியிருப்பதே சான்றாகும், அவர்கள் இன்னும் எந்த முடிவுக்கும் வரவில்லை என்பதற்கு. அவர்கள் ஒரு முடிவுக்கு வருவதற்குமுன் நம்முடைய கருத்துக்களைத் தெளிவாகத் தெரியப்படுத்த வேண்டியது தேசபக்தர்களுடைய கடமையாகும். தேசத்தின் வருங்கால சமாதானத்துக்கு அவசியமாகும். இந்தப் பிரச்னை கட்சிப் பிரச்னையல்ல. பாரபட்சமின்றி சாவதானமாக ஆராய்ந்து முடிவு செய்ய வேண்டிய பொதுப் பிரச்னை.

என்ன சேதி?

ஸி. வி. ராமன் சாட்சியம்

அரசாங்க பாஷைக் கமிஷன் இப்பொழுது பங்களூரில், பல பிரபலஸ்தர்களின் அபிப்பிராயத்தைக் கேட்டு வருகிறது. பங்களூர்ப் பிரமுகர்களில் அகில உலக விஞ்ஞான மேதையும், பாரத ரத்னம் என்ற சிறப்பைப் பெற்றவருமான டாக்டர் ஸி. வி. ராமனின் அபிப்பிராயம் குறளைப் போல் ரத்தினச் சுருக்கமாயும் ஆணித்தரமாகவும் இருக்கிறது.

"அரசாங்க நிர்வாகத்தில் தற்சமயம் உபயோகித்து வரும் ஆங்கிலத்தை நீக்கிவிட்டு ஹிந்தியை உபயோகிக்க வேண்டும் என்ற யோசனை முற்றும் தவறானது என்பது எனது தீர்ந்த முடிவு.

"இம் மாற்றத்தினால் ஒரு பயனும் விளையப் போவதில்லை என்பது மட்டுமன்றி, ஏற்கனவேயுள்ள மொழிச் சண்டைகள் தீவிரப் படுவதோடு பல துறைகளில் முன்னேற வேண்டிய பாரதத்தின் முன்னேற்றத்தில் பெரும் தடையாக விளையும் என்று எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன்.

"ஐயா, இந்த இரண்டு வரிகள்தான் சத்தியம். முழுமையான சத்தியம். சத்தியத்தைத் தவிர்த்து வேறில்லை!" என்றார்.

காந்தி நினைவு மண்டபம்

பேராசிரியர் கல்கி அவர்கள் காந்தி மகானின் ஞாபகார்த்தம் சென்னையில் எழுப்ப வேண்டும் என்பதற்கு எடுத்துக் கொண்ட முயற்சியும் அரும்பணியும் யாவரும் அறிந்ததே. காந்தி நினைவு மண்டபத்தில் தமிழர் ஒவ்வொருவரின் காணிக்கை ஒரு செங்கல்லின் விலை யளவுக்காவது இருக்க வேண்டும் என்று சென்னையின் மூலை முடுக்குகளில் எல்லாம் கூட்டம் போட்டு நிதி திரட்டினார். பேராசிரியரின் இப் பணியில் ராஜாஜியின் ஆசியும் கிடைக்கவே, கவர்னர் மாளிகையில் மண்டபத்துக்கு அஸ்திவாரம் போடப் பட்டது. இப்பொழுது அந்தக் கட்டடம் முழுவுருவாகி விட்டது. அடுத்த வாரம் 27ம் தேதி நமது அருமைத் தலைவர் ராஜாஜி அந்த மணி மண்டபத்தைத் திறந்து வைக்கப் போகிறார்கள். தமிழ்ப் பெருமக்கள் காந்தி நினைவு மண்டபத் திறப்புவிழாவில் பெருவாரியாகக் கலந்து கொண்டு சிறப்பிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம்!

பார்மோசா சதி

பல மாதங்களுக்கு முன் நடந்த பாண்டுங் மகாநாட்டுக்குச் சீன அதிகாரிகளையும் இந்திய அதிகாரிகளையும் ஏற்றிச் சென்ற 'காஷ்மீர் பிரின்ஸெஸ்' என்ற விமானம் நடுக்கடலில் விழுந்து நொறுங்கியது எல்லோரும் அறிந்த விஷயம். அதன் சம்பந்தமாக ஏற்கனவே இந்தோனீசியாவில் நடந்த கமிட்டி விசாரணையில், விபத்துக்கு பார்மோசாவில் உள்ள சியாங்கை ஷேக் குழுவினர் செய்த சதிதான் காரணம் என்று ருஜுவாயிற்று. அவ்விஷயமாக மீண்டும் பிரிட்டிஷ் சர்க்கார் நடத்திய விசாரணையில், சியாங்கை ஷேக்கின் சதிதான் விபத்துக்குக் காரணம் என்பது இப்போது தகுந்த ஆதாரங்களுடன் உறுதியாகி யிருக்கிறது. 'காஷ்மீர் பிரின்ஸெஸ்' விமானத்துக்கு வெடிகுண்டு வைத்தவன் பார்மோஸாவுக்கு ஓடி, சியாங்கை ஷேக் குழுவினரின் ஆதரவில் இருந்து வருகிறான் என்பதும் நிரூபணம் ஆகியிருக்கிறது. அவனைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் ஒப்புவிக்க சியாங்கை ஷேக் மறுத்து விட்டார். இத்தகைய சதிகாரக் கூட்டத்தினர் தாங்கள்தான் சீனாவின் உண்மையான சர்க்கார் என்று கூறிக்கொள்வது விந்தையல்லவா? அவர்களுடைய 'பிரதிநிதி' உலக மகாசபையான ஐக்கிய நாடுகள் சபையில் வீற்றிருப்பதும், அதற்கு அமெரிக்க சர்க்கார் ஆதரவளித்து வருவதும் அதைவிட விந்தையாகும். இந்த விபரீதத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க அமெரிக்கா தாமதமின்றி வந்தால்தான்; அமெரிக்காவின் கௌரவத்துக்கும் ஐ. நா. சபையின் செல்வாக்குக்கும் இழுக்கு ஏற்படாதிருக்கும்.

ஆவடியில் ஒலிபரப்பு

இம்மாதம் 11-ம் தேதி மத்திய சர்க்கார் ஒலிபரப்பு இலாக்கா மந்திரி டாக்டர் பி. வி. கேஸ்கர், சுமார் ஒன்பது லட்ச ரூபாயில் நிர்மாணிக்கப்பட்ட 20 கிலோவாட் புது ஒலிபரப்புக் கருவியைச் சென்னை ஆவடியில் திறந்து வைத்தார். இவ்வைபவத்தில் சென்னை கவர்னரும் நமது முதன் மந்திரியும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.


குழந்தை இலக்கியத் திருவிழா

குழந்தைகளுடைய மோகனப் புன்னகையில் சொக்கி மகிழாதவர்கள் யார்! அவர்களுடைய யாழிலும் இனிய மழலை மொழியைக் கேட்டு மயங்காதவர் யார்! குழந்தைகள்தானே உண்மையில் ஒரு நாட்டின் செல்வங்கள். அவர்கள் வளர்ச்சியில் பாடுபடுவது தானே உண்மையான தேச பக்தி. அதற்கு அடிப்படையாகக் குழந்தைகள் இலக்கியம் வளருவதற்கு வழி செய்ய வேண்டும் அல்லவா!

இந்த உத்தமத் திருப் பணியைக் குழந்தை எழுத்தாளர் சங்கம் சிறந்த முறையில் சென்ற ஐந்து ஆண்டுகளாகச் செய்து வருகிறது. இந்த ஆண்டு ஜனவரி 13, 14, 15 தேதிகளில் குழந்தை இலக்கியத் திருவிழாவை நடத்திக் குழந்தை இலக்கியத்தில் மக்களுக்கு ஆவல் ஏற்படும்படி செய்திருக்கிறார்கள்.

ஆறுவது குழந்தை இலக்கியத் திருவிழாவுக்குத் தலைவர் ராஜாஜி அவர்கள் தலைமை தாங்கிச் சிறப்பித்தார்கள். திரு ம. பொ. சிவஞானம் அவர்கள் குழந்தை இலக்கியத்தைப் பற்றிச் சொற்பொழிவாற்றினார்.

இந்த விழாவை ஒட்டி அகில உலகிலும் உள்ள குழந்தை இலக்கியப் புத்தகங்கள் அடங்கிய கண்காட்சி ஒன்றையும் நடத்தினார்கள். மூன்று தினங்களும் ஆயிரக்கணக்கான குழந்தைகள் கண்காட்சியில் உற்சாகமாகக் கலந்து கொண்டு புத்தகங்களைப் படித்து மகிழ்ந்தார்கள். "படித்தது போதும்!" "படித்தது போதும்!" என்று குழந்தைகளிடம் இருந்து புத்தகத்தைத் திரும்பிப் பெறுவதற்குள் நிர்வாகிகளுக்குப் போதும்போதும் என்றுவிட்டது. அத்தனை தூரம் குழந்தைகளைக் கவர்ந்து விட்டன அந்தப் புத்தகங்கள்!



1. ராஜாஜி அவர்கள் குழந்தை இலக்கியப் புத்தகக் கண்காட்சியில் உள்ள புத்தகங்களைக் கூர்ந்து பார்க்கிறார். 2. குழந்தை எழுத்தாளர் சங்கத் தலைவர் திரு அழ. வள்ளியப்பா ராஜாஜி அவர்களை மேடைக்கு அழைத்துச் செல்கிறார். 3. திரு ம. பொ. சி. அவர்கள் சொற்பொழிவாற்றுகிறார். 4. குழந்தை எழுத்தாளர் சங்கம் நடத்திய குழந்தை நாடகப் போட்டியில் ராஜாஜியின் பொற்கரத்தால் பரிசு பெறும் பாக்கியம் பெற்ற திரு பூவண்ணன். 5. விழாவில் உற்சாகமாகக் கலந்து கொண்டு சிறப்பித்த குழந்தைகளில் ஒரு பகுதி.

இப் புது ஒலிபரப்புக் கருவியின் விசேஷத் தன்மை என்ன? ஒரு காகிதத்தில் செய்தியை எழுதி எறிந்தால், அக்காகிதம் எறியும் திசையில் கொஞ்ச தூரம்தான் போகும். ஆனால் கல்லைக் கட்டி எறிந்தால் அதிக தூரம் போகும். அதேபோல், இப்பொழுது ரேடியோ நிலையத்திலிருந்து ஒலி பரப்பப்படும் ஒலிபரப்பு அலைகளில் அதிக சக்தி ஏற்றி அதிக தூரம் வரை நன்றாகக் கேட்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். விரைவில் 100 கிலோவாட் ஒலிபரப்புக் கருவி திறக்கப்பட விருக்கிறது. அது இயங்க ஆரம்பித்ததானால் சென்னை நிகழ்ச்சிகள், பர்மா, மலேயா, இந்தோனேசியா முதலிய

கிழக்குலக நாடுகளில் உள்ள தமிழர்கள் நன்கு கேட்கலாம். இப்படி முதல் ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட இந்த இயந்திர சாதனம் ஒலிபரப்புத் துறையில் தமிழகத்துக்குக் கிடைத்த பெரும் வசதியாகும்.

"சென்னை ரேடியோ நிலையம், இந்தியாவிலுள்ள நிலையங்களில் மிக முக்கியமானதொன்றாகும். சென்னை தென்னாட்டு சங்கீதத்தின் உறைவிடம். அதனால் அது அகில இந்திய முக்கியத்துவம் பெறுகிறது. பலவேறு கலைகளும், பல தேசமக்களும் கூடும் பெரிய நகரம் சென்னை. இங்கு இப்புதிய சக்தி வாய்ந்த ஒலிபரப்புக் கருவி அமைப்பது மிகப் பொருத்தமானது" என்று கூறினார் டாக்டர் கேஸ்கர். அத்துடன் அடுத்த ஐந்தாண்டு திட்ட காலத்துக்குள் டெலிவிஷனும் வரக்கூடும் என்று கூறியிருக்கிறார். அந்த நன்னாளையும் தமிழ் மக்கள் ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள்!

தபால் வில்லைகள்

இப்பொழுது பழக்கத்திலுள்ள தபால் தலைகளில் வடநாட்டுக் கவிஞர்களின் திருவுருவங்களே அச்சிடப் பட்டிருக்கின்றன; தமிழ் நாட்டுக் கவிஞர்களின் படம் ஒன்று கூட இல்லை என்ற குறை நீண்ட நாளாக இருக்கிறது. சமீபத்தில் சென்னை ராஜ்யத்தில் சுற்றுப்பிரயாணம் செய்த மத்திய சர்க்கார் உதவி மந்திரி திரு ராஜ்பகதூர் மேற்கண்ட விஷயம் பற்றி, "தமிழகத்துக் கவிஞர்களை வேண்டுமென்று ஒதுக்கவில்லை; ஏதோ தவறு காரணமாக ஒதுக்கப்பட்டு விட்டார்கள்" என்று கூறினார். அத்துடன் பாரதத்தின் சுதந்திரப் போராட்டம் தொடங்கிய 1857-ம் ஆண்டின், நூற்றாண்டு விழாவை 1957ல் கொண்டாடப் போவதாக அறிவித்தார். அச்சமயம், 1857-ம் ஆண்டில் வீரப் போர் புரிந்த வீரர்களின் திருவுருவங்களைத் தபால் வில்லைகளில் அச்சிட்டு வழங்கப் போவதாகக் கூறினார். அந்தச் சுதந்திரப் போராட்டத்தின்போது பங்கு எடுத்துக் கொண்ட தமிழகத்தின் வீரர்களைச் சொல்லுங்கள், நாங்கள் சேர்க்கிறோம்!" என்றார்.

மத்திய சர்க்காருக்கு எடுத்துச் சொல்ல வேண்டிய பொறுப்பிலுள்ள அதிகாரிகள் தமிழகத்தின் வீரத்தைப் புறக்கணிக்காதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். 1857ம் ஆண்டுக்கு முன்பே ஆங்கிலேயர்கள் இந்தியாவுக்கு வந்து ஆளத் தொடங்கி விட்டார்கள். அவர்கள் ஆதிக்கத்தை வீர பாண்டிய கட்டபொம்மன், ஊமைத்துரை, மருது பாண்டிய சகோதரர்கள் முதலியோர் எதிர்த்து வீரப் போர் புரிந்து, தூக்கில்

தொங்கியும், யுத்த களத்தில் மடிந்தும் தங்கள் தாய்நாட்டுப் பற்றைக் காண்பித்துக் கொண்டிருக்கிறார்கள். 1857-ம் ஆண்டு வசிக்காதவர்கள், அதற்கு முன்பே வாழ்ந்து தேச பக்தியைக் காண்பித்தவர்கள் என்பதற்காக 1957-ம் ஆண்டில் பாரத சர்க்கார் அலட்சியம் செய்யாத வகையில் நமது அதிகாரிகள் விழிப்புடன் இருக்க வேண்டும்!

ஜே. ஆர். ரங்கராஜு

துப்பறியும் பல நவீனங்கள் எழுதித் தமிழ்நாட்டு மக்களை ஒரு காலத்தில் நாவலில் பித்துக் கொண்டிருக்கும்படி செய்த ஆசிரியர் ஜே. ஆர். ரங்கராஜு. அவர் கதைகளில் தோன்றித் துப்புத் துலக்கிய கோவிந்தனின் பெயர் மக்களின் அன்றாட வாழ்வில் வழங்கும் பெயராகவே அமைந்துவிட்டது! "மோசம் போனேன் கோபாலா!" என்ற மொழிகள் இருபது ஆண்டுகளுக்கு முன்பு கதை படிக்கும் ஆண் பெண் அனைவருடைய நாவிலும் தவழ்ந்தது. அவர்கள் உள்ளம் கனிவுறச் செய்தது. இவை தவிர கதையுடன் சமூக சீர்திருத்தக் கொள்கைகளையும் சேர்த்து எழுதும் திறன் படைத்த ஆசிரியர் ரங்கராஜு இம்மாதம் 12உ காலமாகி விட்டார் என்ற செய்தி கேட்டு வருந்துகிறோம்.

புதுவை மந்திரியின் மறைவு

புதுவை ராஜ்யத்தின் முதல் மந்திரியும் காரைக்கால் மேயருமான ஸ்ரீ ஆர். எம். ஏ. எஸ். பக்கிரிசாமி பிள்ளை சென்ற வாரம் திடீரென்று காலமான செய்தி கேட்டு வருந்துகிறோம். பிரஞ்சு இந்தியப் பிரதேசங்களின் விடுதலைக்காகச் சலியாது உழைத்து, அரும் பெரும் தியாகங்கள் செய்த ஸ்ரீ பக்கிரிசாமி பிள்ளை, அப்பிரதேசங்கள் விடுதலை பெற்ற சில மாதங்களுக்குள் மறையும்படி நேர்ந்தது, முன்னேற்ற மடைந்து வரும் புதுவை ராஜ்யத்துக்குப் பெரும் நஷ்டமாகும். ஸ்ரீ பிள்ளை சுமார் இருபது வருஷ காலமாகத் தேசிய இயக்கத்தில் ஈடுபட்டு, மக்கள் நலனுக்காகப் பாடுபட்டவர். பிரஞ்சு இந்தியாவின் விடுதலைக்காகப் பாடுபட்டு வெற்றி பெற்ற அவர், சுதந்திரம் பெற்ற புதுவை ராஜ்யத்தின் நிர்வாகப் பொறுப்பையும் திறம்பட வகித்து வந்தார். சென்ற வருஷம் காரைக்காலில் புயலால் கஷ்ட நஷ்டமடைந்த மக்களுக்கு அவர் செய்த சேவை, அவர் தமது வாழ்க்கையில் புரிந்த தொண்டுகளுக்குச் சிகரமாக அமைந்தது. அப்படிப்பட்ட சிறந்த தொண்டரின் மறைவு குறித்துப் புதுவை மக்களுக்கும், அவருடைய குடும்பத்தினருக்கும் நமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

அவல நிலை நீங்குமா?

ரஜனி

கொழும்பு, ஜன. 14உ

இலங்கை ஜனநாயக காங்கிரஸில் ஏற்பட்ட பிளவை நீக்கித் தலைவர்களுக்கிடையில் ஒற்றுமையை நிலை நாட்ட எவ்வளவோ முயற்சிகள் செய்யப்பட்டும் அவை பலிக்காமற் போய்விட்டதோடு சமரசத்துக்கு இனி வழியில்லாமற் செய்யும் சில காரியங்களும் இவ்வாரம் நடந்திருக்கின்றன. ஜனநாயக காங்கிரஸ் என்பது அரசியல் பிரச்னை மட்டுமே கவனிக்கும் ஸ்தாபனம். தொழில் தகராறுகள் போன்ற பிரச்னைகளைக் கவனிக்க இ. தொ. கா. என்று பொதுவாக அழைக்கப்படும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என்ற பிரத்தியேகமான ஒரு ஸ்தாபனம் ஜனநாயக காங்கிரஸில் உண்டு. இவ்விரு ஸ்தாபனங்களுக்கும் காரியதரிசிகள், நிர்வாகக் கமிட்டிகள் ஆகியவை வெவ்வேறாக இருந்தாலும் தலைவரும் பொக்கிஷதாரும் ஒரே நபராக இருப்பது வழக்கம்.

சென்ற டிஸம்பர் 17ம் தேதி தொண்டமான் கோஷ்டியினர் தலைமைப் பதவியிலிருந்து ஜனாப் அஸீஸை நீக்கி ஸ்ரீ ராஜலிங்கத்தைத் தேர்ந்தெடுத்தவுடன் இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கும் ஸ்ரீ ராஜலிங்கமே தலைவரென்று தொழில் இலாகாவில் பதிவு செய்து விட்டார்கள். இதை ஜனாப் அஸீஸ் தொழில் இலாகாவிடம் கடுமையாக ஆட்சேபித்தார். தொண்டமான் கோஷ்டியார் நடத்திய தேர்தல் சட்டவிரோதமானதென்றும் ஜனநாயக காங்கிரஸ், தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய இரண்டுக்கும் தாமே தலைவரென்றும் ஜனாப் அஸீஸ் பல வக்கீல்களை அழைத்துக் கொண்டு போய்த் தொழில் கமிஷனரிடம் விவாதித்துப் பார்த்தார். ஆனால் அவருடைய வாதத்தை அரசாங்கம் ஏற்கவில்லை. "உங்கள் தகராறை கோர்ட்டுக்குக் கொண்டு போங்கள். கோர்ட்டார் தீர்ப்புக் கூறும் வரையில் ஸ்ரீ ராஜலிங்கத்தையே தொழில் இலாகா அங்கீகரிக்கும்" என்று தொழில் கமிஷனர் பதிலளித்து விட்டார். இந்த நிலைமையில் ஜனாப் அஸீஸ் இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்குப் போட்டியாக ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் என்று ஒரு ஸ்தாபனத்தை ஏற்படுத்தித் தொழில் இலாகாவில் பதிவு செய்திருக்கிறார். இந்த ஸ்தாபனத்தின் பெயரை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் காரியதரிசி ஆட்சேபித்தும் அவருடைய ஆட்சேபணையை அரசாங்கம் ஏற்கவில்லை. ஆகவே இப்பொழுது ஸ்ரீ ராஜலிங்கம் தலைமையில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என்றும் ஜனாப் அஸீஸ் தலைமையில் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் என்றும் இருபோட்டி ஸ்தாபனங்கள் பதிவு செய்யப்பட்டு இயங்கி வருகின்றன. எந்தப் பாபிகள் போட்ட திருஷ்டியோ ஒற்றுமைக்கும் கட்டுப்பாட்டுக்கும் உதாரணமாக விளங்கி வந்த காங்கிரஸ் இரண்டு போட்டி முகாம்களாகப் பிரிந்து போய் விட்டன.

எரியும் வீட்டில் எண்ணெயை ஊற்றுவதைப் போல வெறுக்கத் தகுந்த வேறு சில காரியங்களும் திரை மறைவில் நடக்கின்றன. இரு தரப்பைச் சேர்ந்தவர்களும் லட்சக் கணக்கான துண்டுப் பிரசுரங்களை அச்சிட்டுத் தொழிலாளர்களுக்கிடையில் தோட்டங்கள்தோறும் விநியோகிக்கிறார்கள். இந்தத் துண்டுப் பிரசுரங்களில் என்னதான் சொல்லுவதென்ற வரைமுறையில்லாமல் கண்மூடித்தனமாக ஒருவரையொருவர் குற்றஞ் சாட்டிப் பகையை வளர்க்கிறார்களே தவிர ஒற்றுமைக்கு வழிதேடுவதாகக் காணோம். இந்த அவல நிலைமை இந்தியர்களின் எதிரிகளைக் குதூகலிக்கச் செய்திருக்கிறது.

இதற்கிடையில் பிப்ரவரி மாதம் காங்கிரஸின் விசேஷ மகாநாடு ஒன்றை நடத்த ஜனாப் அஸீஸ் கோஷ்டியினர் ஏற்பாடு செய்து வருகிறார்கள். தொண்டமான் கோஷ்டியினரின் வருடாந்திர மகாநாடு வழக்கம்போல ஏப்ரல் மாதத்தில் நடைபெற விருக்கின்றது.

வட்ட மேஜை

“ஆபாசக் கூத்து!”

அமெரிக்க மார்த்தா கிரஹாம் நடன கோஷ்டியார் சென்னை அண்ணாமலை மன்றத்தில் நடனம் என்ற பெயரால் நடத்திய ஆபாசக் கூத்தை வன்மையாகக் கண்டித்துச் சென்ற இதழில் எழுதியதற்காகத் தமிழ்க் கலைஞர்களின் சார்பில் எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்தகைய நடன கோஷ்டியாருக்குப் பிரபல பத்திரிகைகளும், பெரிய மனிதர்களும், இங்குள்ள கலையுலக மேதைகள் சிலரும் அதிக விளம்பரமும் ஆதரவும் கொடுத்தது மிகவும் வருந்தத் தக்கது.

நடைபெற்ற நிகழ்ச்சிகளை யெல்லாம் தனித்தனியே விரிவாக விமர்சிக்காமல் ‘ஆபாசம்’ என்ற அளவோடு நிறுத்திக் கொண்டு கண்டனம் செய்தது ‘கல்கி’யின் பெருமையை மேலும் உயர்த்துகிறது.

கலையின் பெயரால் இது போன்ற கிரஹாங்கள் இனியேனும் இங்கு இடம் பெறாமல் இருக்க வேண்டும்.

(முகாம்) பம்பாய்
15—1—56

டி. கே. ஷண்முகம்

சென்ற வாரத் தொடர்ச்சி

கல்கி திரு-ரா. கிருஷ்ணமூர்த்தி நினைவுச் சிறுகதைப் போட்டி

மூன்றாவது பரிசுக் கதை



பண்ணையார் மகள்

ஆ. நா. ஐயராமன்

மனைவியையும் குழந்தையையும் கண்ட சந்தோஷத்தில் பரமசிவத்துக்கு எல்லாம் மறந்து விட்டது. வீட்டிலே ஒரே குதூகலம். பரமசிவத்தின் தாயார் பேரனைத் தூக்கிக் கொண்டு "உன் அப்பாவை அப்படியே உரிச்சு வச்சிருக்கு" என்று அடிக்கடி பரமசிவத்திடம் சொல்லி ஆனந்தப்பட்டாள்.

பரமசிவம் களத்து மேட்டுக்குப் போகாமல் தம்முடைய செல்லக் குழந்தையுடனே பாதிப் பொழுதைக் கழித்தார். மனைவி வேறு வீட்டிலேயே இருக்கிறாள். எப்போதாவது பரமசிவம் களத்து மேட்டுக்குச் சென்று கவனித்துக் கொள்வது வழக்கம்.

அன்று பேச்சுவாக்கில் சீதா, "ஆமாம்! நான் ஆறு மாசமாக வீட்டிலே இல்லையே. உங்களுக்கு ரொம்பக் கஷ்டமாக இருந்திருக்குமே! அம்மாவுக்கோ வயசாச்சு. உங்களுக்கு ருசியாகச் சாப்பாடு போட்டாளோ என்னவோ!" என்று பரமசிவத்தைக் கேட்டாள்.

பரமசிவத்துக்குப் பதில் சொல்ல மிகவும் கஷ்டமாக இருந்தது. என்னத்தைச் சொல்லுவதென்று புரியாமல் விழித்தார்.

மனைவியின் கேள்வி அவரைத் திக்கு முக்காட வைத்தது.

கணவனின் மௌனத்தைக் கண்ட சீதா விடாமல், "என்ன பேசாம இருக்கீங்க! சொல்லுங்களேன்!" என்று கேட்டாள்.

"உம்...ம்! அதெல்லாமில்லே. என்னவோ அம்மா சரியாகத்தான் கவனித்துக் கொண்டாள். எனக்கும் வேலை அதிகமாக இருந்ததால் ஒன்றும் பார்க்க முடிய வில்லை" என்று மென்று விழுங்கினார். அத்துடன் பேச்சை நிறுத்தி விட்டு அவர் மனைவி சீதா வேலையைக் கவனிக்கச் சென்று விட்டாள்.

அவள் கேட்ட கேள்வி பரமசிவத்தின் காதுகளிலே ஒலித்துக் கொண்டிருந்தது. மனைவி இல்லாத போது பிரிவாற்றாமையால் வருந்தவா செய்தேன்! எத்தனை நாட்களுக்கு அவளைப் பற்றி நினைத்திருப்பேன்! ஏதோ ஒரு நாளோ இரண்டு நாளோ! அப்புறம் பூவாயி தான் அவர் மனைவி ஸ்தானத்தில் இருப்பது மாதிரியல்லவா நினைத்தார். மறுபடியும் பூவாயியைப் பற்றி அவர் உள்ளம் எண்ணியது.

திரும்பவும் அறுவடைக் காலம் வந்தது. களத்து மேட்டில் வேலையாட்கள் அதிகமாகக் காணப்பட்டனர். பரமசிவம் களத்து மேட்டில் நின்று கொண்டிருந்தார். ஏன் ஒரே திக்கை வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஆமாம். பரமசிவம் பார்த்த திக்கில் அதிசயம் ஒன்றும் நடக்கவில்லை. ஆனால் பூவாயி கையில் ஒரு குழந்தையுடன் வேலை செய்து கொண்டிருந்தாள். அடிக்கடி குழந்தையைக் கவனிப்பதும், வேலையைக் கவனிப்பதுமாக இருந்த பூவாயியைப் பார்த்த பரமசிவத்துக்கு ஒன்றும் புரியவில்லை. குழந்தை யாருடையது! யாருடையதா! என்ன, அதற்குள் மறந்து போய் விட்டாரா!

பூத்துக் குலுங்கும் மரத்தின் பசுமை நிறமும் புஷ்பத்தின் வர்ணங்களும் பார்ப்பவர் மனத்தைக் கவரும். காய்த்துக் கனியாகி இலை உதிர்த்து மறுபடியும் பசுமையுடன் பூக்கள் மலர்கின்றன. ஆனால் முதலில் இருந்த கவர்ச்சி ஏற்படுவதில்லை. இளமையின் அணைப்பிலிருந்த பூவாயி இப்பொழுது ஒரு குழந்தையின் தாயார்.

உச்சிக்கு எல்லோரும் உணவருந்தக் கிளம்பி விட்டனர். பூவாயி குழந்தையைத் தூக்கிக் கொண்டு பரமசிவம் உட்கார்ந்திருக்கும் இடத்துக்கு வந்தாள்.

"என்னங்க சாமி, சௌக்யமுங்களா!"

"ஹாம். ஆமா, உன்னை இத்தனை நாளாகக் காணவே யில்லையே! எங்கே போயிருந்தே!"

"எங்கே சாமி போவுறது! இந்தப் பயலை வவுத்துலே வச்சிக்கிட்டு எங்கேயாவது போவ முடியுமுங்களா!"

"என்ன, அந்தக் குழந்தை உன்னுடையதா! உனக்கு எப்பக் கல்யாணம் நடந்தது! எனக்குத் தெரியாதே!"

"என்ன சாமி! இப்படிக் கேக்கிறீங்களே! கல்யாணமா! எனக்கா! அது எப்பவோ ஆயிப் போச்சுதுங்களே!"

"உன் புருசன் யாரு!"

"புருசன் யாரா! நீங்கதான் சாமி. உங்களுக்குப் பிறந்த புள்ளைதானுங்க இந்த ராசாப் பயல்" என்று சொல்லிக் கொண்டே தன்னுடைய குழந்தையைப் பூவாயி மார்போடு அணைத்துக் கொண்டாள்.

பரமசிவத்துக்குத் தலையில் சம்மட்டியால் யாரோ ஓங்கியடித்தாற் போலிருந்தது. என்ன! என்னுடைய பிள்ளையா! ஐயோ பாவம்! ஒன்று மறியாத பெண்ணின் வாழ்வைக் கெடுத்து விட்டோமே! இந்தப் பாவத்துக்குப் பரிகாரம் உண்டா! பரிகாரமா! இந்த சமாசாரம் எல்லோருக்கும் தெரிந்து விட்டால்......! இத்தனை நாட்களாக நமக்கிருந்த பெயர், கௌரவம், அந்தஸ்து இவையெல்லாம் பறந்துவிடும்.

" என்னசாமி, மலைச்சு நின்னுட்டீங்க! நான் கோவிச்சுப்பேன்னு நினைக்கிறீங்களா! இல்லாட்டி என்னைக் கண்ணாலம் கட்டிக்கணும்னு கேப்பேன்னு பயப்படுறீங்களா! அப்படியெல்லாம் உங்களுக்குத் தொந்தரவு கொடுக்க மாட்டேனுங்க. உங்களை எல்லோருக்கும் முன்னாடி கண்ணாலம் கட்டிக்கிட்டாத்தான் புருசன் என்று நினைக்கலீங்க. என் மனசிலே எப்பவும் நீங்கதான் இருக்கீங்க. உங்களைத் தவிர வேறே யாரையும் ஏறெடுத்தும் பார்க்க

இதற்குள் பூவாயி வேலையைக் கவனிக்கக் கிளம்பிக் கொண்டிருந்தாள். உடனே பரமசிவம், " என்ன, பூவாயி, போறியா!" என்று அவளிடம் கேட்டார்.

" ஆமாமுங்க. வேலை ஏகப்பட்டது கிடக்கு."

" உனக்கு ஏதினாச்சும் வேணும்னு என்னை வந்து கேளு. பேசாம இருந்துடாதே!"

" எனக்கு என்ன வேணுங்க, நான் செத்துப் போனாலும் இந்தப் புள்ளை மட்டும் கஷ்டப் படாமெ இருக்கணும். அதுதான் எனக்குக் கவலையாக இருக்குங்க!"

" அதைப் பத்திக் கவலைப் படாதே. நான் பார்த்துக்கிறேன்."

"ஏதோ உங்க புள்ளேங்கறதை மறந்துடாம நினைப்பு வச்சிக்கிட்டுக் காப்பாத்தினால் அதுவே போதுங்க" என்று சொல்லி விட்டுப் பூவாயி வேலைக்குச் சென்று விட்டாள்.

பரமசிவம் பூவாயியை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார். நல்ல வேளை களத்து மேட்டில் ஒருவருமில்லை. சாப்பாட்டிலிருந்து இன்னும் திரும்பி வரவில்லை போலிருக்கிறது. எவனாவது கேட்டிருந்தால் பரமசிவத்தின் மதிப்பு மாயமாய் மறைந்திருக்கும். பரமசிவம்

வரையில் அவள் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. அவளுக்கென்ன ஒண்டிக் கட்டை. யாருக்குப் பயப்பட வேண்டும்! வேலை செய்து அதில் வரும் ஊதியத்தைக் கொண்டு வயிறு வளர்த்தாள். அவள் இஷ்டப்படி நடக்கத் தயாராக இருந்தாள். யாரேனும் ஏதாவது கேட்டால், 'என் விருப்பத்தைத் தடுக்க நீங்கள் யார்! உங்கள் காரியத்தைக் கவனித்துக் கொள்ளுங்கள்' என்று துணிச்சலாகப் பதில் சொல்லி விடுவாள்.

பூவாயி, பரமசிவம் வாங்கிக் கொடுத்த சிவப்புச் சாயப் புடவையைக் கட்டிக்கொண்டு களத்து மேட்டில் வேலை செய்து கொண்டிருந்தாள். அவளுடைய பிள்ளையும் பக்கத்தில் விளையாடிக் கொண்டிருந்தது. பொங்கல் கழிந்து இரண்டாவது நாள். ஊரெல்லாம் எங்கு பார்த்தாலும் சல்லி கட்டிய மாடுகள் ஓடிக் கொண்டிருந்தன. அவைகளைப் பின் தொடர்ந்து பலர் பிடிக்க முயன்று கொண்டிருந்தனர். ஒரே கோலாகலம். பரமசிவம் களத்துமேட்டில் நின்று கொண்டிருந்தார். பூவாயியையும் அவள் குழந்தையையும் மாறி மாறிப் பார்த்த வண்ணமாக இருந்தார் அவர்.

இந்தச் சமயத்தில்தான் பக்கத்தூரில் சல்லி கட்டி விடப்பட்ட காளையொன்று பிடிபடாமல் வளவனூரில் சுற்றிக் கொண்டிருந்தது. அதனுடைய சொந்தக்காரர்கள் மாட்டைத் தேடியவாறு அலைந்து கொண்டிருந்தனர். இலேசில் கையில் சிக்குவதாகத் தோன்றவில்லை. அதோ வருகிறதே, அந்த மூர்க்கமான காளை. களத்து மேட்டை யல்லவா நோக்கி அது வேகமாக ஓடி வருகிறது!

ஐயோ ...... பரமசிவத்துக்குப் பின்னால்... இன்னும் சிறிது நேரத்தில்...என்ன வெறி! பார்க்கவே பயங்கரமாக இருக்கிறதே. பின்னால் துரத்திக் கொண்டு வருபவர்கள் காட்டுக் கத்தலாகக் கத்தினார்கள். பரமசிவத்தின் காதுகளில் அவர்கள் கூப்பாடு விழுந்ததாகத் தெரியவில்லை. பூவாயியும் இதைக் கவனிக்காமல் வேலையில் மும்முரமாக இருந்தாள். துரத்திக் கொண்டு வந்தவர்கள் விடாமல் கத்திக் கொண்டே வந்தனர். வயலில் வேலை செய்து கொண்டிருப்பவர்கள் களத்து மேட்டிலிருந்து வெகு தூரத்தி லிருந்தனர். பரமசிவம், பூவாயி, அவளுடைய குழந்தை மூவரும்தான் களத்து மேட்டிலிருந்தனர். இதோ காளை கிட்டே நெருங்கி விட்டது. துரத்துபவர்கள் சத்தத்தைக் கேட்டுக் காளை மிரண்டு போய் இன்னும் வேகமாக ஓடியது. பரமசிவம் சத்தங்கேட்டுத் திரும்பிப் பார்த்தார். உயிரைக் குடிக்க வருவது போல் எதிரே பாய்ச்சலுடன் வந்து கொண்டிருந்த எமனைக் கண்டதும் பரமசிவத்துக்குக் குலை நடுக்க மெடுத்தது. எங்கே ஓடுவது! குறியைத் தன்மீதல்லவா வைத்துக் கொண்டு வருகிறது! சட்டென்று ஓரமாக இருந்த தென்னை மரத்துக்குப் பக்கத்தில் ஒதுங்கிக் கொண்டு விட்டார். பரமசிவத்தையே




குறிவைத்துக் கொண்டு வந்த காளைக்கு, அவர் ஒதுங்கியவுடன், அதன் பார்வை வேலை செய்து கொண்டிருக்க பூவாயியின் மேல் விழுந்தது. அவ்வளவுதான். அடுத்த நிமிடம் "அம்மா"வென்று அலறிக்கொண்டே பூவாயி துள்ளிக் குதித்தான். ஒரே முட்டு. விலாப் பக்கத்தில் தன் கூர்மையான கொம்புகளைப் பாய்ச்சிவிட்டு எடுத்தது. அதற்குள் துரத்தியவர்கள் கிட்டே நெருங்கவே, வேலை முடிந்து விட்டது என்று நினைத்ததுபோல் அந்தக் காளை ஓட்டம் பிடித்தது. பரமசிவம் கைகால்கள் வெடவெடக்கப் பூவாயியின் பக்கம் வந்தார். குப்புற விழுந்து கிடந்த அவனருகில் அந்தச் சின்னஞ் சிறு குழந்தை இருந்தது. என்ன தோன்றியதோ திடீரென்று குழந்தையைத் தூக்கி மார்போடணைத்துக் கொண்டார். தந்தையின் அணைப்பை முதன் முதலாகக் கண்ட அந்தப் பச்சிளங் குழந்தை அழாமல் சிரித்துக் கொண்டிருந்தது. ஆமாம், தாய் இனிமேல் அக்குழந்தையை எப்படிக் காப்பாற்ற முடியும்!

பரமசிவத்தின் உடல் குளிரினால் நடுங்குவது போல் ஆடியது. பூவாயியின் உடம்பிலிருந்து குருதி வெள்ளம் பெருக்கெடுத்தது. குழந்தையை மார்பில் அணைத்த வண்ணமாக அவன் கிட்டே நெருங்கினர். "சாமி" என்று கஷ்டத்துடன் அவன் முனகிக் கொண்டிருந்தான். தன்னுடைய பிள்ளை பரமசிவத்தின் மார்பில் சிரித்தவண்ண மிருந்ததைக் கண்டதும் பூவாயியின் முகம் சந்தோஷத்தால் மலர்ந்தது. ஒரு தடவை குழந்தையையும் பரமசிவத்தையும் பார்த்தான். சாமி என்ற கடைசி முனகல். அவ்வளவுதான். தலை தரையில் சாய்ந்து விட்டது.

* * *

'பூவாயி, பூவாயி' என்று கத்தினர் பரமசிவம். உடம்பெல்லாம் வியர்த்து விறுவிறுக்கப் பரமசிவம் படுக்கையில் புரண்டு கொண்டே இருந்தார். ஏதோ சத்தம் கேட்கவே வேலைக்காரக் கருப்பன் பரமசிவம் இருக்கும் அறைக்குள் நுழைந்தான். விளக்கைப் போட்டுப் பார்த்தால் பரமசிவத்தின் முகத்தில் ஓரே வியர்வைத் துளிகள். பயத்தினால் அவர் முகம் வெளிறிப் போயிருந்தது.

"என்னசாமி வேண்டும்! பூவாயின்னு கூப்பிட்டீங்களே!" என்று கருப்பன் கேட்டான்.

கருப்பனைக் கண்டவுடன், பரமசிவத்துக்குத் தோன்றியவைகளெல்லாம் பழைய சம்பவங்களின் நினைப்புகளென்று புரிந்தது. கருப்பனை உற்றுப் பார்த்தார். இதைப் பற்றிக் கருப்பனிடம் சொன்னால் என்ன! ஒரு சமயம் அவன் தன்னைப் பற்றி இழிவாக நினைத்துக் கொண்டால்......வேண்டாம். அவனுடைய மனத்தில் இதுவரையில் நல்ல எண்ணமாகவே இருந்திருக்கும். அதைக் கலைக்க வேண்டாம். அவனாவது நிம்மதியுடன் இருக்கட்டும்.

பரமசிவம் தெளிவுடன் படுக்கையில் படுத்திருந்தார். தன்னுடைய முடிவு சரியா, தவறு என்று அவரால் தீர்மானிக்க முடியவில்லை. ஊரார் தன்னைப் பற்றிப் பலவிதமாகச் சொல்லிக் கொண்டிருப்பது போன்ற பிரமை ஏற்பட்டது. இன்னொரு பக்கம் பூவாயி தன்னையே பார்த்துக் கொண்டிருந்தான். தன்னுடைய சுய சம்பாத்தியமான சொத்தை யாருக்குக் கொடுத்தால் என்ன! என்னுடைய இஷ்டமல்லவா அது...என்று பரமசிவம் மனத்தைத் திடப் படுத்திக் கொண்டார். இவ்வளவு கஷ்டங்களும் பரமசிவத்தை அன்றிரவு வரையில்தான் ஆட்டி வைக்க முடிந்தது.

வளவனூர் பொது ஜனங்களில் சிலர் தங்கள் அபிப்பிராயங்களை வெளியிட்டுக் கொண்டிருந்தனர். ஒருவர் "என்ன, உங்களுக்கு விஷயம் தெரியுமோ! பரமசிவம் முப்பதினாயிரம் பெறுமானமுள்ள சொத்துக்களைக் கருப்பன் என்ற வேலைக்காரனுக்கு எழுதி வைத்திருக்கிறாராம்" என்று சொன்னார்.

"கடைசிக் காலத்தில் தர்மத்திற்கு எழுதி வைத்தாலும் போகிற வழிக்குப் புண்ணியமுண்டு. போயும் போயும் ஒரு வேலைக்காரனுக்கா இவ்வளவு சொத்தைக் கொடுப்பது!" என்று சொல்லி முடிப்பதற்குள் எதிரே வந்த கூட்டம் அவர்களுடைய சம்பாஷணைக்கு முற்றுப் புள்ளி வைத்தது.

பரமசிவத்தின் கடைசி ஊர்வலம் வந்து கொண்டிருந்தது. ஏகப்பட்ட கூட்டம். எத்தனையோ சஞ்சலங்களுக்கு இடையே கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த முகத்தில் என்ன அமைதி. கருப்பன்கூட அதோ நிற்கிறானே! கீழே விழாமல் கண்களின் பார்வையை மறைத்துக் கொண்டிருந்த கண்ணீர்த் துளிகள் கருப்பனின் கட்டை விரலில் விழுந்து சிதறின.

வட இந்திய யாத்திரை 26





நான் வட இந்திய யாத்திரைப் பிரயாணமாகிய செய்தி கேட்டது முதல் பல நண்பர்கள் ஒரு விஷயத்தை எனக்கு வற்புறுத்திச் சொல்லி வந்தார்கள்.

"ஏன், ஐயா! நாங்கள் கேள்விப்பட்டது உண்மையா! வட இந்தியாவுக்குப் போகிறீர்களாமே!"

"ஆமாம். உண்மையேதான். வட இந்தியாவுக்குப் போகத்தான் போகிறேன்."

"வட இந்தியாவில் எங்கெல்லாம் சுற்றுப் பிரயாணம் செய்யப் போகிறீர்கள்!"


"உத்தரப் பிரதேசம், பஞ்சாப், பெப்சு, ஜம்மு, காஷ்மீரம் முதலிய இடங்களில் எல்லாம் யாத்திரை செய்யப் போகிறேன்."

"காஷ்மீரத்துக்கு வேறு போகிறீர்களா!"

"ஏன் இப்படி ஆச்சரியப்படுகிறீர்கள்!"



பின்ஜோர் தோட்டம்



"காஷ்மீரத்துக்குப் போவதற்கு முன்னால்தானே பெப்சுவுக்குப் போகிறீர்கள்!"

"ஆமாம்; முதலில்தான் பெப்சு."

"அப்படியானால் காஷ்மீரத்தையே பெப்சுவில் பார்த்து விடலாம்."

"அதெப்படி முடியும்!"

"அங்கே பின்ஜோர் தோட்டம் என்று ஒரு தோட்டம் இருக்கிறது. அதைப் பார்த்தால் காஷ்மீரத்தையே பார்த்தது போலிருக்கும்."

"அப்படியா! நீங்கள் எப்பொழுது அந்தத் தோட்டத்துக்குப் போனீர்கள்!"

"நானா! நான் போனேன் என்று யார் உங்களிடம் சொன்னது!"

"காஷ்மீரத்தைப் போலவே இருக்கும் பின்சோர் தோட்டம் என்கிறீர்களே!"

"நான் காஷ்மீரத்தையும் பார்த்ததில்லை, பின்சோர் தோட்டத்தையும் பார்த்ததில்லை, எல்லாரும் அதைப் பற்றிச் சொல்வதைத் தான் நானும் சொல்கிறேன்."

இப்படி யெல்லாம் பார்க்காமலே புகழக் கூடிய இடம்தான் பின்ஜோர் தோட்டம்.

இது பாட்டியாலா–சிம்லா சாலையில் பஞ்சாபின் புதிய தலைநகரான சண்டி-

நகருக்கு அருகில் இருக்கிறது. சாலையில் செல்லும்போது பின்சோர் தோட்டத்தின் அழகு ஒன்றையும் தெரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் பின்சோர் தோட்டத்துக்குள் சென்று நேரில் பார்த்ததும் பூலோகத்திலிருந்து ஏதோ மந்திர சக்தியினால் சொர்க்க லோகத்துக்குப் போய் விட்டோம் என்று தோன்றும். அவ்வளவு அபூர்வமான காட்சி தென்படுகிறது.

ஏழு அடுக்குகள் உள்ள கற்பனை செய்துகாண முடியாத பலவித வண்ண மலர்கள் பூத்துக் குலுங்கும் மாயத் தோட்டம். ஒவ்வொரு அடுக்கும் பல நூறு அடி நீளம் உள்ளவை. ஒவ்வொன்றாகக் கீழ் நோக்கிப் படிப் படியாக இறங்கிக் கொண்டே போகிறது.

ஒவ்வொரு அடுக்கிலும் மத்தியில் வரிசை வரிசையாகவும், வட்ட வட்டமாகவும், பலவித கோலங்கள் போலவும் அமைந்த நூற்றுக் கணக்கான நீர்ப் பொழிவுகளைக் காண்கிறோம். அவைகளில் இருந்து பொழியும் ஜலத் திரளில் வர்ண ஜாலங்களைப் பார்க்கிறோம்.

ஓரிடத்தில் உள்ள குழாய் வைரங்களைப் பொழிகின்றது. மற்றோர் இடத்தில் மரகதங்களை வாரி இறைக்கின்றது. இன்னும் சில இடங்களில் வான வில்லின் வர்ண ஜாலங்கள் அத்தனையும் சொரிகின்றன.

இந்த நீர்ப்பொழிவுகளுக்கு அடியில் தண்ணீருக்குள் பல வர்ணங்கள் கொண்ட கற்களைப் பொருத்தி யிருக்கின்றனர். சூரிய ஒளியில் அந்த வர்ணக் கற்கள் மின்னுகின்றன. அதனால் "பின்சோர் தோட்டம்" ஒரு மாயாபுரியாகத் தோற்ற மளிக்கிறது.

பின்சோர் தோட்ட அமைப்பை வெளியில் இருந்து பார்த்தால் பழைய மொகலாய மன்னர்களின் அரமனையைப்போலக் காட்சி அளிக்கிறது. அதன் பிரும்மாண்டமான மதிள் சுவரைத்தாண்டி உள்ளே சென்று விட்டாலோ "சுவர்க்கம்தான் பூமிக்கு வந்து விட்டதோ!" என்ற மயக்கம் ஏற்படுகிறது.

பின்ஜோரின் கதை

ஒரு காலத்தில் உண்மையிலேயே மொகலாய மன்னர்களின் தோட்டமாக அது இருந்திருக்கிறது. பிறகு ரஜபுத்திர மன்னர்கள் தோட்டமாக மாறி யிருக்கிறது. இப்பொழுது எல்லாரும் இந்நாட்டு மன்னர்கள் அல்லவா! அதனால் மக்களின் பொதுத் தோட்டமாக இருக்கிறது! அந்தக் காலத்தில் பின்சோர் தோட்டத்துக்குள் போவதற்குள் சொர்க்கத்துக்கே போய் விடலாம் என்று தோன்றுமாம். அவ்வளவு கட்டும் காவலும் சங்கடங்களும் இருந்தன. இப்பொழுது அதெல்லாம் பழங் கதையாய், கனவாய்ப் போய் விட்டன.

வட இந்திய சரித்திரத்தைப் படித்துப் பார்த்தால் பின்சோர் தோட்டம் எத்தனை பேர்களின் கைக்கு மாறி மாறி வந்திருக்கிறது என்ற விந்தையைக் காண்போம்.

வட இந்திய சரித்திரத்தைப் போலவே பின்சோர் தோட்டமும் நம்மைத் திணற அடிக்கிறது. பின்சோருக்குப் பழைய காலத்தில் என்ன பெயர் தெரியுமா! "பஞ்சபுரம்" என்ற பெயர் வழங்கி வந்திருக்கிறது. எப்படியோ அது பிற்காலத்தில் "பின்சோர்" என்ற பெயரை அடைந்து விட்டது.

"பஞ்சபுரமா! அப்படி யென்றால்!"

"பஞ்சபாண்டவர்கள் வனவாசம் செய்த போது இந்த இடத்தின் அழகைக் கண்டு இங்கேயே தங்கிவிட்டார்கள். அர்ஜுனனும், பீமனும், நகுலனும், சகாதேவனும் யுதிஷ்டிரர் விருப்பத்துக்கு இணங்கத் தோட்டத்தை அழகுபடுத்தி வந்தார்கள். திரௌபதி மனம் மகிழ தேவலோகத்திலிருந்தே மலர்ச் செடிகளைக் கொண்டு வந்து வளர்த்தார்கள். ஆகவே உலகத்தில் உள்ள பல வகைப் பூச்செடிகளுடன் தேவலோகத்தில் இருக்கும் பூச்செடிகளும் இங்கு இருக்கின்றன."

"எல்லாவற்றையும் துறந்து சென்றது போல இந்தப் பஞ்சபுரத்தையும் பஞ்சபாண்டவர்கள் துறந்து சென்றார்களாக்கும்!"

"அவ்வளவு சுலபமாகப் பஞ்சபுரத்தை மட்டும் அவர்களால் துறக்க முடியவில்லை. யுதிஷ்டிரர் வனவாசம் முடிந்து மன்னர் ஆனவுடன் அடிக்கடி இந்தத் தோட்டத்துக்கு வருவார். இவ்வாறு அவர் ஆட்சிபுரிந்த முப்பத்தாறு ஆண்டுகளும் வந்திருக்கிறார். கடைசியில் இமய மலை வழியாகச் சொர்க்கத்துக்குப் போனார்கள் அல்லவா! அப்படிப் போவதற்கு முன் ஒரு முறை பின்சோர் தோட்டத்துக்கு வந்து விட்டுத்தான் போனார்கள். ஏன்! சொர்க்கத்திலிருந்து கூட ஒருதரம் இந்தத் தோட்டத்துக்குத் தருமபுத்திரர் வந்தாராம்."

இந்த விவரங்களை யெல்லாம் சொல்லிக் கொண்டு எங்கள் பின்னோடு ஒருவன் வந்து கொண்டிருந்தான். ஒரு இடத்துக்கு வந்தவுடன் அங்குள்ள அழகிய நீர்ப் பொழிவைப் பார்த்து அப்படியே மயங்கி நின்றோம்.

"இங்குதான் அடிக்கடி திரௌபதி வந்து குளிப்பாளாம்" என்றான்.

"நான் நம்பவில்லை, அர்ஜுனன் தான் வந்து குளித்திருப்பான்" என்றேன்.

"இல்லை; இல்லவே இல்லை. திரௌபதி தான் இங்கு வந்து குளிப்பாள்."

"உனக்கு எப்படித் தெரியும்!"

"நான் எப்படி நேரில் பார்த்திருக்க முடியும்! இந்தச் சம்பவம் பஞ்சபாண்டவர் காலத்தில் நடந்தது ஆயிற்றே!"

"பின்னே, வாயை மூடு! இன்றையதினம் நடக்கிற கதையைக் கேட்டாலே ஒன்றுக்கு ஒன்று முரணாக இருக்கிறது. பஞ்சபாண்டவர் காலத்துச் சமாசாரத்தை எப்படிச் சரியாகச் சொல்ல முடியும்!"

ஆனாலும் அந்த வழிகாட்டி வாயை மூடவில்லை. பின்சோர் தோட்டத்தின் சரித்திரத்தைச் சொல்லிக் கொண்டே வந்தான்:

பஞ்சபாண்டவர்கள் காலத்தில் உண்டாக்கப்பட்ட இந்தத் தோட்டம் பிறகு யாரும் கவனிப்பாரற்றுக் காடாகிவிட்டது. பின்னர் யாரோ இந்த இடத்தைக் கண்டு பிடித்து அழகான தோட்டமாக்கி யிருக்கிறார்கள். தைமூர் வட இந்தியாவில் படை யெடுத்த போது இந்தத் தோட்டத்தை அழித்து நாசம் செய்து விட்டார். மீண்டும் கேட்பாரற்றுத் தோட்டம் பாழாய்ப் போய்விட்டது.

பதினேழாம் நூற்றாண்டில் அவுரங்கசீப்பின் ஆட்சி நடந்ததல்லவா! அப்பொழுது அவருக்கு அந்தரங்க மந்திரியாக இருந்தவர் பிடேகான். பிடேகான் பரமரசிகர், கட்ட

தென்னாடெங்கும்
ஜனவரி 25ந் தேதி
வருகிறது

குன்றக்குடி போகாமலே, குமரய்யா !
குன்று போல பணம் குவிய வேணும் !
அன்னக்காவடி தூக்காமலே, முருகையா !
அன்னம் கிடைக்க வேண்டுமையா !
“அருக”னாக பாலையா ஆடிப்பாடுவதைக் காண...



கல்பனா பிக்சர்ஸின்

நானே ராஜா

கதை, வசனம்.......
கவிஞர் கண்ணதாசன் •

டைரக்ஷன்......
இ.அப்பாராவ்·பி.வி.நாராயணன்

தயாரிப்பு
R.R.சந்திரன்

ஸ்டுடியோ....
வாஹினி

வியார்

நிபுணர். லாகூரில் பிரசித்தி பெற்ற பாத்சாஹி மசூதியைக் கட்டினார். அவர் திறமையைக் கண்டு வியந்த அவுரங்கசீப் படேகானைப் பஞ்சாபின் கவர்னராக நியமித்தார். படேகான் பஞ்சாப் கவர்னராக இருந்த பொழுது பின்ஜோரின் அழகைக் கண்டார். உடனே அங்கு மண்டிக் கிடந்த காட்டை அழித்து அற்புதமான தோட்டத்தை நிர்மாணித்தார்; காடாகக் கிடந்த இடத்தைச் சுவர்ணபுரியாக மாற்றினார். அவர் காலத்திலேதான் பின்ஜோர் தோட்டத்துக்கு இப்பொழுது இருக்கும் அமைப்பு உருவாகி இருக்க வேண்டும் என்று சரித்திர ஆராய்ச்சி நிபுணர்கள் அபிப்பிராயப் படுகிறார்கள். அவருக்குப் பிறகு மீண்டும் பின்ஜோர் தோட்டம் கவனிப்பாரற்றுக் கிடந்தது. தோட்டம் அழிந்து காடு வளர்ந்தது. காட்டில் வேட்டையாடி வந்த வேடர்களின் தலைவன் பின்ஜோரின் அழகைக் கண்டு அதைத் தன்னுடைய தலைநகரமாக்கிக் கொண்டான். வேடர்களும் காட்டு மிருகங்களும் பின்ஜோரில் நீண்ட நாள் ஆட்சி புரிந்தனர்.

புலி வேட்டையில் ஆசை கொண்ட பாட்டியாலா சமஸ்தான மன்னர்கள் பின்ஜோருக்கு வந்தார்கள். புலிகளைச் சுட்டுக் கொன்றார்கள். பின்ஜோரில் மலர்ச் செடிகளை வைத்து வளர்த்து, தோட்டத்தை விஸ்தரித்தார்கள்.

** ** **

ஷிவாலிக் மலையின் கம்பீரமான தோற்றம் பின்னால் வானோங்கி நிற்க அதற்கு எதிரில் பின்ஜோர் தோட்டம் அமைந்திருக்கிறது. ஷிவாலிக் மலையிலிருந்து வரும் அருவியிலிருந்து குழாய் மூலம் பின்ஜோர் தோட்டத்துக்குத் தண்ணீர் வருவதற்கு வழி செய்திருக்கிறார்கள். தோட்டத்தின் முதல் வாசற்படியைத் தாண்டியவுடனேயே பூமியிலிருந்து தானே தண்ணீர் பொங்கி வருவது போல ஷிவாலிக் மலையிலிருந்து தண்ணீர்க் குழாய் மூலம் பூமிக்கு அடியில் கொண்டு வந்து இணைத்திருக்கும் அற்புதத்தைக் காண முடிகிறது.

இந்தத் தோட்டத்தின் நீர்ப் பொழிவுகளின் நீர் நிலை மட்டம் எப்போதும் மலைக்கு மேலே இருப்பதால் பின்ஜோர் தோட்டத்து நீர்ப் பொழிவுகளில் என்றென்றைக்கும் நீர் பொங்கி வழிந்து கொண்டிருக்கும்.

இத்தகைய அற்புதமான தோட்டத்தை அமைத்து, அதில் நீர்ப் பொழிவுகளையும் கண்டு ஆனந்தப்பட வேண்டும் என்று முதன் முதலில் யாருடைய மனத்தில் தோன்றிற்றோ! அவர் மனிதனாகவே இருக்க முடியாது! மகா புருஷனாகத்தான் இருக்க வேண்டும். அப்பேர்ப்பட்டவருக்குப் பெப்சு ராஜ்யத்தையே பரிசாகக் கொடுத்து விடுவதற்கு நான் இப்பொழுதே தயாராயிருக்கிறேன்.

பஞ்சபாண்டவர்கள் பாதம் பட்ட புண்ணியமோ என்னமோ, பின்ஜோர் தோட்டத்துக்கு மன்னாதி மன்னர்கள் எல்லாம் வந்து கொண்டே இருக்கிறார்கள். அதன் அழகைப் பார்த்து அகமகிழ்ந்து போகிறார்கள். ஜனாதிபதி ராஜேந்திரர் வந்திருக்கிறார். மார்ஷல் டிட்டோ வந்திருக்கிறார். சோவியத் நாட்டிலிருந்து வந்த கலைக் குழுவினர் பின்ஜோர் தோட்டத்தின் அழகைப் பார்த்து விட்டு அங்கிருந்து கிளம்பவே மறுத்து விட்டார்களாம். ஏன், பத்திரிகையாளர்கள் மட்டும் அங்கிருந்து கிளம்ப நினைத்தார்களா! பத்திரிகைக்காரர்களை ஒவ்வொருவராகத் தேடிப் பிடித்து அழைத்து வருவதற்குள் இந்திய சர்க்கார் அதிகாரிகளுக்குப் பைத்தியமே பிடித்து விடும்போலாகி விட்டதே!

பின்ஜோர் தோட்டத்துக்கு ஒரு வணக்கம் செலுத்திவிட்டு, அந்தப் பூலோக சுவர்க்கத்திலிருந்து கிளம்புவோம்.

"என்ன ஐயா! பின்ஜோர் தோட்டத்திலிருந்து வந்ததிலிருந்து மகாராஜா போல ஆகாயத்தையே பார்த்துக் கொண்டு நடக்கிறீரே!" என்றார் என்னுடன் வந்த பத்திரிகையாளர்.

"பஞ்சபாண்டவர்களும், மன்னாதி மன்னர்களும், மகா புருஷர்களும் காலடி பட்ட புண்ணிய பூமியை மிதித்து விட்டு வந்த பெருமையால் நானும் மன்னராகி விட்டதுபோல் தோன்றியது!" என்றேன்.

"இரைந்து சொல்லாதீர் ஐயா! யார் காதிலேயாவது விழுந்து விடப் போகிறது. உம்முடைய சமஸ்தானத்தை நஷ்ட ஈடு கொடுக்காமலே சர்க்கார் எடுத்துக் கொள்ளப் போகிறார்கள்" என்றார் இன்னொரு பத்திரிகையாளர்.

மன்னர்களைப் பற்றிப் பேச்சுத் திரும்பியதும் பாட்டியாலா நகரில் அன்று மத்தியானம் பார்த்த மியூஸியம் நினைவுக்கு வந்தது.

பாட்டியாலா மியூஸியம்

மியூஸியத்தின் வாசலிலே நம்மை வரவேற்க சக்கரவர்த்தியே நிற்கிறார். முதலிலே அவரைப் பார்த்ததும் நமது நெஞ்சம் துணுக்குறுகிறது. ஆகா! எத்தகைய இரும்பு உடல்! எப்படிப்பட்ட கம்பீரமான தோற்றம்! அந்தக் கண்களும், முறுக்கிவிட்ட மீசையும்தான் எப்படி இருக்கின்றன! நல்ல வேளை சக்கரவர்த்தி உயிருடன் இல்லை. யாரோ உயர்தரக் கலைஞன் செய்த உருவம்தான் என்று அறிந்து கொண்டு மேலே போகிறோம்.

"இந்தச் சிலையை இங்கிருந்தும் எடுத்து விடப் போகிறோம்!" என்று சொல்லும் குரல் கேட்கிறது. திரும்பிப் பார்த்து "ஏன்!" என்று விசாரிக்கிறோம்.

"ஏனா! இந்தச் சிலை யாருடையது என்று தெரியவில்லையா!"

"நன்றாகத் தெரிகிறதே! ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தியினுடையதுதான்."

"இது முதலில் நகரத்தின் நடுநாயகமாக இருந்தது. அங்கிருந்து இங்கு கொண்டு வந்து வைத்திருக்கிறோம். இங்கு இருப்பதையும் சிலர் விரும்பவில்லை."

"யார் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் சிலை ரொம்ப அபாரமாக இருக்கிறது. மியூஸியம் பார்க்க வருகிறவர்களை வரவேற்கும் முறையில் அமைந்திருக்கிறது."

இம்மாதிரி உயிர்க் களையுடன் காணப்படும் உருவங்களை இப்பொழுதுதான் செய்ய முடியவில்லை. அந்த நாளில் கருங்கல்லில் அத்தகைய ஜீவ களையைக் கொண்டு வரக்கூடிய மகா சிற்பிகள் இருந்திருக்கிறார்கள் என்பதற்கு இன்னும் பல சிலைகளும் இந்தக் காட்சிச் சாலையில் இருக்கின்றன.

அந்தக் காலத்தில் ரஜபுத்திர மன்னர்கள் எத்தனையோ வீரசாகஸங்களைப் புரிந்திருக்கிறார்கள் என்று சரித்திரத்தில் படித்திருக்

கிறோம். அவைகளை எல்லாம் நேரில் பார்ப்பதுபோல அவர்கள் உபயோகித்த கத்திகள், கேடயங்கள், வேலாயுதங்கள், துப்பாக்கிகள் எல்லாம் இருக்கின்றன. அவர்கள் அணிந்திருந்த இரும்புப் போர்க் கவசங்கள் பல இருக்கின்றன. அந்தக் கவசங்களை எப்படித்தான் போட்டுக் கொண்டார்களோ! அந்த வாள்களையும், வேல்களையும் எப்படித்தான் உபயோகித்தார்களோ! ஆச்சரியமாக இருக்கிறது. ஒவ்வொன்றும் இரண்டு ஆள் சேர்ந்து தூக்கினால்கூட அசைக்கமுடியாது. அவ்வளவு கனமாக இருக்கின்றன.

கத்திகளில்தான் எத்தனை எத்தனை வகைகள். அப்பப்பா! நினைத்தாலே பயமாக இருக்கிறது!

போர்க் கருவிகளுடன் மேற்படி காட்சிச் சாலையில் ரஜபுத்திர மன்னர்கள் வீற்றிருந்து அரசு செலுத்திய சிம்மாசனங்களும் வைக்கப் பட்டிருக்கின்றன.

அந்தச் சிம்மாசனங்கள் தங்கத்தினாலும் வெள்ளியினாலும் செய்து ரத்தினங்கள் இழைத்துப் பளபளவென்று கண்ணைப் பறிப்பதாயிருக்கின்றன. இன்னும் அந்தச் சிம்மாசனத்தின் பக்கத்தில் அரசனுடைய தர்பார் அங்கி, கிரீடம், உடைவாள், செங்கோல் இவையாவும் வைக்கப் பட்டிருக்கின்றன.

அவைகளில் செய்திருக்கும் வேலைப்பாடுகள் அந்தக் காலத்து மன்னர்கள் எவ்வளவு கலை ஆர்வத்துடன் இருந்திருக்கிறார்கள் என்பதற்குச் சாட்சி கூறுகின்றன.

மன்னர்கள் உபயோகித்த பல்லக்கு, முதன் முதலில் இந்தியாவுக்கு வந்த மோட்டார் கார்கள் எல்லாம் இருக்கின்றன.

காட்சிச் சாலையின் திரும்பிய பக்கங்களில் எல்லாம் பாட்டியாலாவை அரசாண்டு வந்த மன்னர்கள் கம்பீரமாக அமர்ந்து கொண்டு இருக்கிறார்கள். "என்ன துணிச்சல் இவர்களுக்கு. ராஜ சபையில் கொஞ்சம்கூட பயம் இல்லாமல் வருகிறார்களே!" என்று நம்மைப் பார்த்துக் கூறுவதுபோல் இருக்கிறது அவர்கள் பார்க்கும் பார்வை.

கலை உணர்ச்சி நிறைந்த அருமையான எண்ணெய்ச் சித்திரங்களில் தான் மன்னர்கள் அவ்வாறு தோற்றமளிக்கிறார்கள். ஒவ்வொன்றும் ஐம்பதினாயிரம் ரூபாய் மதிப்புள்ளவை என்று சொன்னார்கள். மகாராஜாக்களின் சித்திரங்கள் அல்லவா! அதன் மதிப்பைப் பற்றிக் கேட்கவும் வேண்டுமா!

** ** **

காட்சிச் சாலையின் மாடிக்குச் சென்றோம். ஒரு சிறு கதவைத் திறந்து கொண்டு உள்ளே பிரவேசித்தோம். அடுத்த கணம் எனக்கு உடம்பெல்லாம் மயிர்க்கூச்செடுத்தது. பயம் பற்றிக் கொண்டது! ஐயோ! இதென்ன! பயங்கரக்காடாக அல்லவா காணப்படுகிறது! நாலாபுறமும் கொடிய மிருகங்கள் சூழ்ந்திருக்கின்றனவே! இதோ ஒரு புலி பாய்வதற்குத் தயாராக இருக்கிறதே! இது என்ன? கரடி அல்லவா! இங்கு ஏன் வந்து சேர்ந்தோம்!

இப்படியாகப் பயந்து போனேன். ஒருவாறு மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு கண்களைக் கசக்கி விட்டுக்கொண்ட பிறகு சற்று நிதானம் ஏற்பட்டது. இது பயங்கரக் காடுமில்லை, இங்கே இருக்கும் மிருகங்கள் உயிருள்ள மிரு

கள்ளுமில்லே. மிருகங்களே அப்படியே பாடம் செய்து வீணுகிவிடாமல் வைத்திருக்கிருர்கள். இதைப் பார்த்துத் தான் மதிமயங்கிப் போனேனும் என்று தெரிய வந்தது!

ஆம்; பாடம் செய்யப்பட்ட மிருகங்கள் என்ருலும் அவை சாமான்யமான மிருகங்கள் அல்ல. தத்ரூபமாக ஜீவ களையுடன் செய்து வைத்திருக்கிறது. எத்தனை வருஷங்களுக்கு முன்னுல் அப்படிப் பாடம் செய்தார்களோ! ஆனாலும் அவற்றின் ஜீவ களை குறையவில்லே. காட்டில் உயிரோடு அங்கும் இங்கும் ஓடித் திரிவது போலவே இருக்கிறது.

ஆகா! அங்கு மிருகங்களே வைத்திருக்கும் அழகைத்தான் என்னவென்று சொல்வது! பார்ப்பதற்குப் பயங்கரமாக இருந்தாலும் கண்ணுக்கு விருந்தளிக்கக் கூடியவைகள்தான்.

இந்த மிருகங்களில் பெரும்பகுதி பாட்டியாலா மன்னர்கள் வேட்டையாடிச் சுட்டுக் கொன்றவைகள்தானும்!

வந்த வழியாகத் திரும்பி வந்தோம். பிறகு அருகில் உள்ள சட்டசபைக் கட்டடத்துக்குச் சென்ருேம். இப்பொழுது சட்டசபையாக உபயோகிக்கும் இந்தக் கட்டடம் ஒரு காலத்தில் பாட்டியாலா மன்னரின் அரமனேயாக இருந்ததாம். அடாடா! அந்த அரமனேயில் நாங்கள் கண்ட அற்புதக் காட்சியை என்னவென்று சொல்வது! அழகான அரமனே மாளிகை! அந்தப்புரங்கள்! அந்தப்புரங்களில் ராஜ கன்னிகைகள் நீராடும் பளிங்குத் தடாகங்கள்! பூஜா கிரகங்கள்! பள்ளியறைகள்! —இவைகளே எல்லாம் நாங்கள் அங்கு நேரில் பார்த்து விட்டதாக நினைக்க வேண்டாம். இவைகள் எல்லாம் அங்கிருந்ததாக மியூஸியத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் விளக்கினர். அவர் கூறியதிலிருந்து அரமனேயை மனத்தில் கட்டிப் பார்த்துக் கொண்டு திரும்பினேம்.

வழியில் மிகப் பெரிய பீரங்கி, சுமார் அறுபது அடி நீளமுள்ள பீரங்கி ஒன்று இருந்தது. அந்தப் பீரங்கியைப் பார்த்ததும், அதை இயக்கி யிருக்க வேண்டிய மனித உருவத்தைக் கற்பனை செய்து பார்த்துக் கொள்ளலாம். அந்த நாளில் இந்தப் பெரிய பீரங்கியை ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்துக்குச் சர்வ சாதாரணமாக எடுத்துச் செல்வார்களாம். இப்படி இந்தப் பீரங்கியை எடுத்துப் போய்க் கொண்டே இருந்தால் எப்படி எதிரிகளே முறியடிக்க நேரம் இருக்கிருக்கப் போகிறது!

இப்படியாகப் பாட்டியாலாவில் அந்த நாளில் மன்னர்கள் ஆட்சி புரிந்து வந்த அற்புதத்தை இந்தக் கண்காட்சிச் சாலேயில் உள்ள பொருள்களின் மூலம் ஒருவாறு புரிந்து கொள்ள முடிகிறது. பாட்டியாலா சமஸ்தான மன்னர்களின் பெருமைக்கு அங்குள்ள சாமான்கள் ஒவ்வொன்றும் அழியாத சான்ருயிருக்கின்றன.

கிராமிய நடனம்

அன்று இரவு பாட்டியாலா ராஜப்பிரமுக்கின் அரமனேயில் பத்திரிகையாளர்களுக்குப் பெப்சு ராஜ்யத்தின் 'சீப் செகரட்டரி' ஒரு விருந்தளித்தார். விருந்தென்ருல் ராஜ விருந்து தான் போங்கள்! அதைப்பற்றி இதற்கு மேல் அதிகம் ஒன்றும் சொல்ல விரும்பவில்லே.

விருந்துக்குப் பிறகு பஞ்சாபின் கிராமிய நடனம் எப்படி இருக்கும் என்று தெரிந்து கொள்ள எங்களுக்கு ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டது. மகேந்திரா கல்லூரி மாணவர்களின் கிராமிய நடனம் நடைபெற்றது. எல்லாரும் பி. ஏ., எம். ஏ. வகுப்பு மாணவர்கள்தான். ஆனாலும் அவர்களுக்குத்தான் அவர்கள் நாட்டுக் கலேயின் மீது என்ன பற்றுதல்! மாணவர்கள் கோஷ்டியாக வந்து நடனமாடினர். அது அறுவடை முடிந்தவுடன் வஸந்த காலத்தில் உழவர்கள் உற்சாகமாக நடிக்கும் நடனம்.

ஆகா! இந்தக் கிராமிய நடனத்தைப் பற்றி என்னுல் ஒன்றும் சொல்லமுடியாது போங்கள். அவர்களுடைய டோல் வாத்திய முழக்கத்தைச் சொல்வதா! அவர்கள் கோஷிக்கும் கோஷத்தைச் சொல்வதா! அவர்கள் ஆடும் ஆட்டத்தைச் சொல்வதா! அவர்களில் ஒருவர் தனியாக வந்து 'கிர்' என்று சுழன்று ஆடிக் கொண்டே பாடினுரே, அதைச் சொல்வதா! இல்லே, அவரைத் தொடர்ந்து எல்லாரும் பாடிக் கொண்டு ஆடினுர்களே அதைச் சொல்வதா! பாட்டு முடிந்ததும் நம்முடைய சங்கீத சபைகளில் "பலே!" "பலே!" என்று ரஸித்து ஆனந்திப்போமே! அதே போல் அவர்கள் "பல்லே!" "பல்லே!" என்று சொல்லி ஆரவாரித்ததைச் சொல்வதா!

மொத்தத்தில் அந்த நடன கோஷ்டியின் அருமையான காட்சி இன்னும் என் மனக் கண் முன்னுல் நிற்கிறது.

பஞ்சாபி மக்களுக்கு நாட்டியத்திலும் சங்கீதத்திலும் அபாரமோகம் என்பதைத் தெரிந்து கொண்டோம். அவர்களுடைய நாடகங்கள் மிக நன்ருக இருக்கும் என்று சொன்னுர்கள். அவர்கள் சொல்லுவது மிகையல்ல என்பதைப் பஞ்சாபில் உள்ள ஒரு கிராமத்தில் பார்த்துத் தெரிந்து கொண்டோம்.

** ** **

பஞ்சாப் மக்கள் தங்கள் கலேயில் எவ்வளவு பக்தியுடன் இருக்கிருர்களோ, அதே பக்தியை தங்கள் தேசத்திடமும் காட்டி வருகிருர்கள். "பஞ்சாபில் ஒரு காலத்தில் மிக மோசமாக இருந்த கிராமங்களே எல்லாம் சீர்திருத்தி விட்டார்கள். நகர்ப் புறத்தில் இருக்கும் படித்துப் பட்டம் பெற்ற பஞ்சாபி இளைஞர்கள் எல்லாம் கிராமங்களுக்குச் சென்று கிராம முன்னேற்றத்துக்குப் பாடுபடுகிருர்கள். "கிராமத்தைச் சீர்திருத்தி அங்குள்ள மக்களே முன்னுக்குக் கொண்டு வரும்படியான உணர்ச்சியைப் பஞ்சாப் கல்லூரிகளில் ஊட்டி வருகிருர்கள்" என்ருர் எங்களுடன் வந்த அதிகாரி.

இதைக் கேட்டதும் என் கண்களில் கண்ணீர் வந்து விட்டது. தேசம் முன்னேறுவதற்கு இதல்லவோ வழி. தேசபக்தி யென்ருல், இது அல்லவோ தேசபக்தி! அவ்வளவு தேசபக்தியும், கிராம முன்னேற்றத்தில் ஆவல் கொண்டிருக்கும் பஞ்சாப் இளைஞர்களேப் பார்க்க வேண்டாமா! அவர்கள் உழைப்பால் முன்னுக்கு வந்திருக்கும் பஞ்சாபின் கிராமங்களைப் பார்க்காமல் நாம் பஞ்சாபுக்கும், பெப்சுக்கும் வந்து என்ன பிரயோஜனம்! எனவே நாளைக்குப் பஞ்சாபில் உள்ள பல்வேறு கிராமங்களேப் பார்ப்பதற்குப் போகலாம்; தயாராக இருங்கள். (தொடரும்)



உள்ளம் உயர்ந்தது!

ரா. வீ.

அன்று அவனது எசமானரின் பிள்ளைக்குப் பிறந்த நாள். பங்களா முழுவதும் வெகு நன்றாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. சின்ன எசமானரின் சின்னஞ்சிறு நண்பர்கள் அனைவரும் அழைக்கப்பட்டிருந்தனர். எசமானரும் எசமானியம்மாளும் வெகு உற்சாகத்துடனும் மகிழ்ச்சியுடனும் குழந்தைகள் விருந்துக்கும் கேளிக்கைகளுக்கும் பிரமாதமாக நேர்த்தியான ஏற்பாடுகள் செய்திருந்தார்கள்.

ராகவனுக்கும் அன்று ஓய்வே கிடைக்கவில்லை. அவன் அந்த வீட்டை விட்டு அந்தண்டை இந்தண்டை அசைய முடியவில்லை. வாசலில் தோரணங்கள் கட்டுவது, பலவித வர்ணக் கொடிகள் தயாரித்து வீட்டை அலங்கரிப்பது, மேஜை நாற்காலிகளைத் துடைத்துத் தூசு துப்பட்டையின்றி வரிசைப்படுத்திப் போடுவது போன்ற காரியங்களில் ராகவன் ஈடுபட்டிருந்தான். அவனுடைய சின்ன எசமானருக்கல்லவா பிறந்த நாள்! அதில் அவனுடைய மகிழ்ச்சிக்கு மட்டும் ஒரு குறைவு இருக்க முடியுமா!

விருந்தாளிகள் அனைவரும் வந்துவிட்டார்கள். எசமானர் தாமே முன்வந்து எல்லோரையும் வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றார்.

ஆகா! எத்தனை குழந்தைகள்! அத்தனை குழந்தைகளும் அணிந்து வந்திருந்த பாதரட்சைகளினால் அந்தப் பங்களாவின் வராந்தா முழுவதும் நிறைந்து விட்டது. விதவிதமான ஸ்லிப்பர்கள்! விதவிதமான பூட்ஸ்கள்!' சின்னச் சின்ன பூட்ஸ்கள்! சிங்கார பூட்ஸ்கள்!

சுவரோடு ஒட்டி உட்கார்ந்து செருப்புகளைப் பார்த்துக் கொண்டிருந்த ராகவனின் கண்கள் ஒருமுறை அவனது கால்களைப் பார்த்துக் கொண்டன. வெற்றுக்கால்; மண்ணும் தூசியும் படிந்து மங்கலாகக் காட்சியளித்துக் கொண்டிருந்தது. கோடை, மழை, குளிர் எதையும் பாராமல் தெருவில் வெறுங் காலுடன் நடந்ததனால் அவன் கால்கள் தேய்ந்திருந்தன. அவன் வாழ்க்கையில் செருப்பு வாங்கி அணிந்து கொள்ளும் பாக்கியமே அவனுக்கு அதுவரை கிட்டியதில்லை.

அவனுக்குக் கிடைக்கவில்லையென்றால் கூடப் பாதகமில்லை. அவனது சின்னஞ் சிறு அருமை மகனுக்காவது அவனால் ஒரு ஜோடி செருப்பு வாங்கிக் கொடுக்க முடிந்ததா!

அந்தச் சின்னஞ் சிறு பாலகன் இந்நேரம் என்ன செய்து கொண்டிருப்பான்! இந்தத் தகிக்கும் வெய்யிலில், உருகிக் கொதிக்கும் தார் ரோட்டில் வெற்றுக் கால்களுடன் ஐஸ்கிரீம் விற்றுக் கொண்டிருப்பான்! வேறு என்ன செய்து கொண்டிருப்பான்! அப்பப்பா! அனலைக் கக்கும் இந்த வெய்யிலில், தெருக்கள்-அதுவும் தார் போட்ட தெருக்கள் – உலையில் காய்ந்த செம்பாக அல்லவா கொதித்துக் கொண்டிருக்கும்! அதில் வெற்றுக் காலுடன் நடக்கும் அவன் பாதங்கள் எப்படிப் பொரிந்து கொண்டிருக்கும்! பற்றி எரிந்து கொண்டிருக்கும்! கால்களில் கணக்கற்ற கொப்புளங்கள் அல்லவா உண்டாகி யிருக்கும்!

"குழந்தைக்கு ஒரு ஜோடி செருப்பு வாங்கிக் கொடுங்களேன்!" தினம் பொழுது விடிந்தால் பொழுது போனால் ரங்கனின் தாயாரின் ராமஸ்மரணை இதுவாகவே இருந்தது.

"கையில் காசு சேரட்டும். அவனுக்கு இல்லாததா! கட்டாயம் வாங்கிக் கொடுக்கிறேன்!" என்று ஒருநாளைப் போல் இதே பதிலைத்தான் ராகவனும் சொல்லி வந்து கொண்டிருக்கிறான். ஆனால் நாட்கள் ஓடிக் கொண்டே யிருந்தன......ஆம், காலம் எங்கேயாவது தயங்கி நிற்பது உண்டா!

ஒருநாள் ரங்கனின் கால் கட்டை விரலில் ஒரு கல் இடறிக் காயம் பட்டு விட்டது. அவன் பாதங்கள் ரத்தத்தினால் சொட்டச் சொட்ட நனைந்து விட்டன. அவன் அழுது கொண்டே வீட்டுக்கு வந்து சேர்ந்தான். அவனுடைய அந்த நிலைமையைக் கண்ணுற்ற ராகவனின் கண்கள் நீரைக் கக்கின. இதுவும் ஒரு வாழ்க்கையா! அருமைக் குழந்தைக்கு ஒரு ஜோடி செருப்பு வாங்கிக் கொடுக்க முடியாத வாழ்க்கை என்ன வேண்டிக் கிடக்கிறது!

எசமானர் என்றைக்காவது ஒரு நாள் மனமிரங்கித் தன் குழந்தையின் பழைய செருப்பு ஒன்றை எடுத்துத் தன்னிடம் கொடுத்துவிடுவார் என்று அவன் நம்பி யிருந்தான். சின்ன எசமானரிடம் வேண்டிய ஜோடிகள் இருந்தன. ஆனால் ஒன்றாவது பழையதானால்தானே! அல்லது அறுந்தால்தானே! முன்பு ஒரு சமயம் அவன் எசமானர் அவனுக்குத் தமது பழைய செருப்பு ஒன்றைத் தாராளமான மனத்துடன் வழங்கி யிருந்தார். அவன் அதை வெகு சாவதானமாக எத்தனையோ வருஷங்கள் பொத்திப் பொத்தி வைத்துக் கொண்டிருந்தான். அது அறுந்து அவலமாகிப் போட்டுக் கொள்ள முடியாமற் போன பிறகுதான் அவன் அதை விட்டெறிந்தான். இனி எப்பொழுது அவன் மீது எசமானரின் கருணை கடாட்சம் விழுமோ, யார் கண்டார்கள்! அதுவரை அவனுடைய பாதங்கள் கட வேண்டியதுதானே!

ராகவன் இம்மாதிரி சிந்தனையில் ஆழ்ந்து உட்கார்ந்திருந்தான். உள்ளே வெகு விமரிசையாக விருந்து நடந்து கொண்டிருந்தது. எல்லோரும் சிரித்துப் பேசியவாறு விருந்து அருந்



நிக் கொண்டிருந்தனர். கிராமபோன் சினிமாப் பாட்டுக்களை இசைத்துக் கொண்டிருந்தது.

ராகவன் மறுபடியும் பார்த்தான். செருப்புகள் மலையாகக் குவிந்திருந்தன. அவற்றில் தான் எத்தனை திறுசுகள்!

திடீரென்று மின்னல் வெட்டுவது போல் அவன் மூளையில் ஒரு எண்ணம் ஒளிவிட்டது. ஒரு ஓரப்புறமாக ஜன்னலுக்குக் கீழே வைக்கப்பட்டிருந்த ஒரு ஸ்லிப்பர் ஜோடி அவன் கண்களையும் கருத்தையும் கவர்ந்தது. அந்த மாதிரி அழகிய ஸ்லிப்பரை அவன் கண்டதில்லை. ரங்கனின் கால்களுக்குக் கன கச்சிதமாகச் சேரும் என்றது அவன் மனம். அந்த யோசனையில் ஒருமுறை அவன் பார்வையை இங்கும் அங்கும் ஓட்டினான். அக்கம் பக்கத்தில் யாரும் ஜனநடமாட்டம் இல்லை. அவன் மெதுவாகப் பேசாமல் எழுந்தான். ஸ்லிப்பர் இருந்த இடத்தை அடைந்து அந்தக் கறுப்பு ஸ்லிப்பர்களை அவசரம் அவசரமாக எடுத்தான். அடுத்த கணம் சட்டையின் பக்கத்துப் பைக்குள் திணித்துக் கொண்டான். பிறகு ஒன்றுமே தெரியாதவன்போல் முற்றத்தில் சென்று ஒரு மூலையில் சுவரோடு ஒட்டினாற் போல் உட்கார்ந்து கொண்டான்.

உட்கார்ந்து கொண்டால் மட்டும் ஆயிற்றா! ராகவனின் மனத்தை விதவிதமான எண்ண அலைகள் எழும்பி மூழ்கடிக்கத் தொடங்கி விட்டன. அவன் என்ன காரியம் செய்து விட்டான்! திருட்டுத் தொழிலை யல்லவா செய்து விட்டான்! அதுவும் திருடியது எதை! செருப்பை யல்லவா! செருப்பைத் திருடிச் சட்டைப் பைக்குள் அல்லவா மறைத்து வைத்துக் கொண்டான்! அவன் அக் காரியத்தில் ஈடுபட்டிருக்கும்பொழுது யாராவது பார்த்து விட்டால்......! செருப்புத் திருடன் என்றல்லவா தூற்றுவார்கள்! அவனுடைய எசமானருக்குத் தெரிந்துவிட்டால்......! அவன் வேலையே அல்லவா போய்விடும்!

"திருட்டுப் பயலே! தொலை, இங்கிருந்து! என் கண் முன் நில்லாதே!" என்று கூறி அவனை வெளியேற்றிவிட மாட்டாரா!

எத்தனை நாட்களாக அவன் அவர் வீட்டில் வேலை பார்த்து வந்திருக்கிறான்! இதுபோன்ற காரியத்தை அவன் என்றைக்காவது செய்திருக்கிறானா! இத்தகைய தீய எண்ணம்தான் அவன் மனத்தில் எழுந்தது உண்டா! இன்று திடீரென்று அவனுக்கு என்ன வந்துவிட்டது! அவன் என்ன காரியம் செய்யத் துணிந்து விட்டான்! இந்தத் திருட்டு கண்டு பிடிக்கப்படுமானால், அப்புறம் அவன் எசமானர் அவனை நம்புவாரா!

அது சரி. இந்த விஷயம் அவருக்கு எப்படித் தெரியும்! அவனை அந்தக் காரியம் செய்யும்பொழுது யார் பார்த்தார்கள்! யாருமே நாய் பேய் தூக்கிக்கொண்டு போயிருக்கும் என்றுதான் எண்ணுவார்கள்.

அவன்மேல் யாருக்குமே இப்படி ஒரு சந்தேகம் எழாது. அப்படியே யாருக்காவது சந்தேகம் ஏற்பட்டாலும், அவனுடைய சின்ன எசமானர், பெரிய எசமானர், எசமானியம்மாள் இந்த மூவருக்கும் ஒருகாலும் அவன்மேல் அவநம்பிக்கை ஏற்படாது. அவன்மேல்தான் அவர்களுக்கு எத்தனை நம்பிக்கை!

ராகவன் அப்படிப்பட்ட மனுஷ்யன் இல்லை. அவன் இதுபோன்ற காரியங்களில் இறங்கியே இருக்க மாட்டான் என்று சொல்லிச் சந்தேகம் ஏற்படுவதற்கு இடமே கொடுக்கமாட்டார்கள்.

ராகவன் இம்மாதிரி யோசித்தவாறே சுவரோடு இன்னும் ஒட்டினாற்போல் சம்பணம் கொட்டிக் கொண்டு உட்கார்ந்து விட்டான்.

விருந்து முடிந்து எல்லோரும் வெளியே வந்தார்கள். பாக்கு வெற்றிலை வாங்கிக் கொண்டு சிலர் விடைபெற்றுக் கொண்டார்கள். சின்னஞ் சிறு பாலர்களும் சிரித்துக் கொம்மாளம் அடித்துக் கொண்டே வராந்தாவுக்கு வந்தார்கள். பிறகு தங்கள் தங்கள் செருப்புகளைப் போட்டுக் கொண்டு வெளியே புறப்பட்டார்கள்.

ஒரு ஒல்லிப் பையன் மட்டும் ஜன்னலண்டை சென்று தன் செருப்பைத் தேடலானான். அதைப் பார்த்த ராகவனுக்குத் திக்கென்றது. பாவம்! ஒருவேளை ஸ்லிப்பர் இவனுடையதாக இருக்குமோ! அந்தப் பையன் தேடித் தேடிச் சலித்து விட்டான். பிறகு முகத்தில் வருத்தக் குறி தாண்டவமாட வீட்டுக்குள்ளே சென்று விட்டான்.

என்ன ஆகும்! எசமானரிடம் போய்ச் சொல்லுவானோ! ராகவன் ஒன்றுமே அறியாதவன்போல் முகத்தை வைத்துக் கொண்டு முற்றத்திலிருந்து இறங்கி வாசற்புறத்துக்குச் சென்று விட்டான். பிறகு மெதுவாக வீட்டுத் தோட்டத்தைத் தாண்டித் தெருவுக்குப் போனான். பக்கத்து வெற்றிலைப் பாக்குக் கடைக்குச் சென்று ஒரு பீடி வாங்கிப் பற்ற வைத்தான். அவன் திரும்பியதும் திரும்பாததுமாக, "எங்கே போயிருந்தாய், ராகவா! உன்னை அப்பா தேடிக் கொண்டிருக்கிறாரே!" என்றான் சின்ன எசமானன்.

ராகவன் கோரம் ஆடிக் கொண்டிருந்த பையன்களைத் தாண்டி அறைக்குள் நுழைந்தான். அந்தக் குழந்தைகளின் மத்தியிலே

தான் கோடு போட்ட சட்டை அணிந்து கொண்டு, அந்த ஒல்லிப் பையனும் இருந்தான்.

எசமானரும் எசமானியம்மாளும் உட்கார்ந்து தங்கியிருந்த நண்பர்களுடன் பேசிக் கொண்டிருந்தார்கள். ராகவன் அவர்களருகே சென்று கைகட்டி வாய் புதைத்து நின்றான்.

அவனைப் பார்த்த நண்பர்கள், "இவன் தானா!" என்று ஏககாலத்தில் கேட்டார்கள்.

ராகவனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. தன் குட்டு வெளிப்பட்டு விட்டதோ என்று அஞ்சினான். செய்வதைச் செய்தாகி விட்டது. இனி பயந்தால் கட்டி வருமா! உரலில் தலையைக் கொடுத்தபின் உலக்கைக்குப் பயந்து என்ன பிரயோஜனம்? இதை எண்ணிய ராகவன் தன் அச்சத்தை வெளிக்காட்டிக் கொள்ளாமல் சுதாரித்துக் கொண்டான்.

"ஆம், இவன்தான்! எங்கள் வீட்டுக்கு இவன் வேலைக்கு வந்து பன்னிரண்டு வருஷங்கள் ஆகிவிட்டன. மிகவும் நல்லவன், நாணயம் உள்ளவன். இவனை நம்பி நாங்கள் வீட்டைக்கூட விட்டுச் செல்வதுண்டு. இதுவரை எந்தவிதமான புகாருக்கோ குறைபாட்டுக்கோ இவன் இடம் வைத்ததில்லை!" என்றார் அவன் எசமானர்.

"வேலைக்காரன் விஷயத்தில் நாங்கள் ரொம்ப பாக்கியசாலிகள்தான்!" என்று ஆமோதித்தாள் எசமானரின் மனைவி.

ராகவனுக்குப் போன உயிர் திரும்பி வந்ததாகவே தோன்றியது. எசமானரின் நண்பர்கள் அனைவரும் ராகவனை ஒரு நோட்டம் விட்டுப் பார்த்தார்கள். அதோடு அவர்கள் பேச்சுக்குத் தலையையும் ஆட்டினார்கள். இந்த நேரத்தில் நம்மைப் பற்றி இப்படிப்பட்ட பேச்சு எதற்காக எழவேண்டும் என்பது ராகவனுக்குச் சரியாக விளங்கவில்லை. கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது என்பார்களே, அதுபோல் நின்று கொண்டிருந்தான்.

இதேசமயம் எசமானரின் நண்பர் ஒருவர் ராகவனைப் பார்த்து, "ஏன், அப்பா! உனக்கு ஊர் எது?" என்று கேட்டார்.

"இதேதானுங்க!" என்று வெகு வினயமாகப் பதில் அளித்தான் ராகவன்.

"உன்னைப் பற்றி உன் எசமானர் ரொம்ப நல்லவன் என்று புகழ்ந்து கொண்டிருக்கிறார். உன்னைப் போலவே எங்களுக்கும் ஒரு நல்ல வேலைக்காரன் பிடித்துத் தருவாயா?"

"பார்க்கிறேனுங்க, எசமான்!" என்றான் ராகவன் குனிந்த தலை நிமிராமல். செருப்புத் திருடியவனை அவனா நல்லவன்! அவன் மனமே அவனைக் குத்தியது.

"நீங்கள் மிக பாக்கியசாலிகள்! இக்காலத்தில் இம்மாதிரி மனிதன் வேலைக்குக் கிடைப்பது கஷ்டத்திலும் கஷ்டம். எங்கள் வீட்டில் ஒருவன் நான்கே நான்கு மாதங்கள்தான் இருந்தான். அதற்குள் நான்கைந்துபொருள்கள் கெட்டுப் போய்விட்டன!" என்றார் ஒருவர்.

"அந்தப் பொல்லாத திருட்டுப் பயலைப் போலீஸில் ஒப்படைக்கிறதுதானே!" என்றாள் எசமானியம்மாள்.

ராகவன் அவர்கள் பேச்சைக் கேட்டான். உடல் முழுவதும் ஒரு மின்சாரம் பாய்ந்தது போலிருந்தது. மனத்தைத் தூக்க முடியாததொரு சுமை அழுத்தியது. தன் திருட்டைத்



தானே சொல்லி மன்னிப்புக் கேட்டுக் கொண்டு விடலாமா என்றுகூட எண்ணினான். அப்படிச் செய்தால் அவனுக்கிருந்த அந்த நல்ல பெயர் போய் விடாதா! மனச்சாட்சி அவனைக் குத்திக் குளறி எடுத்து விட்டது.

அதற்குள்ளாக அநேகமாக எல்லோருமே விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டு விட்டனர். அதே சமயம் குட்டி எசமானன் வந்து, "அப்பா, மோகன் வீட்டுக்குப் போகிறேன் என்கிறான்!" என்றான்.

"அவனுடைய செருப்புக் கிடைத்து விட்டதா!" என்று கேட்டார் எசமானர்.

ராகவன் மறுபடியும் துணுக்குற்றான்.

"இல்லை!" என்றான் குட்டி எசமானன்.

"உம். ஏதாவது நாய் கவ்வி எடுத்துக் கொண்டு போயிருக்குமோ என்று தோன்றுகிறது.—ஏன், மோகன்! இப்பொழுதே போக வேணுமா!" என்று கேட்டார் எசமானர்.

"ஆமாம். இப்போ போய் விட்டுச் சாயந்திரமாக வருகிறேன்!" என்றான் மோகன்.

"சரி. போய் விட்டு வா! வெய்யில் ரொம்ப அதிகமாக இருக்கிறது. கொஞ்சம் நிழலோடு போ. அப்பாவை நான் ரொம்ப விசாரித்ததாகச் சொல்லு! — ராகவா, நீயும் பின்னோடு போய்க் குழந்தை மோகனை அவன் வீட்டில் கொண்டு விட்டு வா!" என்றார் எசமானர்.

"சரிங்க!" என்று சொல்லி ராகவன் மோகனுக்குப் பின்னாலேயே சென்றான்.

மோகனும் ராகவனும் தெருவில் இறங்கி நடக்கலானார்கள். வெய்யில் கொளுத்திக் கொண்டிருந்தது. தெருவில் தீ பறந்து கொண்டிருந்தது. உள்ளங் காலில் சுடு சுர் என்று உறைத்தது. ராகவனாலேயே நடக்க முடியவில்லை. அப்படியிருக்கும்பொழுது மோகனால் எப்படி அடி எடுத்து வைக்க முடியும்! அவன் குஞ்சுக் கால்கள் தரையைத் தொடவே தயங்கின. துடித்துப் போய் அழாத தோஷமாக ஓடி ஒரு மரத்தின் நிழலில் நின்றான்.

முன்னால் போய்க் கொண்டிருந்த ராகவன் திரும்பி, "என்ன!" என்று கேட்டான்.

"காலைக் கடுக்கிறது!" என்று சொன்ன மோகனுக்கு அழுகையே வந்துவிட்டது.

"ஒரு ரிக்ஷா கொண்டு வரட்டுமா!" என்று கேட்டான் ராகவன்.

"வேண்டாம். செருப்புக் கெட்டுப் போன சமாசாரத்தைக் கேட்டாலே அப்பா என் முதுகுத் தோலை உரித்து விடுவார். ரிக்ஷாவில் போனால் அப்புறம் அனர்த்தம்தான். 'ஒரு பத்தடி நடந்து வருவதற்கு முடியவில்லையோ, ராஜ குமாரனுக்கு!' என்று கேட்பார்!" என்றான் மோகன்.

மோகனின் கண்களில் கண்ணீரைக் கண்டு விட்ட ராகவனுக்கு நெஞ்சம் இளகிவிட்டது. "அப்படியானால் மெதுவாக நடந்து வா, குழந்தை. இல்லாவிட்டால் நான் தூக்கிக் கொண்டுவரட்டுமா உன்னை!" என்று கேட்டான்.

"வேண்டாம்!"

மோகன் மறுபடியும் நடக்கலானான், கண்களில் துளித்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டே.

அவர்கள் பாதி தூரம் கூடப் போயிருக்க மாட்டார்கள். மோகனின் கால்கள் கன்றிச் சிவந்து விட்டன. போதாக் குறைக்கு உருகி யிருந்த தார் வேறு கால்களில் ஒட்டிக் கொண்டது.

கள்ளங்கபடமற்ற குழந்தையான மோகனின் முகத்தையும் கண்களில் தேங்கி நின்ற கண்ணீரையும் கண்ட ராகவனுக்கு மனத்தை என்னவோ செய்தது.

'தான் செய்த தீய செயல் காரணமாகத் தான் இந்தப் பிஞ்சுக் குழந்தைக்கு இத்தனை கஷ்டமும்!' என்ற எண்ணம் அவனை அடங் காத் தாபத்துக்கு ஆளாக்கியது.

அவன் கால்களுமே கூடத் தடுமாறின. வெக்கைக் காற்று வேறு அடித்துக் கொண் டிருந்தது. மேலே தலையும் கீழே கால்களும் வெய்யில் காரணமாகப் பொசுங்கிப் போகலா யிக் கொண்டிருந்தன.

அதே சமயம் திடுதிப்பென்று ராகவனுக்குத் தன் குழந்தையின் நினைவு தோன்றியது. அவனும் இப்படித்தானே காலில் ஒன்றும் இல்லாமல் ஐஸ்கிரீம் விற்றுக் கொண்டிருப் பான்!......எந்தத் தெருவில் இருப்பானோ! அப்பா! என்ன வெய்யில்! என்ன வெய்யில்! இந்த வெய்யிலில் குழந்தைகளை எந்தக் காரணத்தைக் கொண்டும் வெளியிலேயே அனுப்பக் கூடாது.

மோகன் மறுபடியும் ஒரு மரத்தின் அடியில் நின்று விட்டான். பொறுமை கடந்து விடவே வாய் விட்டு அழவே தொடங்கி விட்டான். அவன் பாதங்களில் கொப்புளங்கள் கண்டு விட்டன.

ராகவனின் ஆத்மா அதைக் கண்ணுற்று நடு நடுங்கி விட்டது. என்ன காரியம் செய்து விட்டான் அவன்! முறுக்கிய சாட்டையை எடுத்துக் கொண்டு ஓங்கி அடிப்பது போலத் தோன்றியது அவனுக்கு. அடுத்த கிமிஷமே உள்ளத்தின் உள்ளிருந்து ஒரு குரல் வந்தது.

"அடே பாவி! எடடா, வெளியே எடடா! குழந்தையின் ஸ்லிப்பரை எடுத்துக் குழந்தையி டமே கொடடா! — குழந்தையின் கால் களைப் பாரடா! பூம்பாதங்கள் எப்படிச் சிவந்து போய் விட்டன, பாரடா! உனக்கு வெட்கமா யில்லை! உனக்கும் ஒரு குழந்தை இருக்கிறதே! அதன் கால்களைக் கட்டால் உனக்கு எப்படி யிருக்கிறது! அதுபோலத்தானேயடா இந்தக் குழந்தையும்! இந்தக் குழந்தை என்னடா பாவம் செய்தது! ஏனடா, இந்தக் காரியம் செய்யத் துணிந்தாய்! நீயும் ஒரு தகப்பனாக இருந்து கொண்டு இந்த அறியாக் குழந்தையை இப்படி வருத்துகிறாயே! எடு! பையிலிருந்து எடுத்துப் பாலகனின் பாதங்களில் மாட்டு. உம், சீக்கிரம்! நீ ஒரு மனிதன். மிருகமாக நடந்து கொள்ளாதே! சொல்வதைக் கேள்!"

ராகவன் அப்படியே அயர்ந்து விட்டான். அவன் குற்றவாளியைப் போலப் பேசாமல் பையிலிருந்து செருப்பை எடுத்தான். பிறகு வறண்ட குரலில், "ஏன், குழந்தாய்! இது உன் செருப்பு இல்லையே!" என்று கேட்டான்.

"இதேதான் என் செருப்பு! எங்கேயிருந் தது!" என்று மிகுந்த உற்சாகத்துடன் கேட்டான் மோகன்.

"தோட்டத்தில் ஒரு மரத்தின் அடியில் நாய் கொண்டு போட்டிருந்தது, குழந்தாய்! நான் வேறு யாருடையதாகவாவது இருக் குமோ என்று எண்ணினேன். என் புத்தி யைச் செருப்பால்தான் அடிக்கணும். இதை எடுத்துப் பையில் வைத்துக் கொண்டதை அடியோடு மறந்து விட்டேன். இல்லா விட்டால் அப்பொழுதே கேட்டிருக்க மாட் டேனா! - சரி, சரி! சீக்கிரம் போட்டுக் கொள் குழந்தை, இந்தச் செருப்பை!" என் றான் ராகவன்.

மோகன் அந்தச் செருப்பைக் காலில் மாட் டிக் கொண்டு நடக்க ஆரம்பித்த பொழுது ராகவனுக்கு ஏற்பட்ட ஆனந்தத்தைப் போல் வேறு யாருக்கு ஏற்பட்டிருக்க முடியும்!

[ஒரு தெலுங்குக் கதையைத் தழுவியது.]

அனுதாபப் படுகிறோம்

"கெடுவாய், நமனே கெடுவாய்!" என்று ஒரு புலவர், யமனை வைதார். இதற்குக் காரணம் கூவத்து நாரணன் என்ற இரக்க சிந்தையுள்ள வள்ளலின் உயிரை அபகரித்துக் கொண்டு போனதுதான். ஏழைகளிடம் இரக்கமுள்ளவர்கள் யார் மறைந்தாலும், உலக மக்களின் மனம், அவர்களை யறியாமலே, 'கெடுவாய் நமனே கெடுவாய்' என்றுதான் கூறும். சமீபத்தில் கேசரி குடீரம் ஸ்தாபனத்தின் சிப்பந்திகள் அப்படிக் கூறும்படி யான நிலை நேர்ந்தது.

கேசரி குடீரம் ஸ்தாபனத்தின் நிர்வாக டைரக்டரும், காலம் சென்ற டாக்டர் கே. என். கேசரியின் மனைவியுமான கோமட்டில் மாதவியம்மா, 16—12—55 அன்று தமது 65வது வயதில் காலமானார். அவரது சகைப் பண்புக்கு இலக்கானவர்கள் எத் தனையோ பேர்! அவரது பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தாருக்கும் நண்பர் களுக்கும் நமது மனமார்ந்த அனுதாபங்கள்.



உற்சாகம் செழித்திருக்க

புது சக்தியை அளிக்கும்

பை-கொலேட்ஸ்

முறையாக உபயோகியுங்கள்

வீரருக்கு ஊக்கமூட்டுவதில் மிகச் சிறந்தது

கெடுக்க முடியாத புது சீலுடன்



1856 - 1956 மகத்தான நூறு ஆண்டுகள் சேவை!

B. I. S. N. கம்பெனி லிமிடெட்



S. S. ரஜுலா

சென்னை - நாகப்பட்டினம் - பினாங்கு - சிங்கப்பூர்

மேற்படி கப்பல் கீழ்க்கண்ட தேதி வாக்கில் புறப்படும்

சென்னையிலிருந்து	நாகப்பட்டினத்திலிருந்து
1956 பிப்ரவரி 3	1956 பிப்ரவரி 4

பிரயாணத்திற்குரிய தஸ்தாவேஜுகளைக் காண்பித்து வேண்டிய அளவு "பங்க்" வசதியுள்ள டிக்கட்டுகளையும், "பர்த் வசதியற்ற" டிக்கட்டுகளையும், "சாப்பாட்டுடனோ" அல்லது "சாப்பாடின்றியோ" எங்கள் கம்பெனியின் ஏஜெண்டிடமிருந்து நேரடியாகப் பெற்றுக் கொள்ளலாம்.

'ரஜுலா' கப்பல் சமீபத்தில் புதுப்பிக்கப் பட்டிருக்கிறது. பங்க் வசதி பெற்றுள்ள பிரயாணிகளும் பெர்த் வசதியற்ற பிரயாணிகளும் இப்பொழுது நிறைய விளக்கு வசதிகளையும், அதிகப்படியான பங்காக்களையும், புதுக் காற்று புளோயர்களையும், ஷவர், வாட்டர்கூலர் ஆகிய வசதிகளையும், சைவ உணவுக்காரர்களுக்குத் தனி வசதிகளுடன் கூடிய ஒரு பெரிய சாப்பாடு அறையும் பெறலாம். எல்லா பிரயாணிகளும் தமிழ் மற்றும் ஹிந்தி சினிமா படங்களையும் பார்க்கலாம்.

பினாங், போர்ட் ஸ்வெட்டன்ஹாம், சிங்கப்பூர் முதலிய இடங்களுக்கு நேரடியாக ஏற்றிச் செல்லவும் சிங்கப்பூரில் கப்பல் மாற்றி பாங்காக்கிற்கு அனுப்பவும் சரக்குகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

பிரயாணிகள் மற்றும் சாமான்கள் ஏற்றுமதி விவரங்களுக்குத் தயவுசெய்து எழுதவும்

பின்னி & கோ., (மதராஸ்) லிமிடெட்	மதுரா கம்பெனி லிமிடெட்
7. அரமனைக்காரத் தெரு, சென்னை-1	முதல் லைன் பீச் ரோடு, நாகப்பட்டினம்

ரகுபதி ராகவ



[அகமதாபாத் நவஜீவன் காரியாலயத்தினர் பிரசுரம் செய்திருக்கும் 'சத்தியமே தெய்வம்' என்னும் காந்தி வசன மஞ்சரியிலிருந்து ராஜாஜி எடுத்து எழுதியது]

10

ஸ்விஸ் நாட்டில் ஒரு சமயம் நடந்த சம்பாஷணையில் காந்தியடிகள் சொன்னதன் சாராம்சம் :

சத்தியமே தெய்வம் என்று ஏன் சொல்கிறாய் என்பது உங்கள் கேள்வி. நான் சிறுவனாயிருந்தபோது ஹிந்து சம்பிரதாயப்படி ஆண்டவனுடைய ஆயிரம் நாமங்களைப் பாடக் கற்றேன். ஆண்டவனுக்கு நாமங்கள் ஆயிரம் அல்ல, இன்னும் அதிகத் தொகையே. உலகத்தில் எத்தனை ஜீவன்கள் இருக்கின்றனவோ, அத்தனை ஜீவன்களின் பெயர்களும் கடவுளின் பெயர்கள் ஆகும். இதனாலேயேதான் ஆண்டவன் பெயரில்லாதவன் என்கிறோம். ஆண்டவன் அநேக ஸ்வரூபம் கொண்டவன். அதனாலேயே அவனை ரூபமற்றவன் என்கிறோம். அவன் ஆயிரக்கணக்கான பாஷைகள் பேசுகிறான். இதனால் அவனைப் பேச்சற்றவன் என்கிறோம்.

நான் இஸ்லாம் மதத்தை ஆராய்ந்தேன். அதிலும் ஆண்டவனுக்கு அநேகம் பெயர்கள் உண்டு என்று அறிந்தேன். அன்பே கடவுள் என்பார்கள். அதற்கும் நான் ஆமென்று சொல்லுவேன். ஆயினும் என்ன காரணமோ என் மனத்தில் சத்தியமே கடவுள் என்கிற கருத்து உறுதிப்பட்டு வந்திருக்கிறது. மற்ற எல்லா குணங்களையும் விட இதுவே அவனுடைய முக்கிய இலக்கணம் அல்லது பண்பு என்பது என்னுடைய எண்ணம். நம் அறிவைக் கொண்டு நாம் கடவுளை விளக்க முடியுமானால், உண்மையே கடவுளின் முழு விளக்கம் என்று சொல்ல வேண்டும். இரண்டு வருஷத்துக்கு முன் வரையில் இது என் அபிப்பிராயமாக இருந்து வந்தது. பிறகு அதற்கும் ஒரு படி மேலே சென்றுவிட்டேன். சத்தியமே கடவுள் என்கிற முடிவுக்கு வந்தேன். சத்தியமே பகவானுடைய உருவம் என்பது என்னுடைய • கொள்கையாயிற்று. பல்வேறு மூர்த்தியாக ஆண்டவனைப் பாவிக்கிறார்கள் அல்லவா, அந்த முறையில் என் இஷ்டா மூர்த்தி சத்தியம்.

அன்பை ஏன் அவனுடைய வடிவமாக வைத்துக் கொள்ளக் கூடாது என்று கேட்கலாம். அன்புக்கு உலகத்தில் பல பொருள் கொள்வார்கள். ஒரு பொருளில் அன்பு காமவேகம் ஆகிறது. உண்மையில் அன்பு வெறும் காமவேகம் ஆகுமா? இல்லை. ஆனபோதிலும் சத்தியம் இம்மாதிரிப் பல பொருள்களில் அடிபடுவதில்லை. நாஸ்திகர்களும் கூட சத்தியத்தை வழிபடுகிறார்கள். ஏன், சத்தியத்தில் அவர்களுக்குள்ள தீவிர பற்றினால் அவர்கள் உள்ளத்தில் எழும் சந்தேகத்தை வைத்து, கடவுளே இல்லை என்ற அளவுக்குச் சொல்கிறார்கள். சத்தியத்தில் அவர்களுக்குள்ள அபார மதிப்பும் பற்றும் இவ்வளவு தூரம் செல்கிறது. இவற்றையெல்லாம் ஆராய்ந்து பார்த்தால் உலகத்தில் அனைவரும் ஆராதிக்கும் பொருள் சத்தியமானபடியால் அதுவே கடவுளின் சரியான வடிவம் என்று என் கருத்தில் பட்டது. சத்தியமே தெய்வம் என்று சொல்ல ஆரம்பித்தேன். கடவுளின் பல

ராஜாஜி

பண்புகளில் சத்தியம் ஒன்று என்று சொல்லி வந்ததை விட்டுவிட்டு, சத்தியமே கடவுள் என்று மாற்றிக் கொண்டேன்.

ஆனாலும் ஒன்று உறுதியாகச் சொல்லுவேன். கடவுளுக்கு அதாவது சத்தியத்திற்கு எது நேர் வழி என்று பார்த்தால் அன்பு ஒன்றே சரியான நேர்வழி. சத்தியத்தைப் பற்றி யாரும் விவாதிப்பதில்லை. அதைக் குறை கூறுவாரே இல்லை. நாஸ்திகர்களுங் கூடச் சத்தியம் என்றால் அதற்குத் தலை வணங்குகிறார்கள். ஆயினும் உண்மையைக் காண வாழ்நாள் முழுதும் உழைக்கும் விஞ்ஞானிகள் உண்மையைக் காண்பதற்காகப் பெருந் தவறுகளும் செய்கிறார்கள். பிராணிகளை உயிருடன் இம்சை செய்கிறார்கள். உண்மையைக் காணத்தான் இப்படிச் செய்கிறார்கள். ஆனபடியால் உண்மையே கடவுள் என்று விவகரிப்பதிலும் கஷ்டங்கள் இருந்து வருகின்றன. ஒப்புக் கொள்ளுகிறேன். விளக்க முடியாத ஒரு பொருளை விளக்கித் தீர்க்க முயல்வதில் எப்படி வெற்றி காண முடியும்? முடியாது. நமது ஆராய்ச்சிக் கருவி நம்முடைய புத்தி. அதைத் தவிர வேறு இல்லை. அந்தக் கருவி ஒரு வரம்புக்குள்தான் பயன் படும். வரம்பு அற்ற ஒரு பொருளை அந்தக் கருவியைக் கொண்டு எப்படிக் காண முடியும்!

ஹிந்து சாஸ்திரத்தில் இன்னொரு விஷயம் சொல்லப்படுகிறது. கடவுள் உண்டு என்பதைத் தவிர கடவுள் ஒன்றே உண்மை, வேறு ஏதும் இல்லை என்பது ஹிந்து ஞானிகளின் கொள்கை. இஸ்லாமிய மந்திரத்திலும் இப்படியே சொல்லப்படுகிறது. ஆண்டவன் ஒருவனே மெய்ப் பொருள், வேறு ஏதும் உண்மையல்ல என்று இஸ்லாத்தில் சொல்லப்படுகிறது. ஸம்ஸ்க்ருத பாஷையில் சத்தியம் என்கிற பதத்தைச் சோதித்துப் பார்த்தால் அதன் பொருள் "உள்ளது" என்பது தான். (தமிழிலும் அவ்வாறே உண்மை என்றால் உளது என்பது தான் பொருள்.) இதனாலும் இன்னும் சில காரணங்களினாலும் நான் கடவுளை விளக்கும் பல பெயர்களில் மெய்ம்மை உண்மை, சத்தியம்,

என்கிற பெயரே உத்தமமான பெயர் என்கிற முடிவுக்கு வந்தேன். இந்தப் பெயரே என் உள்ளத்துக்குத் திருப்தியும் தருகிறது.

சத்தியம் என்கிற வடிவத்தில் ஆண்டவனைக் காண வேண்டுமானால் அதற்கு வழி அன்பு ஒன்றே என்று சொன்னேன் அல்லவா? எந்த ஜீவனையும் இம்சை செய்யாமல் இருப்பது, அதாவது அகிம்சை,—இது என்னுடைய வாழ்க்கைத் தத்துவம் என்பது உங்களுக்குத் தெரியும். அடையக் கருதும் பயனும் அடையச் செல்லும் வழியும் இரண்டும் ஒன்றே ஆகும் அல்லவா? எனவே சத்தியமே தெய்வம் என்பதும், அன்பே தெய்வம் என்பதும், இரண்டும் ஒன்றே என்று வைத்துக் கொள்ளலாம்.

சத்தியம் என்றால் என்ன என்பது அடுத்த கேள்வி. கஷ்டமான கேள்வி. என்னைப் பற்றிய மட்டில் நான் உணர்ந்தது ஒன்று. உள்ளத்தில் ஒரு குரல் பேசுகிறது. அதன் பேச்சே உண்மை.

பலர் பலவிதமாக அல்லவோ கருதியும் பேசியும் செய்தும் வருகிறார்கள். மாறுபட்டல்லவோ கருத்துகள் நிற்கின்றன. நீ சொல்வது எப்படிப் பொருந்தும் என்று கேட்பீர்கள். ஒருவன் கண்டது அவனுக்கு உண்மை. அது மற்றொருவனுக்கு உண்மை ஆகாது. அவனவன் கண்டதே அவனவனுக்கு உண்மை. உண்மையைக் காணும் முயற்சியில் சில முறைகளைக் கையாள வேண்டும். இல்லாவிடில் பொய்யை மெய்யாகக் கொண்டு பிழைகளில் சிக்கிக் கொள்ளுவோம். பௌதிக ஆராய்ச்சிகளில் சிலசோதனை முறைகள் ஏற்படுத்தி யிருக்கிறார்கள் அல்லவா. அப்படியே ஆத்மீக உண்மையைக் காணும் முயற்சிகளிலும் இன்றியமையாத சில நிபந்தனைகள் உண்டு. ஆத்மீக சோதனையில் ஈடுபடுகிறவர்கள் சில கடினமான விரதங்களை அனுஷ்டிக்க வேண்டும். 'என் உள்ளம் இப்படிச் சொல்லுகிறது. அதுவே எனக்கு உண்மை' என்று சொல்லும் அதிகாரத்தை ஒருவன் பெற வேண்டுமானால் அவன் தன்னுடைய அறிவு, சீலம், ஆற்றல் இவற்றின் வரம்பை உணர்ந்து கொள்ள வேண்டும். ஹிந்துக்களாகிய நாம் அனுபவத்தின் பேரில் விதித்துக் கொண்டிருப்பது என்னவென்றால் கடவுளைக் காணும் முயற்சியில் இறங்குவதற்குமுன் சில விரதங்களைக் காத்து அவற்றில் வெற்றி பெற வேண்டும். வாய்மை விரதம், பிரும்மசரிய விரதம், ஜீவன்களைத் துன்புறுத்தா விரதம், வறுமை வாழ்க்கை, எனது என்று பொருள் திரட்டாமல் இருத்தல், முதலியன. காமிகளுடைய ஆசை வேகத்தைப் போல மெய்ப் பொருளைக் காணும் ஆர்வம் இருக்க வேண்டும். பொருளைத் திரட்டும் வேலை வைத்துக் கொண்டால் இந்த ஆர்வத்துக்கு இடம் இராது. மனைவிக்கும் கடவுளுக்கும் அன்பை வேண்டிய அளவுக்குப் பிரித்துக் கொடுப்பது கஷ்டமான காரியம் என்பதை அனைவரும் கண்டிருக்கிறார்கள். இந்த விரதங்களைக் காத்து வெற்றி பெற்றால் ஒழிய ஒருவன் மெய்ப்பொருளைத் தானே காணும் முயற்சியில் பிரவேசித்தல் கூடாது. இந்த நிபந்தனைகள் மட்டுமல்ல. ஹிந்து சாஸ்திரத்தில் வேறு வழிகளும் உண்டு. அவையெல்லாவற்றையும் இப்போது நான் சொல்லப் புகவில்லை. ஒன்று மட்டும் சொல்லுகிறேன்; என் உள்ளம் இப்படிச் சொல்லுகிறது அதுவே உண்மை என்றும் சொல்லும் அதிகாரம் அனைவருக்கும் இல்லை. இதுவே நம்மோர் அநுபவத்தினின்று கண்ட உண்மை. அதிகாரம் படைக்காதவர்கள் எல்லாம் இது என் மனசாட்சி நான் என் உள்ளத்தில் கண்ட உண்மை என்று சொல்லியும் செய்தும் வருவதாலேதான் உலகத்தில் பலர் உண்மை இல்லாதவற்றை மக்களிடையே குழப்பி வருகிறார்கள்.

அடக்கம் இல்லாதவர்கள் உண்மையைக் காணமாட்டார்கள். உண்மை என்கிற வெள்ளத்தில் படகேறிச் செல்ல அடக்கம் மேற்கொள்ள வேண்டும். அடக்கம் இன்றி அகம்பாவம் கொண்டால், பாரம் அதிகமாகி மூழ்கித்தான் போவோம். நான் என்பதை சூன்யமாக்கிக் கொள்ள வேண்டும். அப்போது ஓடம் சரியாகச் செல்லும்.

[யங் இந்தியா 31—12—31]



எப்பொழுதும் வெற்றி!
குழந்தைகள் விளையாட்டத்தில் விருத்தி அடைய நிறைந்த போஷாக்கு தேவை. விடமின் சேர்க்கையுடைய ருசிமிக்க பார்லேஸ் க்ளூக்கோ பிஸ்கட்டுகள் அதை அளிக்கின்றன.
ஆம் அந்த ரகசியம் இதுதான்.
பார்லேயின் க்ளூகோ பிஸ்கட்டுகள்
புஷ்டிதரும் விடமின்கள் சேர்க்கையுடையவை
Parle Gluco BISCUITS
காற்றுப்புகாத பாக்கெட்டுகளில்



54. பாவைப் பாட்டு (தொடர்ச்சி)

மார்கழி மாதம் மதி நிறைந்த நன்னாளில் வைகை யாற்றிலே இளங் கன்னியர் நீராடுவர்; வையகம் முழுவதும் மழை வளம் தருக என்று மாதேவியை வேண்டுவர்; ஆடலும் பாடலும் நிகழ்த்துவர் என்று பரிபாடல் என்னும் பழந்தமிழ் நூல் கூறுகின்றது. கோகுலத்தில் வாழ்ந்த ஆயர்குலச் சிறுமியர்கள் மார்கழி மாதம் அதிகாலையில் எழுந்து, கண்ணன் புகழ்பாடி யமுனை யாற்றில் நீராடி மகிழ்ந்த செய்தியைப் பாகவத புராணம் குறிக்கின்றது.

"மார்கழித் திங்கள்
மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர்
போதுமினோ நேரிழையீர்
சீர்மல்கும் ஆய்ப்பாடிச்
செல்வச் சிறுமீர்காள்"

என்று திருப்பாவையும் பாடிற்று.

மணிவண்ணனாகிய திருமாலை மனமாரப் பாடி யமுனையில் நீராடிய மங்கையர் ஈர மணல் எடுத்துப் பராசக்தியின் திருவுருவம் செய்தனர். தூபமும் சாந்தமும் கொண்டு போற்றினர்; 'கண்ணிலும் மனத்திலும் நிறைந்து நின்ற கண்ணனை எம் கணவனாகத் தருவாய் அம்மே' என்று கைகூப்பித் தொழுதனர்.

"பனி நிலாக்கதிர் பரப்பிய
முத்தவெண் மணலால்
பனி வரைக்கொடி திருவுரு
பாற்பட வகுத்து
பனி மலர்த்தொடை சூடியும்
பரவியும் நேர்ந்து
பனி இறப்பினில் படர்புனல்
ஆடுவான் படர்ந்தார்"

(பனி வரைக் கொடி - பார்வதி தேவி தொடை - மாலை)

என்ற பாகவதப் பாட்டால் பாவை நோன்பின் தன்மை இனிது விளங்கும்.

"ஆதிப் பரம்பொருளின் ஊக்கம் அதை அன்னை யெனப் பணிதல் ஆக்கம்" என்று பாரதியார் பாடிய முறையில் பராசக்தியை வியந்து திருவெம்பாவை பாடினார் மாணிக்க வாசகரும். மார்கழித் திருவாதிரையோடு முடிவுறும் பத்து நாளிலும் மங்கையர் பார்வதி தேவியின் பாதத்திறம் பாடி நீராடிய பான்மையை,

"மாதர்கோன் மாதர் எல்லாம்
மார்கழித் திங்கள் தன்னில்
ஆதிரை நாள்முன் ஈரைந்து
ஆகிய தினங்கள் தம்மில்
மேதகு மனைகள் தோறும்
அழைத்திருள் விடிய நான
போதினர் தம்மிற் கூடிப்
புனற்றடம் ஆடல் செய்வார்"

(மாதர் - அழகு; திங்கள் - மாதம்; ஈரைந்து - பத்து; தடம் - பொய்கை)

என்ற திருப் பாட்டு உணர்த்துகின்றது.

மார்கழி மாதத்தில் நடைபெறும் விழாக்களுள் தலைசிறந்தது திருவாதிரையேயாகும். "மார்கழி மாதம் திருவாதிரை

கான் வரப் போகுதையே — கட்டையிருக் கையில் சிதம்பரம் போய்க் காண வேணும் ஐயே!" என்று கதறியழுதான் நந்தன் என்னும் நல்ல அன்பன். அந்த முறையில் மார்கழி நீராடும் மங்கையரும் தில்லைச் சிற்றம்பலத்தில் நடனம் ஆடும் ஈசனை நினைந்து ஆனந்தமாய்ப் பாடுவர்.

" ஆர்த்த பிறவித்
துயர்கெடநாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நற் றில்லைச்சிற்
றம்பலத்தே தீயாடும்
கூத்தன்இவ் வானும்
குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும்
கரந்தும் விளையாடி "

(ஆர்த்த - கட்டிய; தீயாடும் - அனல் ஏந்தி ஆடும்; குவலயம் - உலகம்; கரந்தும் - ஒடுக்கியும்)

என்று முத்தொழில் புரியும் முதல்வனைப் போற்றுவர்.

இவ்வாறு மங்கையர் எல்லாம் மகிழ்ந் தாடும் திருநாளைக் காணாது மயிலாப்பூரில் மரணமுற்றாள் பூம்பாவை என்னும் புனித நங்கை. அப்பெண்ணின் தந்தையார் சிவநேசர்; அரனடியாரிடம் அபார அன்புடையவர். திருஞான சம்பந்தர் மயிலாப்பூருக்கு எழுந்தருளிய போது சிவநேசர் அவரிடம் தமது துயரத்தைச் சொல்லி மனங்கரைந்தார். இறந்த பூம்பா வைக்கு உயிர்ப் பிச்சை தரல்வேண்டும் என்று இரந்து நின்றார். அது கண்ட திருஞான சம்பந்தர் உள்ளம் இரங்கினார். ஈசன் அருள் நினைந்து 'பூம்பாவைப் பதிகம்' பாடினார்.

" ஊர்திரை வேலை
உலாவும் உயர்மயிலைக்
கூர்தருவேல் வல்லார்
கொற்றங்கொள் சேரிதனில்
கார்தரு சோலைக்
கபாலீச் சரம் அமர்ந்தான்
ஆதிரை நாள் காணாதே
போதியோ பூம்பாவாய் "

(வேலை - கடல்; கபாலீச்சரம் - மயிலாப் பூர்க் கோவில்)

என்ற திருவாக்கு எழுந்தது. கடலருகே அமைந்த கபாலீச்சரத்தில் நிகழும் திருவா திரை விழாவைக் காணாது சென்றாயோ பூம்பாவாய்! காலையிலே நீராடி, கபாலிப் பெருமான் அருள் பாடிக் களிக்கும் கன்னி யரைவிட்டுப் போயினையோ பூம்பாவாய்! என்று பரிந்து பாடிய பொழுது பூம்பாவை உயிர் பெற்று எழுந்தாள் என்று பெரிய புராணம் கூறுகின்றது.

மார்கழித் திருவாதிரை நாளும் ஆண் டாள் பாடியருளிய 'மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளும், பெரும்பாலும்

சஷ்டியப்த பூர்த்தி



திருச்சி V. P. N. பெருமாள் நாயுடு அவர்களின் தந்தையும் பிரபல ஷராப் வியாபாரியுமான V. P. நரசிம்மலு நாயுடு அவர்களுக்கு 27-12-55 தேதி தனது இல்லத்தில் (60-வது ஆண்டு நிறைவு) சஷ்டியப்தபூர்த்தி மிக சிறப்புடன் நடந்தேறியது. அது சமயம் ஸ்ரீரங்கம் ஸ்ரீ உ. வே. வித்வான் குண்டலம் ரங்காசார்யஸ்வாமி அவர்கள் விஜயம் செய்து ஆசீர்வதித் தார். அண்ணாமலை பல்கலைக் கழக உப அத்யக்ஷகர் உயர்திரு T. M. நாராயணசாமி பிள்ளை, கோவை திரு G. D. நாயுடு மற்றும் பல பிரமுகர் களிடமிருந்து வாழ்த்துக்கள் வந்திருந் தன. ஏராளமான நண்பர்களும் உற வினர்களும் வந்து சிறப்பித்தார்கள். திருச்சி ஷராப் வர்த்தக சங்கத்தின் சார்பாகப் பொன்னாடை போர்த்தியும் கௌரவித்தனர்.

ஒன்றேயாகும். அப் புனிதமான நாளில் இளம் பெண்கள் இறைவனைப் பணிந்து வேண்டுகின்ற வரமும் ஒன்றேயாகும்.

"எங்கள் பெருமான்
　　உனக்குஒன்று உரைப்போம்கேள்
எங்கை உனக்கல்லாது
　　எப்பணியும் செய்யற்க
கங்குல் பகல் எங்கண்
　　மற்றென்றும் காணற்க
இங்கிப் பரிசே
　　எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயிறு
　　எமக்கேலோர் எம்பாவாய்"

என்பது திருவெம்பாவை. "ஈசனே! எம்பெருமானே! ஆதிரை நாயகனுகிய உன்னிடம் அடியேம் செய்யும் விண்ணப்பம் ஒன்று உண்டு. அதைக் கேட்டருள வேண்டும். எம் கைகள் உனக்கே யன்றி வேறு எவர்க்கும் எத்தகைய தொண்டும் செய்யலாகாது; எம் கண்கள் அல்லும் பகலும் உன்னையன்றி வேறு எப்பொருளையும் காணலாகாது. இந்த வரத்தை நீ தந்தருள்வாயாயின் எந்தத் திசையில் கதிரவன் தோன்றினுலும் எமக்குக் கவலையில்லை" என்று தெள்ளத் தெளியக் கூறுகின்றனர் இளமங்கையர்.

இவ்வண்ணமே திருப்பாவையும் அருளிச் செய்கின்றது.

"சிற்றம் சிறுகாலே
　　வந்துன்னைச் சேவித்து
பொற்று மரையடியே
　　போற்றும் பொருள்கேளாய்
இற்றைப் பறைகொள்வான்
　　அன்றுகாண் கோவிந்தா
எற்றைக்கும் ஏழேழ்
　　பிறவிக்கும் உன்தன்னோடு
உற்றோமே ஆவோம்
　　உனக்கேநாம் ஆட்செய்வோம்
மற்றைநம் காமங்கள்
　　மாற்றேலோர் எம்பாவாய்"

"திருமாலே! எங்கள் பெருமானே! உன் பொற்றாமரை யடியைப் போற்றி ஒன்று வேண்டுகின்றோம். ஐயனே! அன்று இன்று எனுதபடி என்றும் யாம் உன் தொண்டர்கள்; உனக்கே பணி செய்வோம். உன்னையல்லால் வேறு எப்பொருளிலும் எம் சிந்தை செல்லாதிருக்க அருள் புரிவாயாக" என்று வேண்டுகின்றனர் இளம் பாவையர். எனவே மாணிக்கவாசகர் பாடிய திருவெம்பாவையும் ஆண்டாள் அருளிய திருப்பாவையும் தமிழ் நாட்டார்க்கு அருள் நெறி காட்டும் இரு கண்கள் என்பதில் ஐயமொன்று உண்டோ?

வட்ட மேஜை

"உபதேச மொழிகள்"

"'படிக்கப் படிக்கத் தெவிட்டாத இன்பத் தேனை அள்ளியூட்டும் ஒப்பற்ற அரசியல் ஞானி ஸ்ரீ ராஜாஜி அவர்களின் சிறு கதை "உபதேச மொழிகள்" கட்சி பேதத் தீயும் பித்தர்களுக்கு ஓர் நல்ல படிப்பினை. சிறுவர்களுக்கான சிறுகதைகள் அல்லாமல் பழுத்த அரசியல் அனுபவங்கள் கலந்த தத்துவ மார்க்கம். அரசியல்வாதிகளுக்கு ஓர் அரிய பொக்கிஷம். கட்சி பேதத் தன்மையால் கிடைத்தற்கரிய ஓர் மகான் சன்ற உபதேசம் கூனக் கறையான் தின்னும் அளவுக்குக் கொண்டு போகப்பட்டதைச் சித்திரித்துக் காட்டும் ஒரு அரசியல் மார்க்கம். ஒவ்வொரு விஷயத்தையும் அருவித் அருவிப் பார்க்குமிடத்தில் ஆழ்ந்த கருத்துகள் தன்னகத்தே பூண்ட ஓர் இலக்கியம்.

சேலம்
17—12—55　　　　　　சுந்தரம்


★


புதுமை நவீனம்

டாக்டர் சுரேஷ் வாயிலாக 'ரவிசந்திரிகா'வில் பல அற்புதமான பேருண்மைகளை அழகாக எடுத்துரைத்திருக்கிறீர்கள். கதை கதைக்காகவே என்றிராமல் இம்மாபெரும் கருத்துக்களைக் கதாபாத்திரங்களின் வாயிலாக வெளிவிடுவது போற்றத் தக்க முயற்சி. ரவிசந்திரன்–சந்திரிகாவின் அதிசய வாழ்க்கை – அதனுல் விளையும் சிக்கல்கள், சொக்கிகுடியில் நிகழும் விநோதக் காட்சிகள், யானைக் கூட்டங்களோடு வாழும் சொக்கியின் அபூர்வ வாழ்க்கை, பளிருர்களின் விநோத வாழ்க்கை முறை, திருச்சியில் நடக்கும் சிலம்பப் போட்டிகள், பகோராவின் 'ஜிங்கிட ஜிங்கிட ஜிங்கிட ஜும்' வித்தை, பம்பாய் – திருச்சிக் காட்சிகள் முதலியன கதையோடு பின்னிப் பிணைந்து உவப்பையும் உற்சாகத்தையும் அளிக்கின்றன. தமிழ்ப் பண்பாடும், நாகரிகமும் இழைந்து செல்லும் தங்கள் தலைசிறந்த நவீனத்தின் கதாநாயகியாகிய சந்திரிகாவின் நடனத்தை உள்ளத் திரையில் ஆட விட்டது போல் வெள்ளித் திரையிலும் ஆட விடும்படி செய்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்!

பரதநாட்டியம், காவேடிப் பாடல்கள், சிறந்த இலக்கியச் சான்றுகள், சாதி பேதமற்ற சமரச மனப்பான்மை, திகைப்பூட்டும் சம்பவங்கள், பலவேறு மன இயல்புகள் படைத்த விதவிதமான கதா பாத்திரங்கள் – இவைகள் இயற்கையாகவே அமைந்து கதைக்கு விறுவிறுப்பையும் அழகையும் கொடுக்கின்றன. 'ரவிசந்திரிகா' சகல அம்சங்களும் ஒருங்கே சிறந்து விளங்கும் முற்றிலும் புத்தம் புதிய நவீனம் என்பதில் என்னளவும் ஐயமில்லை.

காரைக்குடி
4—1—56　　　　　　பண்டரிநாதன்


MAFATLAL FINE MILLS
NAVSARI
Two by Two
FULL VOILE
ராஜ்ரேகா
ராஜலக்ஷ்மி
ராஜ்ஷோபா
ராஜ்சுந்தரி
சூபர்பைன்
மெர்ஸிரைஸ் செய்யப்பட்டது
மாபத்லால் பைன் மில்ஸ் — நவ்ஸாரி



அத்தியாயம் 24

இந்துவின் தந்தை

போட்டோ ஆல்பத்தைக் கொண்டு வரச் சொல்லி அவளுடன் பிரித்துப் பார்த்தேன். என் ஊகம் உடனேயே ஊர்ஜிதமாகி விட்டது. என்னைக் காப்பாற்றியவரும், இந்துமதியின் தந்தையும் ஒரே மனிதர்தான் என்று எனக்குத் தெரிந்து போய் விட்டது. அந்த நிமிடம் முதல் எனக்கு அந்தக் குடும்பத்தில் ஒரு பந்தம் ஏற்பட்டு விட்டது. நான் யாருமில்லாதவன் என்ற எண்ணம் என் நெஞ்சை விட்டு விலகிப் போய்விட்டது. என்னைக் காத்த உத்தமரின் குடும்பம் என் குடும்பமாகி விட்டது. இந்த மானஸீகமான பிணைப்பு எனக்கு இந்துமதியை நேசிக்க ஒரு பலம் கொடுத்தது.

இதையெல்லாம் நான் உடனே அவர்களிடம் கூறவில்லை. யோசித்துக் கொண்டு சொல்லலாம் என்று பேசாமலிருந்து விட்டேன். இந்துமதி "என் தந்தையைப் போன்ற முக ஜாடையுடையவரை எங்கேயாவது பார்த்திருக்கிறீர்களா?" என்று கேட்டபோது கூட "இதோ உன்னைப் பார்க்கிறேனே" என்று கூறிச் சமாளித்து விட்டேன். ஆனால் அவள் அவ்வளவு நுட்பமாக என்னைக் கவனித்து விஷயத்தை ஊகித்தது பற்றி ரொம்ப ஆச்சரியப்பட்டேன்.

சற்றைக்கெல்லாம் நான் பண்ணையாரிடம் ஊமையன் கோட்டைக்குப் போவது பற்றிக் கேட்டேன். பண்ணையார் நான் ஏற்கனவேயே ஓலைச் சுவடியில் பார்த்து வைத்திருந்த விஷயத்தைக் கூறினார். ஆனால் அவர் சொன்ன விதம் எனக்கு மிக வியப்பை அளித்தது.

ஊமைத்துரைக் கோட்டையில் முத்து வீரப்பப் பாண்டியனுடைய ஆவி அலைந்து கொண்டு இருப்பதாகவும், 'கொண்டுவா, சொக்கையாப் பாண்டியனை!' என்று அது கூச்சல் போடுவதாகவும் ஒரு வதந்தி இருப்பதாகக் கூறினார்.

முத்து வீரப்பனைக் காட்டிக் கொடுத்தது சொக்கையா என்ற பாளையக்காரன் என்பது எனக்கு முன்னமேயே தெரிந்திருந்தாலும் இந்த விஷயம் எனக்கு



மிகவும் வியப்பாக இருந்தது. எத்தனையோ ஆண்டுகளுக்குப் பிறகு இப்படி ஆவி அலைகிறது என்றால் நம்ப முடியுமா? அதுமுதல் ஊமையன் கோட்டைக்குப் போக வேண்டுமென்ற ஆவல் இன்னும் தீவிரமாகி விட்டது.

நான் கண்டு பிடித்திருந்த விஷயம் ஒன்றே என் உள்ளக் கிளர்ச்சிக்குப் போதுமானது. இதில் புதிதாக ஒரு விஷயத்தைக் கண்டு பிடிக்க வேண்டும் என்ற ஆவலும் சேரவே அன்றுமுதல் எனக்குச் சரியான தூக்கமே இல்லாமல் போய் விட்டது. இந்துமதியைப் பற்றி நினைக்கக் கூடாது என்ற எண்ணமும் எங்கோ ஒளிந்து கொண்டு விட்டது. அன்றிரவு வெகு நேரம் யோசனை செய்த பிறகு இந்துவின் அன்னை சந்திரமணியிடம் மாத்திரம் காளிலிங்கம் என்னைக் காப்பாற்றிய விவரங்களைச் சொல்லிவிட வேண்டும் என்று தீர்மானித்தேன். அதற்கு ஒரு சந்தர்ப்பத்தையும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்.

தங்கபாண்டியனுடைய குடும்பத்திலிருந்த ஒரு சாபக்கேட்டைப் பற்றிக் குறிப்பிட்டேன் அல்லவா? மறுபடியும் பாதாளக் கிடங்கைத் திறக்கச் சொல்லிப் பார்க்க எனக்குத் துணிவு வரவில்லை. அதனால் ஏதேனும் விபரீதம் ஏற்படலாம். சொக்கையாவும் தங்கபாண்டியனும் சண்டை போட்டுக் கொண்டால், ஜமீன் அதிகாரம் மாறுவதற்குப் பல தொல்லைகள் ஏற்படலாம். ஆகவே சரித்திர ஆராய்ச்சி சம்பந்தப்பட்ட வேலைகளை யெல்லாம் குமரன் கோயிலிலும், ஊமையன் கோட்டையிலும் பார்த்துக் கொள்ளலாம். தங்கபாண்டியனின் குடும்பத்தைப் பற்றிய விஷயங்களை ரொம்ப ஆராய வேண்டாம். வாய்ப்புக் கிடைத்தால் பார்த்துக் கொள்ளலாம் என்று தீர்மானித்து விட்டேன்.

ஆகவே ஊமையன் கோட்டைக்குப் போவதில் மிகவும் ஆர்வம் காட்டினேன். பண்ணையாரும் உற்சாகமாக இருந்தார். இந்துமதி தானும் வருவேன் என்று கூறினாள். எல்லோரும் ஒரு நாள் கட்டுச் சாத மூட்டைகளுடன் போவதாகத் தீர்மானித்தோம். நான் குங்குமத் துறைக்குச் சென்ற வேலையே சரியான வேலை இல்லை போலிருக்கிறது. அங்கே நான் ஆரம்பித்த ஒரு வேலையும் ஒழுங்காக நடைபெறவில்லை. தங்க பாண்டியனுக்கும் உருப்படியாக ஒரு உதவியும் செய்ய முடியவில்லை. சரித்திர ஆராய்ச்சியும் நடுவில் நின்று விட்டது. ஓலைச் சுவடிகளும் கிடைக்கவில்லை. கடைசியில் குமரன் கோயிலுக்கும், கோட்டைக்கும் கூடப் போக முடியாமல் போய்விட்டது. இந்துவின் விஷயத்தைப் பற்றித்தான் சொல்லவே வேண்டாம்.

நாங்கள் கோட்டைக்குப் போகத் தீர்மானித்திருந்த தினத்தன்று தங்கபாண்டியனிடமிருந்து காமிராவை வேறு வாங்கிக் கொண்டு கிளம்பினேன். நான்



காமிராவைக் கேட்ட உடனேயே தங்க பாண்டியன் என்னை ஒரு மாதிரி பார்த்து விட்டுச் சிரித்தான். "கோட்டையைப் படம் பிடிக்கப் போகிறாயா? அல்லது..." என்று இழுத்தான்.

நான் உடனே, "ஏன் பாண்டியா! உனக்கு நான் அவர்களோடு பழகுவது பிடிக்கவில்லையா? ஏதேனும் தவறான எண்ணம் உனக்கு ஏற்பட்டிருக்கிறதா?" என்று கேட்டேன்.

நான் கேட்ட கேள்வியைத் தங்க பாண்டியன் எதிர்பார்க்கவில்லை. சற்று நேரம் தலையைக் குனிந்து கொண்டு பேசாமல் இருந்தான். பிறகு, "உண்மையாகச் சொல்லுகிறேன் துரை! நீ அவர்கள் வீட்டுக்குப் போவது எனக்கு ஒரே ஒரு காரணத்தினால்தான் பிடிக்கவில்லை. என் தங்கையை உனக்குக் கொடுத்து உன்னை இந்த வீட்டு மாப்பிள்ளையாகச் செய்து கொள்ள வேண்டுமென்பது என் ஆசை. நான் ஜாடையாக இரண்டொரு தடவைகள் கூறினேன். நீ புரிந்துகொள்ளாதது எனக்கு வருத்தமாக இருந்தது. உனக்கு இந்துமதியைப் பிடித்திருப்பது போல எனக்குத் தோன்றியது. அப்படி இருந்தால் என் ஆசை நிராசையாகி விடுமல்லவா? அதைத் தவிர உன்மீது வேறு எந்த விதமான தவறான அபிப்பிராயமும் எனக்கு ஏற்படவில்லை. உனக்கு இந்துமதியைப் பிடித்திருப்பதும் பிடிக்காமவிருப்பதும் உன் விஷயம். அதில் குறுக்கிட நான் யார்?" என்றான்.

என் மனம் இதைக் கேட்டு உருகிப் போய் விட்டது. எனக்குப் பதிலே சொல்ல முடியவில்லை. என்னைப் போன்ற ஒன்றுமே இல்லாத வாலிபனுக்குத் தன் தங்கையைக் கொடுப்பதாகக் கூறும் தங்கபாண்டியனுடைய பிரியத்தைக் கண்டு வியப்பு ஏற்பட்டது. ஒரு பக்கம் அவன் இஷ்டப்படி என்னால் நடந்து கொள்ள முடியாதே என்று வருத்தம் ஏற்பட்டது. ஆனால் அவனுடைய மனத்தில் அந்த எண்ணம் வளருவதற்கு இடம் கொடுக்கக் கூடாது என்ற நினைப்பும் எழுந்தது.

ஆகவே, "தங்கபாண்டியா! என் மனத்துக்குச் சரி என்று படாத விஷயத்தை நான் செய்ய மாட்டேனென்று உனக்குத் தெரியும். நீ சொல்வது போல் என்னால் நடந்து கொள்ள முடியாவிட்டாலும் உனக்கு உன் தங்கை விஷயத்தில் எவ்வளவு பொறுப்பும் கவலையும் உண்டோ அவ்வளவு எனக்கும் உண்டு. அதை மட்டும் ஞாபகம் வைத்துக் கொள்!" என்றேன்.

"துரை! உன் விருப்பத்துக்கு விரோதமாக ஒரு நாளும் உன்னை நான் வற்புறுத்த மாட்டேன். நீ இந்துமதியை மணந்து கொள்ள விரும்பினால் அதற்கும் நான் உற்சாகமாக ஏற்பாடு செய்வேன். என் மனத்தைப் புண்படுத்துவதாக நீ நினைத்துக் கொண்டு கஷ்டப்படப் போகிறாயே என்றுதான் இதைச் சொல்கிறேன். என் தங்கையின் விஷயத்தில் எனக்கு எவ்வளவு கவலை உண்டோ, அவ்வளவு கவலை உன் விஷயத்திலும் உண்டு" என்றான்.

நான் தங்கபாண்டியனை அப்படியே தழுவிக் கொண்டேன். "இவ்வளவு சுயநலமற்ற ஒரு நண்பன் எனக்குக் கிடைத்திருப்பதற்காக நான் இறைவனுக்கு நன்றி செலுத்துகிறேன்" என்று கூறினேன்.

"சரி, சரி! மணி ஆறடித்து விட்டது. சீக்கிரம் போ. பிறகு மலைமேல் ஏறும் போது ரொம்ப வெயிலாகி விடும்" என்று சொல்லி என்னை அனுப்பினான் தங்க பாண்டியன்.



அவனுடன் மனம் விட்டுப் பேசியதனால் உண்டான மனத் தெளிவோடும், கனிந்த இதயத்துடனும் நான் இந்துமதியின் வீட்டை அடைந்தேன். அதுவரை எனக்கு இருந்த தயக்கமெல்லாம் அன்று போய் விட்டது. என் தந்தைக்கு நண்பரும், என்னை ஒரு நெருக்கடியான சம்பவத்திலிருந்து காப்பாற்றியவருமான உத்தமரின் பெயர் காசிலிங்கம் என்பதும், அவருடைய மகள் இந்துமதி என்றும் தெரிந்ததிலிருந்து எனக்கு ரொம்ப உற்சாகம் ஏற்பட்டிருந்தது. தங்கபாண்டியனிடமும் ஒருவாறு என் கருத்தைத் தெரிவித்த பிறகு இந்துமதியிடம் அன்போடு பழகுவதற்கு ஏதும் தடையிருந்ததாக எனக்குப் படவில்லை. இந்துவின் தந்தை அதை விரும்புவார் என்றே எனக்குப் பட்டது. இந்துவின் அன்னையிடம் மட்டும் என் கருத்தைத் தெரிவித்து அவருடைய சம்மதத்துடன் நான் அவளிடம் பழக வேண்டும். சீமை சென்று இரண்டே வருஷங்களில் படிப்பை முடித்துக் கொண்டு வந்து விட்டால் பிறகு மணம் செய்து கொண்டு இன்பமாக வாழ்க்கை நடத்தலாம். ஒரு மனிதனுக்கு அதை விட என்ன வேண்டும்? என்றெல்லாம் பலவாறு மனக் கோட்டைகள் கட்டிக் கொண்டே சென்றேன்.

நான் வருவது தெரிந்து இந்துமதி உள்ளேயிருந்து ஓடி வந்தாள். காலை இளஞ் சூரியனின் கிரணங்கள் அவளுடைய மாம்பழ வர்ணச் சேலையில் பட்டுப் பிரதிபலித்து அவளுடைய முகத்தைப் பொன் முகமாகப் பிரகாசிக்கச் செய்தது. அவளுடைய முகத்தில் தோன்றிய புன்னகையைக் கண்டதும் என் உடல் சிலிர்த்தது. அந்தக் களங்கமற்ற புன்னகையில், அவளுடைய இதய ஊற்றிலிருந்து பொங்கிய அன்பு என்னும் அமுததாரை பெருகிப் பாய்ந்து ஓடியது. நான் சீமையிலிருந்த போதும், பின்னால் கல்கத்தாவில் வேலையிலிருந்த போதும், கப்பலில் பிரயாணம் செய்த போதும், யுத்தத்தில் அகப்பட்டுத் திண்டாடிய போதும் இந்துவின் உள்ளத்திலிருந்து பெருகிய அன்பு வெள்ளம் என்னை நோக்கிப் பாய்ந்து ஓடி வந்து கொண்டேதான் இருந்தது என்பதை என் உள்ளுணர்வு தெரிந்து கொண்டிருந்தது. இந்துவைக் கட்டாயம் காண்பேன் என்ற தைரியத்தை அந்த உள்ளுணர்வுதான் எனக்கு அளித்துக் கொண்டிருந்தது.

அன்று எங்களுக்குக் குமரன் கோயிலுக்கும் ஊமையன் கோட்டைக்கும் போக அதிர்ஷ்டமிருக்கவில்லை. நாங்கள் புறப்படத் தயாரானதும் இந்துவின் அன்னையின் குரல் கேட்டது. நாங்கள் உள்ளே சென்று பார்த்த போது அவர் பொறுக்க முடியாத மார்பு வலியினால் துடித்துக் கொண்டிருந்தார். நான் டாக்டரை அழைத்துக் கொண்டு ஓடிவந்தேன். டாக்டர் அவரைப் பரிசோதித்து விட்டு "இதயம் மிகவும் பலஹீனமாக இருக்கிறது. இன்னும் ஒரு தடவை இந்தமாதிரி வலி வந்தால் பிழைக்க மாட்டார்" என்று சொல்லி விட்டுப் போய் விட்டார்.

இதை இந்துவிடமும் மந்திரமூர்த்திப் பண்ணையாரிடமும் தெரிவிக்கும் பொறுப்பு எனக்கு வந்து வாய்த்தது. அப்போதுதான் எவ்வளவு தூரம் நாங்கள் ஒன்றாகி விட்டோம் என்பது எனக்கே புரிந்தது.

இந்துவுக்குத் தைரியம் சொல்லிவிட்டு அன்றையப் பயணத்தையும் நான் நிறுத்தி விட்டேன். நான் எதிர்பார்த்த வாய்ப்பு அன்று எனக்குக் கிடைத்தது. இந்து தன் கையால் செய்த சித்ரான்னங்களைச் சாப்பிட்ட பிறகு பண்ணையார் வெளியே போய்விட்டார். இந்து வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

இந்துவின் அன்னையைத் தனியாகச் சந்தித்து எனது உள்ளக் கிடக்கையைத் தெரிவித்துவிட வேண்டும் என்று தீர்மானித்திருந்த படியால் அவரருகில் சென்று உட்கார்ந்தேன். அவரே அன்று வெகு நாட்களாக இறுக்கி மூடி வைத்திருந்த தம் இதயத்தை என்னிடம் திறந்து காட்டத் தயாராக இருந்தாரென்று நான் நினைக்கவே இல்லை.

அத்தியாயம் 25

சந்திரமணியின் இதயம்

இந்துமதியின் அன்னை சந்திரமணியின் இதயம் பலஹீனமாக இருந்தது என்று டாக்டர் சொன்னாரே தவிர, எனக்கு அப்படித் தோன்றவில்லை. அவர் பட்டிருக்கும் மனோ வேதனைகளைச் சாதாரண இதயத்தால் அவ்வளவு நாட்கள் தாங்கியிருக்கவே முடியாது.

நான் பிறந்த நாள் முதல் பட்ட கஷ்டங்களையெல்லாம் சுருக்கமாகக் கூறி விட்டு, நான் நேசித்து மணந்து



'அனஸின்'

விஞ்ஞான முறையில்

நான்கு மருந்துகளின்

ஒரு கலப்பு.



'அனாஸின்' விஞ்ஞான முறைப்படி சேர்க்கப்பட்ட நான்கு மருந்துகளின் கலப்பாகும். அவை நரம்புகளின் முக்கிய சேர்க்கை பாகங்களில் கூட்டாக வேலை செய்து விரைவில் வலி, தலைவலி, ஜலதோஷம், ஜுரம், பல்வலி, மற்றும் தசை நார்களில் நோவு இவற்றை நீக்கும். அனாஸினில் அடங்கிய சில நான்கு மருந்துகள் :—

1. கொயினா : ஜுரத்தடுப்பு குணமும், பலவிருத்தி செய்வதற்கும் பிரசித்தி பெற்றது. ஜுரத்தை குறைப்பதில் மிகத் துரிதமானது.
2. காப்பின் : பலஹீனத்திற்கும், மனச்சோர்வுக்கும் மிதமான தூண்டுகோல் மருந்தாக விதிக்கப்பட்டிருக்கிறது.
3. பினஸிடின் : ஜுரத்தடுப்பு, வலி நிவாரணத் தன்மைகளுக்கு பெயர் பெற்றது.
4. ஆஸிடில் ஸாலிஸிலிக் ஆஸிட் : தலைவலி அது போன்ற எல்லா வலிகளையும் போக்குவதற்கு மிகவும் உபயோகமுள்ளது.

அனாஸினிலுள்ள இந்த நான்கு மருந்துகளும் ஒரு டாக்டரின் குறிப்புக்கு ஒப்பாகும். 'அனாஸின்' இருதயத்திற்கு தீங்கு விளைவிப்பதோ அல்லது வயிற்றுக்கு கோளாறுண்டாக்குவதோ கிடையாது. வலி, தலைவலி, ஜலதோஷம், ஜுரம், பல்வலி மற்றும் தசைகளில் வலி முதலியவற்றிலிருந்து விரைவிலும், பத்திரமாகவும், நிச்சயமாகவும் நிவாரணம் பெற எப்பொழுதும் அனாஸினையே கேட்டு வாங்குங்கள்.

லக்ஷக்கணக்கான மக்களுக்கு நிவாரணம் அளிக்கின்றது.

கொண்ட காசிலிங்கத்தைப் பற்றியும், தங்கள் வாழ்க்கைக்கு இடையூறாக வந்தவர்களைப் பற்றியும் சந்திரமணி எடுத்துக் கூறினார். அவர் இப்படி ஓய்வு எடுத்துக் கொள்ளாமல் பேசுகிறாரே என்று எனக்குக் கவலையாக இருந்தது.

“அம்மா! நீங்கள் ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று டாக்டர் சொல்லியிருக்கிறார். தயவு செய்து பேசாதீர்கள். இரண்டு நாட்கள் கழித்துக் கூறலாம்” என்றேன்.

“இல்லை, துரை! என்னைத் தடுக்காதே! நான் எத்தனையோ நாட்களாய் உள்ளத்தில் இவைகளை யெல்லாம் ஒளித்து வைத்திருந்தேன். என் வளர்ப்புத் தந்தை மந்திரமூர்த்திப் பண்ணையார் என்னிடம் எவ்வளவோ அன்பைப் பொழிந்த போதிலும் எனக்கு அவரிடம் மனம் விட்டுப் பேசக் கூச்சமாக இருக்கிறது. இந்துமதியோ குழந்தை. எனக்கு வேறு யார் இருக்கிறார்கள்? உன்னிடம் சொல்வதற்கும் இனிமேல் சந்தர்ப்பம் கிடைக்குமோ கிடைக்காதோ? எனக்கே சொல்ல வேண்டாமென்று தோன்றினாலும் தோன்றிவிடும். நான் என் கணவரோடு சேர்ந்து அனுபவித்த இன்ப துன்பங்களையும், அவரைப் பிரிந்து பட்ட வேதனையையும் யாரிடமாவது கூற வேண்டும்போல இருக்கிறது” என்றார்.

அதன் பிறகு அவரை நான் தடுக்கவில்லை. அவரும் இதயத்தை நன்றாகத் திறந்து பேசினார். அந்தமாதிரி யாரிடமும் நான் அந்தரங்கத்தைப் பகிர்ந்து கொண்டதே கிடையாதாகையால் உணர்ச்சி வசப்பட்டு அவற்றைக் கேட்டுக் கொண்டிருந்தேன்.

கடைசியில் அவர், “என் கண்மணி இந்து தன் மண வாழ்க்கையில் பரிபூரண இன்பத்தை அடைய வேண்டுமென்பதுதான் என்னுடைய ஒரே ஆசை!” என்றார். பிறகு அவர் தொடர்ந்து, “ஒன்று மட்டும் பதில் சொல்லு. என்னைப் பற்றியோ அல்லது நாங்கள் மணந்து கொண்ட விதத்தைப் பற்றியோ உனக்கு எவ்விதத் தப்பெண்ணமும் இல்லையே?” என்று கேட்டார்.

அவர் அப்படிக் கேட்டதை என்னால் தாங்க முடியவில்லை. அவருடைய கணவரைப் பற்றி நான் தெரிந்து கொண்ட பிறகு அவர்கள்மீது எனக்கு அளாதியான அன்பு ஏற்பட்டிருந்தது. ஆகவே நான் தழுதழுத்த குரலில், “இப்படியெல்லாம் சொல்லாதீர்கள் அம்மா! இந்து என்னை மணந்து கொள்ள விரும்பினால் அதைவிட ஆனந்தத்தை அளிக்கும் விஷயம் எனக்கு ஒன்றுமே கிடையாது” என்றேன். நான் சொல்ல வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்த விஷயத்தைக் கூறிவிட்டதால் மனத்தில் அமைதி ஏற்பட்டது. அவரும் அதை ஆமோதிக்கிறார் என்று தெரிந்தபடியால் சந்தோஷமாக இருந்தது.

பிறகு அவர் மந்திரமூர்த்திப் பண்ணையாரின் கஷ்டங்களை யெல்லாம் கூறிவிட்டு, “எனக்கும் உடம்பு சரியில்லை. அப்பாவுக்கும் வயதாகி விட்டது. அவருக்கும் ஏதாவது நேர்ந்து விட்டால் குழந்தை இந்துமதியின் கதி என்னவாகும் என்பதை நினைப்பதற்கே என் மனம் நடுங்குகிறது. என்ன கஷ்டம் வந்தபோதிலும் அவளை நீ கைவிட்டு விட மாட்டாயே?” என்று கேட்டார்.

“அம்மா! இந்துமதியை நான் என்ன கஷ்டம் வந்தாலும் கைவிட மாட்டேன். அவள் என்னை மணந்து கொள்ள விரும்பினால் ஆனந்தத்தோடு மணந்து கொள்வேன். இல்லையென்றால் அவளுடைய மனத்துக்கு உகந்தவனை மணம் முடித்து வைப்பேன். இது சத்தியம். நீங்களும் இருந்து நான் என் வார்த்தையைக் காப்பாற்றுவதைக் காண்பீர்கள். தைரியமாக இருங்கள்” என்று ஆவேசத்தோடு கூறினேன்.

அந்தக் கணம் முதல் நான் இந்துவோடு ஒன்றாகப் பிணைந்து விட்டேன். அன்று முதல் நான் இந்துவுக்காகவே வாழ்ந்து வருகிறேன். பின்னால் ஏற்பட்ட எவ்வளவோ சோதனைகளைத் தாங்குவதற்கு எனக்கு அந்த வாக்குறுதிதான் பலம் அளித்து வந்தது. அந்த மாதரசியின் ஆத்மா எங்களுடனேயே இருந்து எங்கள் இதயங்களின் பிணைப்பு விட்டுப் போகாமல் பாதுகாத்து வந்திருக்கிறது.

அதன் பிறகு நானும் மனம் திறந்து பேசினேன். என் பிறப்பு வளர்ப்பைப் பற்றி யெல்லாம் அவரிடம் விவரமாகக் கூறினேன். என் அன்னையும் நானும் பட்ட துன்பங்களை யெல்லாம் பரிவுடன் கேட்டார். என் அன்னை இறந்துபோனதைக் கூறியபோது அவருடைய கண்களும் கலங்கின.

முக்கியமாக ஈசுவரமூர்த்தி என் தந்தையைச் சிறைக்கு அனுப்பியதைக் கூறியபோது அவர் திகைத்துப் போனார்.

“எத்தனை பேருடைய வாழ்க்கையைக் கெடுத்திருக்கிறான் அந்தப் படுபாவி? அவனால் நீ அனாதையாகும்படி நேர்ந்ததே. என்ன கொடுமை?” என்றார்.

நான் மெதுவாக என் சந்தேகத்தை அவரிடம் தெரிவித்தேன். திடீரென்று

கூறினால் அவருக்கு மன அதிர்ச்சி ஏற்படலாமென்று பலவிஷயங்களைப்பற்றிப் பேசிவிட்டுப் பிறகு அதைக் கூறினேன். என் தந்தை சிறையிலிருந்த போது ஈசுவரமூர்த்தி என்னை அழைத்து வரச் சொன்னதையும், அதிலிருந்து நடந்த ரகளையைப் பற்றியும் அவரிடம் எடுத்துக் கூறினேன்.


"அம்மா! அன்று ஈசுவரமூர்த்தியிடம் நான் சிக்கிக்கொண்டு திண்டாடிய போது ஒரு உத்தமர் வந்து என்னைக் காப்பாற்றினார். இல்லாவிட்டால் அன்று சாட்டையடியால் என் உயிரே போயிருக்கும். அந்த உத்தமரை நான் இன்று வரை என் தெய்வமாகப் போற்றி வருகிறேன்" என்றேன்.

"அப்படியா? அவர் யாரப்பா? எங்கே இருக்கிறார்? ஈசுவரமூர்த்திக்கு விரோதமாகக் காரியம் செய்ய இந்துவின் தந்தை ஒருவருக்குத்தான் துணிவு இருந்தது என்று நான் நினைத்துக் கொண்டிருந்தேன். தங்கபாண்டியனின் தகப்பனாருக்கே அந்தத் தைரியம் இருக்கவில்லையே!" என்றார்.

"அவர் அன்று மாத்திரம் எனக்கு உதவி செய்யவில்லை அம்மா! அதன் பிறகு என்னைச் சென்னைக்கு அனுப்பிப் படிக்க வைத்ததும் அவர்தான். பிறகு பல சமயம் பணம் அனுப்பி உதவியிருக்கிறார். என் தந்தைக்கும் அவருக்கும் நட்பு ஏற்பட்டதே ஒரு விசித்திரம்தான். இருவரும் சிறையில் நண்பர்களானார்களாம். இருவருமாகத் தப்பி வரும் சமயத்தில் என் தந்தையைச் சுட்டுவிட்டார்கள். அந்த உத்தமர் மாத்திரம் தப்பி விட்டார். அதனால் என்னைக் காப்பாற்றுவதை அவர் தம்முடைய பொறுப்பாகத் தாமே ஏற்றுக் கொண்டார். அப்படிப்பட்டவர்களை இந்த உலகத்தில் பார்க்கவே முடியாது!"

சந்திரமணியின் கண்களில் ஒரு பிரகாசம் ஏற்பட்டது. "சிறையிலா இருவரும் சந்தித்தார்கள் என்று சொன்னாய்? எந்தச் சிறையில்?" என்று வியப்புடன் கேட்டார்.

"அம்மா! நீங்கள் நினைப்பது உண்மைதான். அதையேதான் நானும் ஊகித்திருந்தேன். போட்டோ ஆல்பங்



களைப் பார்க்க நான் அவ்வளவு ஆவலாக இருந்ததற்குக் காரணம் அது தான். அவருடைய புகைப்படத்தைப் பார்த்ததும் எனக்குக் கொஞ்ச நஞ்சமிருந்த சந்தேகமும் தீர்ந்து போய் விட்டது. என்னை வளர்த்து உருவாக்கிய உத்தமர் இந்துமதியின் தந்தையான காசிலிங்கம்தான்.''

சந்திரமணி தன் கண்களை மூடிக் கொண்டு சற்று நேரம் பேசாமல் இருந்தார். அவருடைய முகத்தில் புன்னகை தவழ்ந்தது. மறுபடியும் அவர் தம் கண்களைத் திறந்தபோது கண்களின் ஓரங்களில் கண்ணீர் தேங்கியிருந்தது.

"அம்மா! நான் உங்களை மிகவும் சிரமப்படுத்தி விட்டேன். இன்று நான் உங்களிடம் இவ்வளவு பேசியிருக்கக் கூடாது'' என்றேன்.

"இல்லை ரங்கா! உனக்குத் தெரியாது. நீ இப்போது கூறிய விஷயம் எனக்கு எவ்வளவு மகிழ்ச்சியளிக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளவே உன்னால் முடியாது. அவர் என்னை விட்டுச் சென்ற பிறகு என்ன நடந்ததென்பதைத் தெரிந்துகொள்ள நான் எவ்வளவு ஆவலாக இருந்திருப்பேன். இப்போது கொஞ்சமாவது அவரைப் பற்றித் தெரிந்ததல்லவா? இதைவிட எனக்கு வேறெதுவும் இன்பம் அளிக்க முடியாது. இன்னும் சொல்லு ரங்கா. அவர் எப்படி இருந்தார்? என்னென்ன பேசினார் என்பதை யெல்லாம் விவரமாகச் சொல்லேன்'' என்று கேட்டார்.

வறண்ட பாலைவனத்தில் மழைத் துளிகள் விழும்போது, அதைக் காய்ந்த மணல் என்ன ஆவலாகப் பருகும். அம் மாதிரி இருந்தது அவருடைய மனோ நிலை. அந்த மழையினால் அவருடைய தாகம் தீரவா போகிறது?

ஆயினும் அவர் விடவில்லை. நானும் ஒன்று விடாமல் ஞாபகப் படுத்திக் கொண்டு சொன்னேன். அவர் முகமூடி அணிந்து கொண்டு முற்றத்தில் குதித்ததிலிருந்து எங்கள் வீட்டுக்கு வந்தது வரை எல்லாவற்றையும் கூறினேன். காசிலிங்கம் என்னிடம், 'எனக்கு ஒரு குழந்தை இருக்கிறாள். அவளை ஒரு



வீரப் பெண்மணியாக வளர்க்க வேண்டுமென்பது என் ஆசை. ஆனால் அவளை என்னால் பார்க்கவே முடிவதில்லை!'' என்று குறைப்பட்டுக் கொண்டதைக் கூறிய போது சந்திரமணியினுடைய கண்களில் தாரை தாரையாக நீர் பெருகி வழிந்தது.

"துரை! என் மனத்திலிருந்த ஒரு பெரும் சுமையை இன்று நீ நீக்கி விட்டாய். அதற்கு நான் அளிக்கும் பரிசு என் அருஞ் செல்வம் இந்துமதி தான். அவர் எங்களை அடியோடு மறந்து விட்டாரோ என்ற சந்தேகம் எனக்குத் தோன்றித் தோன்றி என்னை வதைத்திருக்கிறது. நீ கூறுவதிலிருந்து அவர் மறக்கவே இல்லை என்பதும், அவருக்கும் எங்களைப் பிரிந்திருந்தது கஷ்டமாகத்தான் இருந்ததென்பதும் எனக்குத் தெரிந்து விட்டது. இதனால் என் மனம் ரொம்ப அமைதி அடைந்திருக்கிறது. ஆனால் ஒரே ஒரு விஷயம் மட்டும் கூற விரும்புகிறேன்."

"என்ன வேண்டுமானாலும் சொல்லுங்கள் அம்மா! என்னிடம் கூறத் தயங்க வேண்டியதே இல்லை."

"இந்த விஷயங்களை நீ இந்துவிடமும் பண்ணையாரிடமும் இப்போது சொல்ல வேண்டாம். அவர் முகமூடி அணிந்து வந்தாரென்பதை நீ கூறினால் பண்ணையார் அவர் ஏதோ கொள்ளைக் கூட்டத்தைச் சேர்ந்து விட்டார் என்று நினைப்பார். இந்துவுக்கும் அது மன வருத்தத்தை அளிக்கலாம். அது உண்மையாகவே இருந்து விட்டால் பரவாயில்லை. நானே சொல்லி விடுவேன். ஆனால் அவர் அப்படிப்பட்டவர் இல்லை, துரை! நீயாவது நான் சொல்வதை நம்பு. அவர் வேறு ஏதோ காரணத்தால்தான் இப்படித் தலைமறைவாகத் திரியும்படி நேரிட்டிருக்கிறது. அவர் ஒரு நாளும் கொள்ளையடிப்பது போன்ற விஷயங்களில் ஈடுபடவே மாட்டார். அவருடைய இதயம் எவ்வளவு விசாலமானதென்பது யாருக்கும் தெரியாது, துரை. பூமியில் நாம் நிற்கும்போது நமது கண்ணுக் கெட்டிய தூரம் வரை நான் பார்க்கிறோம். அதற்கு அப்பால் பூமி எவ்வளவு விசாலமானது என்று நாம் ஒவ்வொரு தடவையும் நினைத்துப் பார்ப்பதில்லை. இந்துவின் தந்தையின் உள்ளம் அவ்வளவு விசால மானது. அன்பு என்னும் ஒரே வஸ்துவால் ஆனது. நீ இதை ஒரு நாள் உணர்ந்து கொள்வாய்'' என்று கூறினார்.

"நான் கண்டிப்பாய் இதை யாரிடமும் சொல்லவில்லை அம்மா. இந்துவுக்குக்கூட அவசியம் நேர்ந்தால் பின்னால் சொல்லுகிறேன். இப்போது சொல்லவில்லை. நீங்கள் ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள். நான் சீமை சென்று திரும்பி வரும்வரையில் என்னுடைய இந்துவைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பை இப்போது நான் உங்களிடம் ஒப்படைக்கிறேன்'' என்று சிரித்துக் கொண்டே கூறினேன்.

அவரும் சிரித்தார். அன்று முதல் சில நாட்கள் ஒரே இன்ப மயமாக இருந்தன. இந்துவும் கூச்சத்தை விட்டுப் பழகினாள். என் தயக்கமும் நீங்கி விட்டது. தங்கபாண்டியன் என்னைப் புரிந்து கொண்டு, சந்தோஷமாகவே இருந்தான். அந்த மாதிரி நான் எப்போதுமே அவ்வளவு சந்தோஷமாக இருந்ததில்லை.

நாங்கள் மறுபடியும் ஊமையன் கோட்டைக்குப் போவதென்று தீர்மானித்து ஏற்பாடுகள் செய்தோம். அன்று நான் வீட்டினுள் காலை எடுத்து வைத்தபோது இந்து அலறும் சத்தம் கேட்டது. ஓட்டமாக ஓடிச் சென்று பார்த்தேன். இந்து தன் அன்னையை மடியில் எடுத்துப் போட்டுக் கொண்டாள். உடனே அவர் தலை சாய்ந்தது. இந்துவின் அன்னை மீளா நித்திரையில் ஆழ்ந்து விட்டார். (தொடரும்)

அகில உலகப் போட்டோக் கலைப் போட்டி

பிராங்க் அண்டு ஹைடெக் ஸ்தாபனத்தார் தங்கள் ரோலி காமிராவின் வெள்ளி விழாவை அகில உலக போட்டோ போட்டி நடத்திச் சிறப்பாகக் கொண்டாடினார்கள். நூற்றுக்கு மேற்பட்ட நாடுகளிலிருந்து இப்போட்டிக்கு 64,681 போட்டோக்கள் வந்தன. அவற்றில் 7,969 கலர் போட்டோக்கள். பாரதத்திலிருந்து 307 போட்டோக்கள் போட்டிக்குப் போயிருந்தன. அதில் 18 பரிசு பெற்றன. ஜெர்மனியிலிருந்து சென்றிருந்த 2188 போட்டோக்களில் 149-க்குப் பரிசுகள் கிடைத்தன. மொத்தத்தில் இப்போட்டி உலக மக்களின் போட்டோக் கலைத் திறமையை நிர்ணயிக்க உதவியதோடு, அவர்களை உற்சாகப் படுத்தவும் உதவி யிருக்கிறது. போட்டோக் கலையின் எதிர்காலம் சிறப்புடன் விளங்கும் என்ற நம்பிக்கையை இப்போட்டி அளிக்கிறது!



கண்ணன் பிறந்தான்

தங்க விக்கிரகம் போலிருந்த அந்தக் குழந்தையை அவளிடமிருந்து வாங்கி என் மனைவி இந்திரா என்னிடம் கொடுத்தாள். அதை நான் ஆசையோடு வாங்கிக் கொண்டேன். குழந்தையும் என்னைக் கண்டதும் எத்தனையோ நாட்களாக என்னிடம் பழகினமாதிரி 'களுக்'கென்று தன் பொக்கை வாய் திறந்து சிரித்தான். துன்பங்களையெல்லாம் துடைக்கும் அந்தச் சிரிப்பு ஒரே இன்ப மயமாயிருந்தது.

"குழந்தையை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளுங்கள் மிஸ்டர் கங்காதரன்!" என்றேன் நான்.

கங்காதரன் குழந்தையைக் கையில் வாங்கிக் கொண்டு, "ஆகா! நாங்கள் போய் வருகிறோம்! நாங்கள் நாளை ஊருக்குப் புறப்படுகிறோம். சொல்லிக் கொண்டு போகலாம் என்றுதான் வந்தோம்" என்று கூறி எழுந்தான். பிறகு, "பங்கஜம், வா நாழியாகிறது! ஸாருக்கு நமஸ்காரம் பண்ணு. அவருக்கு நாம் ரொம்பக் கடமைப் பட்டிருக்கிறோம்!" என்று அன்பு ததும்பக் கூறினான். பங்கஜம் என்னை நமஸ்கரித்து எழுந்தாள்.

நான், "எனக்கு என்னத்துக்கு இதெல்லாம்! அரசமரத்துப் பிள்ளையாருக்கு நமஸ்காரம் செய்யுங்கள். எல்லாம் அவர் அருளால்தான் நடந்தது!" என்றேன். பங்கஜம் நாணத்துடன் விடைபெற்றுக் கொண்டாள்.

கங்காதரனும் பங்கஜமும் போன பின்பு வீடே 'வெறிச்' என்றிருந்தது. என் நினைவு கங்காதரன் - பங்கஜம் இருவரையும் சுற்றிச் சுழன்று கொண்டிருந்தது.

அப்பப்பா! பங்கஜத்தின் முகத்தில் முன்பு குடி கொண்டிருந்த விவரிக்க முடியாத ஏக்க உணர்ச்சிதான் எத்தகையது! இப்பொழுது அவள் முகம் எப்படி மாறி விட்டது! கங்காதரனும் அவளும் மகிழ்ச்சிப் பெருக்கில் அல்லவா திளைக்கிறார்கள்! அதில் எனக்கும் என் மனைவி இந்திராவுக்கும் ஏற்பட்ட சந்தோஷத்தைச் சொல்லி முடியாது.

* * *

பண்டைக் காலத்து ஆதர்சங்களில் அளவு கடந்த நம்பிக்கை வைத்திருந்த இந்திரா, எப்படி நிகழ்காலத்துப் பிரத்தியட்ச நிலைமைக்கு ஏற்பத் திடீரென்று மாறினாள் என்பது எனக்கு அதிசயமாயிருந்தது. அதை ஒரு பெரிய புரட்சியாகவே நினைத்தேன்.

அந்தப் புராதன அரச மரமும் வேப்ப மரமும், புரசவாக்கத்து அக்ரஹாரத்துக்கே அலங்காரமாக விளங்கின. அந்த அழகை அழகுபடுத்தும் மாதிரியில் அரசமரத்து அழகிய மேடை விளங்கியது. அந்தச் சூழ்நிலைக்கே அழகையும் அந்தஸ்தையும் அளித்த வண்ணம் வீற்றிருந்தார் அரசமரத்தடிப் பிள்ளையார்.



சாதாரணமாக எல்லா அரசமரத்தடிப் பிள்ளையார்களையும் போல இந்தப் பிள்ளையார் அதிர்ஷ்டஹீனராக, கவனிக்கப் படாதவராக இருக்கவில்லை; மழை, வெய்யில், பனி இவைகளைத் தாங்கித் தவிக்கவும் இல்லை; இந்தப் பிள்ளையாருக்கு அழகிய சிறு கோயில் இருந்தது; இவருக்குக் காலை, மாலை இரண்டு வேளையும் ஒழுங்காகப் பூஜை நடைபெற்று வந்தது. ஏற்கனவே, பக்தி உணர்ச்சி மிகுந்த இந்திரா, இந்தக் குழ



நிலையில், அகம் களித்து ஆண்டவனை நினைந்து அடிக்கடி பரவச நிலையை அடையலானாள். சூரியோதயத்துக்கு முன்பு தினம் அரசமரத்தடியில் அவளைப் பார்க்கலாம்.

பெரம்பூரிலிருந்து நான் புரசவாக்கத்துக்குக் குடிவந்தபுதிதில், இந்திராவுக்கும் எனக்கும் சதா யுத்த காண்டமாயிருந்தது. குழாய் உபத்திரவம், குளிக்கும் அறை உபத்திரவம், துணி துவைக்கும் உபத்திரவம் – இப்படி ஒண்டுக் குடித்தனத்தின் சகல சௌபாக்கியங்களும் அந்த வீட்டில் இருந்தன. எப்போதாவது 'குளிப்பதற்குத் தாமதமாகிவிடுகிறது ; ஆபீசுக்கு ஒழுங்காய்ப் போக முடியவில்லை' என்று நான் தெரியாத்தனமாக இந்திராவிடம் சொல்லி விடுவேன். அவ்வளவுதான். 'இந்தச் சிரமங்களை யெல்லாம் வீடு பார்த்தபோதே யோசனை செய்திருக்கணும்' என்று அவள் தொடங்கி நான் சரணடைகிற வரையில் தீர்த்துக் கட்டி விடுவாள்.

இதற்கெல்லாம் ஒரு சுமுகமான முடிவு ஏற்பட வேண்டுமென்று அரசமரத்துப் பிள்ளையாரைத் தினம் வேண்டிக் கொள்ளுவேன். அரசமரத்துப் பிள்ளையார் வரப்பிரசாத மூர்த்தி தான். இல்லையென்றால், இந்திரா இப்படி மனம் மாறி விடுவாளா ! இப்பொழுது இந்திராவுக்கு, காசி, ராமேசுவரம் எல்லாம் எங்கள் அக்ரஹாரத்து அரசமரத்தடிதான் !

அரசமரத்து மேடையை ஒட்டிய, உள்ளடங்கிய ஒரு சிறு குடிலில்தான் நான் குடியிருந்தேன். நூறு குடித்தனங்களோடு ஆறுவது குடித்தனமாகப் பல அவஸ்தைகளுக்கிடையில் ஒண்டிக் கொண்டிருந்த எனக்கு அமைதியை நாடவேண்டிய அவசியம் அடிக்கடி ஏற்பட்டதில் சிறிதும் வியப்பில்லையல்லவா ! அந்தச் சமயங்களிலெல்லாம், அரசமரத்து மேடை எனக்கு அடைக்கலம் அளித்து மகிழ்வித்தது.

அரசமரத்துமேடை பெரியதாகவும் விசாலமாகவும் இருந்தது. அங்கேயும் என்னைப் போலவே மற்றக் குடித்தனக்காரர்களும், அக்ரஹாரத்து அன்பர்களும், வம்பர்களும் வந்து அமருவார்கள். ஆனால் அவர்கள் கூட்டம், மகாநாடு, தீர்மானங்கள் யாவும் இரவு ஒன்பது மணிக்குள் முடிந்து விடும். நான் அமைதியை நாடிப் போவது ஒன்பது மணிக்குப் பிறகு தான். ஆகையினால், அங்கே எனக்கு, நான் வேண்டிய நிம்மதி கிடைத்தது.

அன்று இரவு வழக்கம் போல் அரசமரத்து மேடையில் துண்டை விரித்துப் படுத்தேன். உடனே என் எண்ணமும் விரிந்தது. அரசமரத்தின் சல சலப்புச் சத்தம் என் சிந்தனைக் கோர்வைக்குச் சுருதி சேர்த்தது. அரச மரத்தைப் பிரதட்சிணம் செய்வதற்கு, அதிகாலையிலேயே ஸ்திரீகளும் இளம் பெண்களுமாகக் கூடிவிடுவார்கள். சிரத்தையோடு வைகறைத் துயிலெழுந்து ஸ்நானம் செய்து, அவர்கள் விதம் விதமான நிறங்களில் உடையணிந்து புஷ்பம், பாக்கு, வெற்றிலையுடன் அங்கு கூடியிருக்கும் காட்சி என் மனத்தில் மிகவும் தூய்மையாக இடம் பெற்று விட்டது. இது அரசமரப் பிரதட்சிணத்துக்கு மிகவும் விசேஷமான கார்த்திகை மாதமாதலால், சோமவாரமும் வெள்ளிக்கிழமையும் தவறாமல் பெண்கள் அரசமரத்து மேடைக்கு வந்து விடுவார்கள்.

பச்சை, நீலம், சிவப்பு, மஞ்சள், சாம்பல் நிறம், மாந்துளிர் நிறம், ரோஜா நிறம், கறுப்பு நிறம், மேக வர்ணம் – இப்படி வானவில்லின் வர்ண விசித்திரங்களை நினைவூட்டும் புடவைகளை அணிந்த, பூங்கொடிகளை நிகர்த்த பெண்கள் அங்கு வந்து அந்தச் சூழ்நிலையையே அமரருலகாக மாற்றி விடுவார்கள். நடுத்தர வயது ஸ்திரீகளும், இளம் பெண்களும், மூதாட்டிகளும் இவர்களுக்கிடையே கன்றுக் குட்டி மாதிரி துள்ளி வரும் சிறுவர் சிறுமியரும் அந்த மேடையில் வலம் வருவார்கள். இந்த அரிய காட்சியை என்னுடைய அறையில் இருந்த வண்ணமாகவே பார்க்கும் அரிய வாய்ப்பு எனக்கு இருந்தது.

எனக்கு என்னவோ அரச மரத்தைச் சுற்ற வேண்டும் என்று ஒரு நாள்கூடத் தோன்றியதில்லை. அதற்கு அவசியமும் இருக்கவில்லை. என் உள்ளம்தான் அந்தப் பெண்களோடு அரசமரத்தைச் சுற்றிச் சுற்றிச் சுழன்று கொண்டிருந்ததே !

அரசமரப் பிரதட்சிணத்துக்காக வரும் அத்தனை பேர்களையும் நான் அடிக்கடி பார்த்துக் கொண்டிருந்தாலும், எல்லோரும் என் நினைவுத் திரையில் நிற்கவில்லை. பங்கஜம் மட்டும்

தான் நின்றான். புரசவாக்கத்தில் பங்கஜங்களுக்குக் குறைவு ஏது! வீட்டுக்கு ஒரு பங்கஜம்! கங்காதரேசுவரர் கோயில் அம்மன் பெயர் பங்கஜாக்ஷி யாதலால் அதை ஒட்டி அந்தப் பெயர் அங்கே அதிகமாக அடிபட்டது.

பங்கஜத்திடம் அப்படி என்ன விசேஷம் இருந்தது என்றுதானே கேட்கிறீர்கள்! மற்றப் பெண்களுக்குப் பெயர் வைத்த போது ஏதாவது பெயரை வைத்தாக வேண்டுமே என்று வைத்திருப்பார்கள். ஆனால் இவளுக்கு மட்டும் அப்படியல்ல, பொருத்தம் பார்த்துப் பெயர் வைத்திருந்தார்கள். இவள் பெயரளவில் மட்டும் பங்கஜம் அல்ல; அன்றலர்ந்த பங்கஜ மலரின் மென்மையும், பொலிவும், புதுமையும் அவளிடம் அசாதாரணமாகக் குடிகொண் டிருந்தன.

அவளுக்கு வயது இருபத்தைந்து இருக்கும். அவள் மலர் முகத்தில் இனந் தெரியாத ஏக்கம் குடிகொண்டிருந்தது. அது தாயைப் பிரிந்த கன்றின் ஏக்கமா! பகவானைப் பிரிந்த பக்தனின் தாபமா! பொருத்தமில்லாத தாம்பத்திய வாழ்வின் விளைவான வேதனையா...! அரச மரத்தை அத்தனை சிரத்தையாகப் பிரதட்சிணம் செய்வதிலிருந்து அவள் மனதை அழுத்துவது மக்கட்பேறில்லாக் குறையாகத்தான் இருக்கும் என்று ஊகித்தேன்.

அந்த ஏக்கம் முகத்தில் படிந்திருந்தாலும் கூடப் பங்கஜத்தின் அழகு சிறிதும் குன்றி விடவில்லை. புகையுண்ட ஓவியம் போல் விளங்கினாள். ஒரு வன தேவதையின் வனப்பு அவளிடம் சுடர்விட்டுப் பிரகாசித்தது.

நான் பங்கஜத்தை விடாமல் கவனித்து வந்தேன். இரண்டொரு சந்தர்ப்பங்களில் அவளுடைய கணவனையும் அதே மேடையில் சந்தித்தேன். பங்கஜத்துக்கு எல்லா விதத்திலும் ஏற்றவனாக விளங்கினான் அவன். ஆகவே, அவளுக்குப் பொருத்தமில்லாத தாம்பத்திய வாழ்வு இருப்பதாகச் சொல்ல முடியவில்லை. பின் அவள் சோகத்துக்குக் காரணம்தான் என்ன! அவள் மனதில் புழுங்கும் வேதனை மக்கட் பேறில்லாத காரணத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டதல்ல என்று என் மனதுக்குள்ளே ஏதோ ஒன்று சொல்லிக் கொண்டிருந்தது. ஆனால் என் இந்த அபிப்பிராயத்தை எப்படி நிச்சயிக்கிறது! அவளைச் சந்தித்து உண்மையை எப்படி அறிவது!

என் மனைவி இந்திராவிடம் மெதுவாக அவளைப் பற்றிப் பிரஸ்தாபித்தேன். இந்திரா சொல்ல, அவள் பெயர் பங்கஜம் என்றும், அவளுக்கு விவாகமாகிப் பல வருஷங்கள் ஆகியும் குழந்தைப் பேறு கிட்டவில்லை என்றும் தெரிய வந்தன. எனக்கு இன்னும் அவளைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கு ஆவலாக இருந்தது.

ஒரு நாள் என்னுடைய ஆவல் எதிர்பாராத விதமாகப் பூர்த்தியாயிற்று. அரசமரப் பிரதட்சிணத்துக்கு வந்த பங்கஜமும் அவள் கணவன் கங்காதரனும் அதிகாலையில் எங்கள் வீட்டில் நுழைந்தார்கள். அந்த வீட்டு முன் பகுதியிலேயே நான் இருப்பதனால் வந்தவுடன் அவர்களைச் சந்தித்து, "வாருங்கள்" என்று அழைப்பது எனக்குச் சாத்தியமாயிற்று.



"அரசமரப் பிரதட்சிணத்துக்காக வந்தோம். கால் அலம்பிக் கொள்ள ஜலம் வேண்டும்... வழக்கமாக நாங்கள் பக்கத்து வீட்டுக்குப் போவோம். அவர்கள் ஊரில் இல்லை..." என்று இழுத்தாற் போல் சொன்னான் கங்காதரன்.

"அதற்கென்ன! நம் அகத்தில் உங்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொள்ளலாம்..." என்று கூறி, கங்காதரனை உள்ளே அழைத்துச் சென்றேன். என் பெண் பாலாவை அழைத்து, "பாலா, இதோ பார்! இந்த அம்மாமியை உள்ளே அம்மாவிடம் அழைத்துப் போ" என்றேன்.

சிறிது நேரத்துக் கெல்லாம் இந்திராவும் பங்கஜமும் தோழிகளாகி விட்டார்கள்.

அப்புறம் கங்காதரனும் பங்கஜமும் ஒவ்வொரு தடவை பிரதட்சிணத்துக்கும் என் வீட்டுக்குத் தவறாமல் வரத் தொடங்கினார்கள். அதிலிருந்து இந்திரா அவர்கள் குடும்பத்தைப் பற்றிய விவரங்களையெல்லாம் என்னிடம் சதா சொல்லத் தொடங்கினாள்.


* * *

பங்கஜம் சிறு வயதிலேயே பெற்றோரை இழந்து விட்டாள். சிறிய தந்தையின் ஆதரவில் வளர்ந்து, பதினேழாம் வயதில் கங்காதரனுக்கு மாலையிட்டாள். கணவனுக்கு மாலையிட்ட தினத்திலிருந்து அவள் அந்தப் பெரிய குடும்பத்தின் சமையற்காரியாகவும் பிரதம வேலைக்காரியாகவும் மாறினாள். கங்காதரனின் தமையன்மார்கள் இருவர்; விவாகமாகாத தங்கைகள் மூவர்; பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருந்த தம்பிகள் இருவர்; தாயார், தகப்பனார், சின்ன வயசிலேயே கணவனை இழந்த தமக்கை ஒருத்தி—ஆக இத்தனை பேர்கள் அடங்கிய அந்த மாபெரும் குடும்பத்தைக் கவனிக்க வேண்டிய சகல பொறுப்புக்களும் பங்கஜத்தின் தலையில் விழுந்தன.

விவாகமாகிப் பத்து வருஷ காலம் பங்கஜம் சம்பளம் இல்லாத வேலைக்காரியாக, அலுப்புச் சலிப்பின்றி மாடாக உழைத்தாள். பிறந்தகம் என்று ஒன்று இருந்தால்தானே பங்கஜம் அங்கே போவாள்! வருஷம் முந்நூற்று அறுபத்தைந்து நாளும் அவளுக்கு ஓய்வு ஒழிவில்லாத உழைப்பு, உழைப்பு, உழைப்புதான். உழைப்புக்கு ஆள் தேவையாயிருந்தபடியினால், பங்கஜத்தின் மாமி, நாத்திமார்கள் யாரும் அவள் பிறந்தகம் போகாததைப் பற்றிய பேச்சையே எடுக்கவில்லை.

பிள்ளைப் பேறு என்ற ஒரு பாக்கியம் இருந்திருந்தால் பங்கஜத்துக்கு அந்தச் சாக்கில் ஒரு சிறிது ஓய்வும், தான் பெற்ற செல்வத்தைப் பார்த்து மகிழும் ஒரு பாக்கியமும் கிடைத்திருக்கும். அதையும் இறைவன் அருளவில்லை. அதையும் பங்கஜத்தின் புக்ககத்துப் பேர்கள் ஒரு குறையாக ஆரம்பத்தில் நினைக்கவில்லை. பத்து வருஷ காலம் புத்திர பாக்கியம்


ஜாக்கிரதை - டின்னில் அடைக்கப்பட்ட
இந்த பார்லியையே
வாங்குங்கள்!
திறந்து விற்கப்படும் பார்லியானது அழுக்கு விஷக்கிருமிகள் முதலியவைகளால் பாதிக்கப்படலாம். அவ்வித பார்லியை வாங்கி கஷ்டத்திற்குள்ளாகாதீர்கள். நீங்கள் ராபின்ஸன்ஸ் பேர்ல் பார்லியையே வாங்குங்கள். அதுவே சுத்தமானது; புத்தம் புதியது; பத்திரமானது. ஏனெனில் அது சுகாதார முறைப்படி காற்றுப் புகாமல் டின்னில் அடைக்கப்பட்டது.
ROBINSON'S
PEARL
BARLEY
ராபின்ஸன்ஸ் பேர்ல்
பார்லியையே
கேட்டு வாங்குங்கள்
முற்றிலும் சுத்தமானது


தண்ணீர் பம்புகளில்
மிக நவீனமானது
இந்த புத்தம் புதிய மயர்ஸ் எஜக்டோ பம்பில் எவ்விதமான அசையும் பாகங்கள் இல்லை. அதற்கு லூப்ரிகேஷன் அவசியமில்லை. வெகு சிக்கனமாக இயங்கச் செய்யலாம். அதிக அழுத்தும் சக்தியினால் தாராளமான தண்ணீர் சப்ளை கிடைக்கும். உங்களது முதலீட்டை மயர்ஸ் எஜக்டோ பம்பிலேயே செய்யுங்கள். 'வி' பெல்ட் பூட்டிய ரகத்திலும், நேரிடையாக இணைத்து இயங்கும் ரகத்திலும் கிடைக்கும்.
MYERS
EJECTO
PUMPS
வாட்டர் சப்ளை
ஸ்பெஷலிஸ்ட்ஸ் லிட்.
45, தம்பு செட்டித் தெரு, சென்னை-1



அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் ஆராய்ச்சிக்காகப் புதிதாக அமைக்கப் பெற்றிருக்கும் டாக்டர் ஆர். கே. சண்முகம் செட்டியார் கட்டடம். இது டிசம்பர் மாதம் 26-ந் தேதி இந்தியக் குடியரசின் துணைத் தலைவர் டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்களால் திறந்து வைக்கப்பெற்றது.

இல்லாமற் போகவே, அண்டை அயல் வீட்டாரும், உறவினரும் பங்கஜத்துக்கு மலட்டுப் பட்டம் சூட்ட ஆரம்பித்தனர். அதன் விளைவாகத்தான் பங்கஜமும் கங்காதரனும் அரசமரப் பிரதட்சிணம் செய்யலாயினர்.

பல நாட்கள் அரச மரத்தைச் சுற்றியும் பலன் கிட்டாமற் போகவே, பங்கஜத்தின் புக்ககத்து மனிதர்கள் எல்லோரும் அவளை வெறுப்புடன் ஒதுக்கி வைக்கலாயினர்.

இந்த விவரங்களை யெல்லாம் என்னிடம் சொன்ன போது இந்திராவுக்குக் குரல் தழுதழுத்தது; கண்ணீர் பிரவாகமெடுத்தது.

"பங்கஜத்தின் துயரம் நிறைந்த வாழ்க்கையிலேயே அரசமரப் பிரதட்சிணம் ஒன்றுதான் மனசுக்குச் சந்தோஷத்தையும் உற்சாகத்தையும் கொடுத்து வந்தது. அவள் மாமியார் வரவர, அதனுல் பலன் இல்லை என்பதைக் கண்டு நிறுத்திவிட வேண்டும் என்கிருளாம். எப்படி யிருக்கிறது சங்கதி! பங்கஜத்துக்கு அந்தச் சந்தோஷமும் இனிமேல் இருக்காது. அவளுக்கு அரசமரம் சுற்றுவதில் ஏன் அத்தனை சந்தோஷம் சொல்லுங்கள், பார்க்கலாம்!" என்று கேட்டாள் இந்திரா.

"குழந்தை வேண்டும் என்கிற ஆசைதான் காரணம்!" என்றேன்.

"அதுமட்டும் இல்லை. பங்கஜம், பாவம்! அரசமரத்தடிக்கு வரும் ஒரு சந்தர்ப்பத்தில்தான் அகமுடையானைத் தனியாகப் பார்க்க முடிகிறது; அவருடன் ஜோடியாக இணைந்திருக்க முடிகிறது. வீட்டுக்குப் போய்விட்டால் இராப் பகல் வீட்டு வேலைதான் சரியாயிருக்கும். அதனுல்தான் அவள் வருத்தப்படுகிறுள், பாவம்!"

இந்திரா சொன்னதைக் கேட்ட எனக்கு ஆச்சரியம் தாங்கவில்லை.

"ஏன் இந்திரா! இந்த நாளில் கூடவா அந்த மாதிரிக் குடும்பங்கள் இருக்கின்றன!" என்று வியப்புடன் கேட்டேன்.

"ஏன் இல்லாமல்......! நிதர்சனமாகப் பங்கஜத்தின் குடும்பம் இருக்கிறதே!" என்றுள் இந்திரா.

"எனக்கு நீ சொல்லுவதைக் கேட்க ஆச்சரியமாயிருக்கிறது!" என்றேன்.

"இதில் ஆச்சரியம் என்ன இருக்கிறது! உலகம் ரொம்ப முன்னேறிவிட்டதாக நீங்கள் நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள். ஆனுல் ஒரு பக்கம் உலகம் முன்னேறிக் கொண்டிருந்தாலும், இன்னெரு பக்கம் பிற்போக்கிலேயே இருக்கிறது!" என்றுள் இந்திரா.

"ஆமாம், இந்திரா, நீ சொல்லுவது உண்மைதான்!" என்றேன்.

"அது இருக்கட்டும். நீங்கள் ஒரு காரியம் செய்ய வேண்டும். அது பங்கஜத்துக்குப் பெரிய உதவி. நமது அரச மரத்துக்கும் பிள்ளையாருக்கும் கூடப் பெருமையாயிருக்கும்!" என்றுள் இந்திரா.

"இந்திரா, பீடிகை பலமாயிருக்கிறதே! அது என்ன உதவி!" என்று கேட்டேன்.

"தேவர்களுக்கு மன்மதன் செய்த உதவியை இப்பொழுது நீங்கள் செய்ய வேண்டும்."

"சிவபெருமான் தபஸைக் கலைத்து மன்மதன் சாம்பலாகப் போனுனே, அந்தமாதிரி என்னையும்......!"

"சை, என்ன பேச்சு! மன்மதன் கரியாய்ப் போனதுதான் உங்களுக்கு நினைவிருக்கிறது! அவன் கரியாய்ப் போனுலும், அவன் எடுத்த காரியம் சித்தியாகி விட்டதே! சிவபெருமான் தவம் கலைந்துவிட்டதல்லவா! மன்மதன் யோக நிஷ்டையிலிருந்த பரமசிவனையும், பர்வதராஜனின் மகளாகப் பிறந்து பரமசிவனையே பதியாக அடையத் தவமிருந்த பார்வதியையும் ஒன்று சேர்த்து வைத்தானே, அதைச் சொல்லுகிறேன். அதற்குப் பிறகுதானே முருகன் அவதாரம் ஆனுர்!"

இந்திராவின் பேச்சு உண்மையாகவே எனக்கு அதிசயத்தைத் தந்தது.

"இந்திரா, எனக்கு விஷயம் விளங்கிவிட்டது. பங்கஜமும் கங்காதரனும், கணவனும் மனைவியுமாக இன்ப வாழ்வு நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும் என்கிருய். புத்திர பாக்கியம் அவர்களுக்குக் கிட்ட வேண்டுமானுல் அதைச் செய்துதானுக வேண்டும்."

"ஆமாம். பங்கஜம் அவர்கள் வீட்டில் நடக்கும் நரக வாழ்வைச் சொன்னபோது அதைக் கேட்ட எனக்கு மனம் அடித்தது. காலை எழுந்தது முதல் இரவு படுக்கப் போகும் வரையில் செக்கு மாடாக உழைக்கும் அவளுக்குக்

கணவனுடன் அவள் முகம் பார்த்துப் பேசக் கூட அவகாசம் கிடையாதாம். இது போதாத குறைக்கு, மாமியாரும், நாத்தனார்களும், அவள் கணவனுடன் பேசிவிடாதபடி சர்வ ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளுகிறார்களாம்! அவர்கள் அறை வாசற்படியிலேயே தலையை வைத்துப் படுத்துக் கொண்டிருந்தால் அவள் என்ன செய்வாள்! உங்கள் சிநேகிதர், அவள் கணவர் ஒரு அப்பாவி என்று தெரிகிறது. இத்தனையும் பண்ணினது போதாதென்று, அரசமரத்தையும் பிள்ளையாரையும் குறை சொல்ல ஆரம்பித்து விட்டார்கள். அதுதான் எனக்கு ரொம்ப வயிற்றெரிச்சலாயிருக்கிறது" என்றாள் இந்திரா. அவள் முகத்தில் கோபம் தாண்டவமாடியது.

"இந்திரா, கவலைப்படாதே. நான் விரைவில் இதற்கு ஒரு ஏற்பாடு செய்கிறேன். கங்காதரன் வேலை செய்யும் கம்பெனியின் மானேஜர் எனக்கு ரொம்ப வேண்டியவர். அவரிடம் சொல்லி, கங்காதரனை வெளியூர்க் கிளை ஆபீஸுக்கு மாற்றிவிட முயற்சி செய்கிறேன். ஆனால்......கங்காதரன் இந்த ஏற்பாட்டுக்கு ஒப்புக் கொள்ள வேண்டுமே!" என்றேன் நான் சிறிது கவலையுடன்.

"அதைப் பங்கஜம் கவனித்துக் கொள்ளுவாள். நீங்கள் எப்படியாவது அவருக்கு வெளியூருக்கு மாற்றல் உத்தரவு வாங்கித் தந்து விடுங்கள். அப்பொழுதுதான் பங்கஜத்தின் முகத்தில் காணப்படும் சோகம் மாறும்" என்றாள் இந்திரா.

"இந்திரா, நீ ரொம்ப புத்திசாலி. உன் யோசனை யாருக்கு வரும்! நீ துளிகூடக் கவலைப் படாதே. கங்காதரனுக்கு மாற்றல் உத்தரவு மிகவும் சீக்கிரத்தில் கிடைக்கும்படி செய்கிறேன்!" என்றேன் நான்.

"நீங்கள் என்னைப் புகழுவது அப்புறம் இருக்கட்டும். உங்கள் மகிழ்ச்சியைக் காரியத்தில் காட்டுங்கள். பங்கஜத்தின் நல்வாழ்வு உங்களிடம்தான் இருக்கிறது!" என்று கெஞ்சும் தோரணையில் இந்திரா சொன்னது என் நெஞ்சில் புகுந்து உலுக்கி விட்டது.

நான் மறுநாளே கங்காதரன் வேலை பார்த்து வந்த கம்பெனியின் மானேஜரைப் பார்த்து, கங்காதரனை வெளியூருக்கு மாற்ற ஏற்பாடு களைச் செய்தேன். ஒரு வாரத்தில் கங்காதரனுக்குப் பெங்களூருக்கு மாற்றல் உத்தரவு வந்து விட்டது. கங்காதரன் பங்கஜத்தையும் அழைத்துக் கொண்டு, பெங்களூருக்குப் புறப்பட்டுவிட்டான்.

இதில் இன்னொரு அதிசயம் என்னவென்றால், அதிர்ஷ்டவசமாக, மாற்றலானதில் அவன் சம்பளமும் உயர்ந்து இன்னும் பெரிய உத்தியோகமும் கிட்டியது.

ஏழு மாதங்களுக்குப் பிறகு பங்கஜமும் கங்காதரனும் பெங்களூரிலிருந்து வந்தார்கள். பங்கஜத்துக்குச் சம்பிரமமாக வளை காப்பு, சீமந்தம் எல்லாம் முறையாக நடந்தேறின. அப்புறம் பங்கஜம் கண்ணனுக்குத் தாயானாள். பிறகு கேட்கவேண்டுமா! பங்கஜத்தின் புக்ககத்துப் பேர்கள் அவளைத் தலையில் தூக்கி வைத்துக்கொண்டு கூத்தாடினார்கள். அவள் அந்தஸ்து இப்பொழுது மிகவும் உயர்ந்துவிட்டது.

"மணி பன்னிரண்டாகப் போகிறதே! உள்ளே வந்து படுத்துக் கொள்ளுங்கள். காலையில் ஆறு மணிக்கெல்லாம் அரச மரத்துப் பிள்ளையாருக்கு உங்கள் நண்பர் கங்காதரன் அபிஷேகம் பண்ணப் போவதாகச் சொன்னாரே! நினைவில்லையா! சீக்கிரம் படுத்துக் கொண்டால்தானே காலையில் சீக்கிரம் எழுந்திருக்கலாம்!" என்று கேட்டு என்னை எழுப்பினாள் இந்திரா. பக்கத்து வீட்டுக் கடிகாரத்தில் பன்னிரண்டு மணி அடித்தது.

டி.கே.சி.யின் கடிதங்கள்

திருக் குற்றாலம்
24—7—47

உண்மை உணர்ச்சிகளோடு கூடிய உயர்ந்த எழுத்தை அறிந்து அநுபவிப்பவர் கிடையாது. வெகு அபூர்வம், என்று என் அபிப்பிராயம். "உண்மையே தனக்கு இலக்கிய உருவம் படைத்துக் கொள்கிறது" என்ற விஷயத்தை எடுத்துச் சொல்லி அதில் வெற்றி அடைந்து விட்டேன் என்று சொல்ல முடியாது. மாம்பழத்தின் உருவத்தைப் பற்றி 'என்ன நிறம்! என்ன வாட்டம்! கிளிமூக்குத்தான் என்ன!' என்று சொல்லிக் கொண்டிருப்போம். ஆசாமி உள் கட்டுக்கு ஓடிப்போய்க் கத்தியை எடுத்து வருவான் பழத்தை அறுக்க.

மாம்பழம் பட்டபாடுதான் இலக்கியமும் பட்டுக் கொண்டிருக்கிறது. உருவத்தின் அருமையையும் சிருஷ்டி தத்துவத்தின் அற்புதத்தையும் கவனிப்பது கிடையாது, அநேகமாய். கம்பரைப் பற்றி வேண்டாத கதைகள் எல்லாம் சொல்லுவார்கள். ஒட்டக் கூத்தரையும் கம்பரையும் சோழன் போட்டிக்கு விட்டான். அந்தப் போட்டியின் விளைவு கம்பராமாயணம் என்றெல்லாம் சொல்லுவார்கள். ஆனால் "ஆசை பற்றி அறையல் உற்றேன்" என்றுதான் கம்பர் சொல்கிறார்.

இந்த ஆசையைத்தான் கம்பரது கவிகளில் தொனிக்கக் காண்கிறோம். நம்முடைய உள்ளத்துக்கு உவந்த தொனி அது.

டி. கே. சிதம்பரநாதன்



மார்க்கசகாயம் ரஜா எடுக்க நேரும் போதெல்லாம், "இதோ பாரும். நீங்கள் அடிக்கடி ரஜா எடுக்கிறீர். இம்மாதிரி நடந்து கொண்டால், சரிப்படாது. ஜாக்கிரதை!" என்று எச்சரிக்கை செய்த வண்ணமிருந்தார் மானேஜர் பழனியப்பன்.

பாவம்! மார்க்கசகாயம் பயந்த சுபாவமுள்ளவன். ரஜா கேட்க அச்சத்துடன் செல்வான். எனினும், சோதனையாக ஏதாவது காரணத்தைக் கொண்டு, ரஜா எடுக்கும் அவசியம் அவனுக்கு அடிக்கடி ஏற்படத்தான் செய்தது.

இந்த ஆண்டு அவனுக்கு இருந்த இருபது தினங்களில், ஏற்கனவே பதினைந்து தினங்கள் எடுத்தாகி விட்டன. மிச்சம் ஐந்து தினங்கள்தான் பாக்கி.

திடீரென்று அவனுக்குக் கல்யாணம் நிச்சயமாயிற்று. அதற்குக் குறைந்தது பத்து தினங்களாவது ரஜா எடுக்க வேண்டும் என்று எல்லாரும் நச்சரித்தார்கள். ஏனெனில் கல்யாணம் வெளியூரில் நடக்க ஏற்பாடாகி யிருந்தது.

ஆனால், அவன் கணக்கில் ஐந்து தினங்கள் மட்டுமே எஞ்சி யிருந்ததால், அதற்குமேல் ஒரு நிமிஷங்கூடத் தரமுடியாது என்று திட்ட வட்டமாய்க் கூறி ரஜா மனுவில் கையெழுத்திட்டார் மானேஜர். அத்துடன் நின்றால்கூடப் பரவாயில்லை. அந்த ரஜா மனுவில் மேற்கொண்டும் சில வரிகள் வரிந்து தள்ளி யிருந்தார். "ஐந்து தினங்களுக்குமேல் தங்கினால், உனக்கு வேலையே போய்விடும். ஜாக்கிரதை!" என்ற வரிகள் தான் அவை.

மார்க்கசகாயம் பெரிய பணக்காரப் பிள்ளையல்ல, 'உங்கள் வேலை வேண்டாம். இத்தாருங்கள், என் ராஜிநாமா!' என்று சொல்லி விடுவதற்கு. அவன் சம்பாத்தியத்தினால்தான் அவன் வீட்டு அடுப்பு புகைந்தது. அப்படியிருக்க, மானேஜரிடம் தன் விருப்பைக் காட்ட முடியுமா? 'சரி' என்று அவன் ஒப்புக் கொண்டு கிளம்பினான் ரஜாவில்.

கல்யாணம் முடிந்து, அவன் வந்து சேர்ந்திருக்க வேண்டிய குறித்த தினத்தில் அவன் வரவில்லை.

அன்று பிற்பகல் இரண்டு மணிக்கு மார்க்கசகாயத்தினிடமிருந்து, மானேஜர் பழனியப்பனுக்கு ஒரு தந்தி கிடைத்தது.

"ஒரு முக்கியமான காரணத்தினால், குறித்தபடி வர இயலவில்லை. இன்னும் ஒரு தினம் ரஜா தேவை.—மார்க்கசகாயம்" தந்தியின் வாசகம் இதுதான்.

இதைக் கண்ணுற்ற பழனியப்பன் டென்னிஸ் பந்தைப் போலக் குதித்தார்.

"என்ன முக்கிய காரணம்? புது மாப்பிள்ளை! மாமனார் வீட்டை விட்டுவர மனசு வருமா? வரட்டும்!" என்று கையாண்டியுடன் கூறினார்.


உடனே தலைமைக் குமாஸ்தாவை அழைத்து, "ஸார்! மார்க்க சகாயத்தின் சேவை இனி நமக்குத் தேவையில்லை. எங்கே? சீக்கிரம் உத்தரவு டைப் ஆகட்டும். அவர் நாளை வந்தால், உத்தரவைச் சாதரா செய்து கணக்கைத் தீர்த்து அனுப்பி விடும்" என்று படபடவென்று கூறி விட்டுப் போய் விட்டார் மானேஜர்.

அவர் உத்தரவுக்கு மாற்று ஏது? அடுத்த பத்தாவது நிமிஷத்தில், மார்க்கசகாயத்தை வேலையை விட்டு நீக்கும் உத்தரவு, மானேஜரின் கையெழுத்தை எதிர்பார்த்து அவர் மேஜையின் மேல் தவம் கிடந்தது.

மானேஜர் அதில் கையெழுத்திடும் தருணம், தலைமைக் குமாஸ்தா அவர் எதிரில் போய் நின்றார். கையெழுத்துப் போட்டு நிமிர்ந்த பழனியப்பன், "என்ன?" என்ற கேள்விக் குறியுடன் அவரை நோக்கினார்.

"ஒரு விஷயம். மார்க்கசகாயம் ஏதோ முக்கியமான விஷயம் இல்லா விடில், தாமதித்திருக்க மாட்டார் என்று நினைக்கிறேன். எதற்கும் அவர் வந்த பிறகு, நேரில் விசாரித்து விட்டு முடிவு செய்ய லாம் என்று படுகிறது" என்று இழுத்தார் தனபால்.

"ஸார்! எனக்குத் தெரியும். நான் ஏற்கனவே முடிவுக்கு வந்த ஒரு விஷ



யத்தை மாற்ற முடியாது. கல்யாண ஜோரில் காரியாலயக் கடமையை மறந்து விட்டவருக்கு வேறுவிதமான தண்டனை கிடையாது. என் பேரில் பிசகு உண்டா? நான் முன் கூட்டியே எச்சரிக்கை செய்தேனா, இல்லையா? சரி, நீர் போகலாம்" என்று முகத்தைத் திருப்பிக் கொண்டார் பழனியப்பன்.

தனபால் மனம் ஒடிந்து போனார். பாவம்! கல்யாணம் செய்து கொண்ட அடுத்த நிமிஷத்தில், மார்க்கசகாயம், தம் வேலை போய் விட்டது என்று அறிந்தால் எப்படித் தவிப்பார்? அதுமட்டுமா? பார்ப்பவர்களும், கேட்பவர்களும் தான் என்ன கூறுவார்கள்? "அந்தப் பெண்ணைக் கைப்பிடித்த முகூர்த்தம் வேலை போச்சு, ஐயா!" என்று அந்தப் பெண்ணையல்லவா கரித்துக் கொட்டுவார்கள் என்று அங்க லாய்த்தார். தம் மானேஜரின்மீது கோபம் கோபமாக வந்தது அவருக்கு.

மறுநாள் காலை. வழக்கம்போல், தனபால் காரியாலயம் சென்றதும், மானேஜரிடமிருந்து ஒரு குறிப்பு வந்திருந்தது.

"என் உறவினர் சிலர் வெளியூரிலிருந்து வந்திருப்பதால் நான் சற்றுத் தாமதித்துத் தான் வர முடியும். எனக்காகக் காத்திராமல், மார்க்கசகாயத்தின் உத்தரவை அவர் வந்தால் கொடுத்து அவரைக் கணக்குத் தீர்த்து அனுப்பி விடவும்."

குறிப்பைப் படித்து முடித்ததும், தன் எதிரே மார்க்கசகாயம் நிற்பதைக் கண்டு, தனபால் அவனை மிகுந்த அநுதாபத்துடன் நோக்கினார்.

அவருடைய முக பாவத்தைக் கண்ட மார்க்கசகாயத்தின் வயிறு பகீரென்றது.

"என்ன ஸார்! விஷயம் ஏதாவது......?" என்று நாக்குழறக் கேட்டான் அவன்.

அவன் முகத்தைப் பார்க்கக் கூடத் துணிவில்லாமல், தன் மேஜை டிராயரிலிருந்து ஒரு கவரை எடுத்து, அவன் முன் நீட்டினார் தலைமைக்குமாஸ்தா.

நடுங்கிய கைகளுடன் அதைப் பெற்றுக் கொண்டு படித்தான் மார்க்கசகாயம்.

அவன் தலை சுழன்றது. 'என் வேலை போய்விட்டதா? கடவுளே! உன்னுடைய சோதனையா இது?' நிமிர்ந்து மீண்டும் தலைமைக் குமாஸ்தாவை நோக்கினான். அவர் கண்களிலிருந்தும் கண்ணீர் பிரவாகமாகப் பெருகிற்று.

"மிஸ்டர் மார்க்கம்! இந்தப் பாவியின் கையால் இந்த உத்தரவு உங்களுக்குத் தர வேண்டுமா?" என்று விம்மினார்.

ஒருவாறு தன்னைச் சமாளித்துக்கொண்ட மார்க்கசகாயம் கூறினான்:

"ஸார்! நான் இதை எதிர்பார்க்கவே யில்லை. குறித்தபடி வந்திருப்பேன். ரயிலுக்கு வரும் வழியில் ஒரு குழந்தை — சுமார் நான்கு வயதிருக்கும் – வீதியில் விளையாடிக் கொண்டிருந்தது. திடீரென்று வந்த ஒரு காரில் அது அகப்பட்டுக்கொள்ள இருந்தது. அந்தச் சமயம் அவ்வழியே நான் சென்றேன். நிலைமையை ஒரு நொடியில் உணர்ந்து, குழந்தையை வாரி அணைத்து அப்புறப்படுத்தினேன். குழந்தையின் ஆயுள் கெட்டியாய்த்தானிருக்க வேண்டும். இல்லையேல், நான் அந்தப் பக்கம் செல்ல நேர்ந்திராது. அடுத்த கணம் கூட்டம் கூடி

விட்டது.. இந்த நகரையில் என் ரயிலை விட்டுவிட்டேன். எனவே, ஒருநாள் தாமத மாகிவிட்டது. அங்கே ஒரு உயிரைக் காப்பாற்றியதற்குப் பரிசு, இங்கே எனக்குக் கிடைத்து விட்டது, ஸார்! எனக்காக நீங்கள் கலங்க வேண்டாம். மரம் வைத்தவன் தண்ணீர் ஊற்றாமலா போகிறான்? உங்கள் அன்பும் அனுதாபமும் எவ்வளவோ என் மனசுக்கு இதமாயிருக்கின்றன. நான் போய் வருகிறேன்" என்று கூறி விடைபெற்றுக் கொண்டு இளம் பிறன் மார்க்கசகாயம்.

அன்று மாலை, மார்க்க சகாயத்தை வீட்டில் சந்தித்து, சமாதானப் படுத்தி விட்டு வரவேண்டும் என்றும், அவனுக்காக வேறு எங்காவது சிரமப்பட்டு, ஒரு தக்க வேலை தேடித் தரவேண்டும் என்றும் தீர்மானித்தார் தனபால். அன்று மாலை மார்க்க சகாயத்தின் வீட்டை யடைந்த போது, வீடு பூட்டியிருக்கக் கண்டு தனபால் ஏமாற்ற மடைந்தார்.

இரண்டு தினங்களுக்குப் பின்பு, மானேஜர் பழனியப்பன், தனபாலை அழைத்து, "ஸார், நாளை முதல் மார்க்கசகாயத்தின் ஸ்தானத்துக்கு வேறொரு நபர் வருகிறார். அனேகமாக நானே அவரை அழைத்து வருவேன்" என்று கூறினார். தனபால் ஒன்றும் கூறவில்லை. சரி என்பதற்கு அடையாளமாகத் தலையை மட்டும் அசைத்து வைத்தார்.

மறுநாள் மானேஜர் பழனியப்பன் ஒரு நபரைத் தன்னுடன் அழைத்து வந்தார் காரியாலயத்துக்கு. "மிஸ்டர் தனபால், நான் குறிப்பிட்ட நபர் இவர் தான். மார்க்க சகாயத்தின் வேலைகளை யெல்லாம் இவரிடம் விவரித்துச் சொல்லுங்கள்" என்று கூறிவிட்டுப் போய் விட்டார்.

தனபால், அந்தப் புது நபர் மானேஜர் பழனியப்பனுடைய நெருங்கிய உறவினர் தான் என்பதைத் தெரிந்து கொண்டார். "சரி, சரி, இவருக்கு எப்படியாவது தன் காரியாலயத்தில் வேலை கொடுக்கவேண்டும் என்பதற்காகத்தான், ஒரு அற்ப காரணத்துக்காக மார்க்கசகாயத்தை வேலையை விட்டு நீக்கியிருக்கிறார் மானேஜர்" என்று எண்ணிக் கொண்டார்.

அன்று மானேஜர் பழனியப்பன் சற்று உற்சாகமாயிருந்தார். தனபால் அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று தீர்மானித்தார். காரணம், மார்க்கசகாயத்துக்காகத் தான். அன்றைய தினம் வேறொரு குமாஸ்தா திடீரென்று ராஜினாமாச் செய்துவிட்டான், வேறு ஒரு உயர்ந்த வேலை கிடைத்து விட்டதனால். அந்த ஸ்தானத்திலே மீண்டும் மார்க்கசகாயத்தை அமர்த்தலாம் என்ற எண்ணம்.

"ஸார், ஒரு விஷயம்!" என்று ஆரம்பித்தார் தனபால்.

"என்ன?" என்று கேட்டார் மானேஜர்.

"நமது மார்க்கசகாயம் விஷயம் தான். தாங்கள் அன்று ரொம்பவும் கோபமாக இருந்ததால், அவர் தாமதித்து வந்ததற்குக் காரணம் கூற முடியவில்லை. அவர் குறிப்பிட்டபடி வந்திருப்பார். வழியில் ஒரு குழந்தை-காரில் அகப்பட்டுக் கொள்ள இருந்த சமயம், சட்டென்று பாய்ந்து சென்று காப்பாற்றினாராம். அதில் தாமதம் ஆகி வண்டி தவறி விட்டது" என்று



கூறிக் கொண்டிருந்த போதே அருகில் நின்று கேட்டுக் கொண்டிருந்த புது குமாஸ்தா—மார்க்க சகாயத்தின் ஸ்தானத்தில் அமர்ந்திருப்பவன், "ஸார்! குழந்தையைக் காப்பாற்றிய சம்பவம் சொன்னீர்களே, அது எங்கே நடந்தது?" என்று மிகவும் துடிதுடிப்புடன் கேட்டான்.

"சேலத்தில்" என்றார் தனபால்.

"மாமா! நம் குழந்தைக்குத் தான் அது! அதைக் காப்பாற்றியவர் தங்கள் காரியாலயத்தில் வேலை பார்த்தவரா? அடடா! அவரையா வேலையை விட்டு

நீக்கினீர்கள்? வேண்டாம், மாமா! இப்போதே அவருக்குச் சொல்லியனுப்புங்கள். நான் விலகிக் கொள்கிறேன்" என்று பரபரப்புடன் கூறினான் அந்தப் புது குமாஸ்தாவும், மானேஜரின் மருமானுமான சங்கரலிங்கம்.

மானேஜர் பழனியப்பன் தலை சுழன்றது.

"ஆ, சங்கரா! உன் குழந்தையைக் காப்பாற்றியது மார்க்கசகாயமா? எனக்குத் தெரியாமல் போயிற்றே! எனக்குத்தான் எத்தனை அவசர புத்தி! மிஸ்டர் தனபால்கூடச் சொன்னாரே, ஏதோ அவசரமான காரியம் இல்லாவிடில் மார்க்கசகாயம் தாமதித்திருக்க மாட்டார் என்று. கேட்காமற் போனேனே! மிஸ்டர் தனபால்! எங்கள் குழந்தை என்பதனால் மட்டும் அல்ல. யார் குழந்தையாயினும், அந்தச் செயலுக்காக, நான் மார்க்கசகாயத்தைப் பாராட்டியிருக்க வேண்டும். நீங்கள் அப்போதே துணிந்து என்னிடம் விஷயத்தைச் சொல்லியிருக்கலாம். சரி, இப்போதே மார்க்கசகாயத்தை வரவழைக்க ஏற்பாடு செய்யுங்கள், சீக்கிரம்!" என்றார் மானேஜர் உணர்ச்சி மேலிட்டவராய்.

என்ன ஆச்சரியம்! அப்போது அங்கு தோன்றினான் மார்க்கசகாயம், "ஸார்! நமஸ்காரம்" என்று மானேஜருக்கு வணக்கம் கூறியபடியே.

"அட! இதோ மார்க்கசகாயமே வந்து விட்டாரே, கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்த மாதிரி!" என்றார் வியப்புடன் மானேஜர்.

"உமக்கு நூறு வயசு ஐயா!" என்றார் குதூகலத்துடன் தனபால்.

"உங்களைப் பார்க்கத்தான் வந்தேன்!" என்று கூறிவிட்டு மானேஜரையும், தனபாலையும் நோக்கிப் பவ்யமாக நின்றான் மார்க்கசகாயம்.

"ரொம்ப நல்லதாய்ப் போயிற்று. நடந்ததை மறந்து விடுங்கள். உங்கள் வேலையை இப்போது முதல் ஏற்றுக் கொள்ளுங்கள்" என்றார் மானேஜர்.

மார்க்கசகாயத்துக்கு ஒன்றும் புரியவில்லை. ஆச்சரியம் தோன்ற மானேஜரையும் தனபாலையும் ஏறிட்டு நோக்கினான்.

மானேஜர் தொடர்ந்தார்: "மார்க்கசகாயம்! நான் உங்களுடைய விஷயத்தில் அவசரப்பட்டு முடிவு செய்து விட்டேன். சேலத்தில், நீங்கள் ஒரு குழந்தையின் உயிரைக் காப்பாற்றினீர்கள். அதன் பொருட்டுத்தான், வரத்தாமதம் ஆயிற்று என்னும் விஷயம் இப்போதுதான் தெரிந்தது. அந்தக் குழந்தை என் மூத்த சகோதரியின் பேத்தி. என் உறவினரின் குழந்தை என்பதனால் மட்டும் சொல்லவில்லை. பொதுவாக ஒரு உயிரைக் காப்பாற்றிய தங்களை நான் வெகுவாய்ப் பாராட்டியிருக்க வேண்டியவன். அதற்கு மாறாகத் தங்களை வேலையை விட்டே நீக்கினேன். மனிதனுக்குச் சில சமயம் அவசர புத்தி ஏற்பட்டுப் பின்னால் அதற்காக வருந்தும் நிலை ஏற்படுகின்றது என்பதற்கு என்னைத் தவிர வேறு உதாரணமே தேவையில்லை. மிஸ்டர் தனபால்! இவரை அழைத்துக் கொண்டு போங்கள்" என்று எழுந்து அன்புடன் மார்க்கசகாயத்தை அணைத்தார்.

மார்க்க சகாயம் தயங்கியபடி கூறினான்:

"ஸார்! தங்கள் அன்புக்கு நான் கட்டுப்படுகிறேன். நன்றியும் செலுத்துகிறேன். ஆனால்?..."

"என்ன ஆனால்...?" என்றார் மானேஜர்.

"எனக்கு வேறு வேலை கிடைத்து விட்டது. பழைய விசுவாசத்தின் காரணமாய்த் தங்களையும் தனபாலையும் காணுவதற்காக வந்தேன். என்ன இருந்தாலும் தங்கள் காரியாலயத்து உப்பைச் சாப்பிட்டவன் அல்லவா?" என்றான் மார்க்கசகாயம் நிதானமாய்.

இதைக் கேட்ட மானேஜரின் மனம் மளுக்கென்று முறிந்தது!




சதரன் ரோட்வேஸ் லிட்.

(டி. வி. எஸ். ஸ்தாபனம்)

கால அட்டவணைப்படி
இயங்கும்
பஸ்





இந்தியாவிலேயே
தலைசிறந்து
பணியாற்றி விளங்கும்,
"கால அட்டவணை"

லாரி

எமது ஒன்றே

★

வருடந்தோறும்
1½ கோடி மைல்கள்
குறிப்பிட்ட நேரத்தில்
செல்வது எமது சிறப்பு

சதரன் ரோட்வேஸ்

லிமிடெட்

(ரஸ்தா போக்குவரத்து எமது பணி)

மதுரை

சிவன் கீர்த்தனைகள்

ஸ்வர அமைப்பு : செம்மங்குடி சீனிவாச ஐயர்

கீர்த்தனம் 19 | **ராகம்: தேவமனோஹரி** | **ஆதி தாளம்**

பல்லவி

வந்தருள்வாய் முருகா பரம சுகம்
தந்தருள்வாய் முருகா

அனுபல்லவி

சொந்தமுடனுனைப்ப ணிந்திடும் அன்பர்-த
யாள எளின்ப மனுன மனமிரங்கி (வந்தருள்)

சரணம்

பாலினும் தேனினும் கனியினும் இனிக்கும்
பார்வதி பாலனே சரவணபவனே
நீலமயிலில்வரும் கருணாகரனே எந்
நேரமும் என்னுடன் நீ விளையாடிட (வந்தருள்)

தேவமனோஹரி 22-வது மேளமாகிய கரஹரப்ரியாவில் பிறந்த ராகமாகும். காந்தார வர்ஜ்யம். வக்ர ஷாடவம் எப்பொழுதும் பாடத் தகுந்தது.

இதன் ஆரோஹணம்: ஸ ரி ம ப த நி ஸ் / ஸ ரி ம ப நி த நி ஸ்

அவரோஹணம்: ஸ் நி த நி ப ம ரி ஸ

உபாங்கராகம். இதில் வரும் ஸ்வர ஸ்தானங்கள் ஷட்ஜ பஞ்சமம் தவிர, சதுச்ருதி ரிஷபம், சுத்த மத்யமம், சதுச்ருதி தைவதம், கைசிகி நிஷாதம்.

பல்லவி —1 களை

1	ஸா ; நி த நி பா ; ப ம ரி	மா ; ; ரி	மா பா தா நி ‖
	வ ந் த - ருள் வா ய் மு - ரு	கா - - ப	ர ம சு கம்
	ஸ் நி த நி பா ப ம ரி , ஸ ரி ப ம	ரி ; ஸா ;	; , ரி ம ப த நி ‖
	த ந் - - த ரு ள் வா - ய் ம ரு -	கா - - -	; - - - - - - -
2	ஸ் ரி் ம் ரி் ஸ் நி த நி பா ; ப ம ரி	மா ; ; ரி	மா பா தா நி ‖
	வ ந் - - த - ருள் வா ய் மு - ரு	கா - - ப	ர ம சு கம்
	ஸ் நி த நி பா ப ம ரி , ஸ ரி ப ம	ரி ; ஸா ;	; ; ; ; ‖
	த ந் - - த ருள் வா - ய் ம ரு -	கா - - -	- - - -

அனுபல்லவி


1	பா மா பா தா நி நி ஸா ரி் ம்	ஸா ரி் ஸா ஸா	ஸ் நி த நி பா ; ‖
	சொ ந் த மு ட னு னை ப்ப -	ணி ந் தி டும்	அ ன் - - ப ர்
2	பா மா பா தா நி ஸா ரி் ப் ம்	ரி் ; ஸா ஸ் ரி்	ஸ் நி தா நி ரி் ‖
	சொ ந் த மு ட னு னைப்ப -	ணி ந் தி டும்	அ ன் - பர் த
	ஸா ; ஸா ஸ் நி தா நி பா ம த	ப ம ரி ஸ ரி	மா பா தா நி ‖
	யா - ள எ - ளி ன் ப ம -	னு - - ன ம	ன மி ர ங்கி

(வந்தருள்வாய்)

சரணம்

	பா ; தா நி ஸ் நி த நி பா மா	த ப ப ம ரி ஸா	ரி மா பா ; ‖
	பா - லினும் தே - - - னினும்	க - னி - யினும்	இ னி க்கும்
	; ப மா ரி ஸா ஸ ரி் தா நி் ஸா	; ரி மா ப த நி	ஸ் நி த நி பா ; ‖
	- பா ர் வ தி பா - - ல னே	- ச ர வ ண -	ப - வ - னே -
1	; ப மா ப தா நி ஸா ரி் ரி்	ம்ா ரி ஸா ;	நி த நி பா ; ‖
	- நீ - ல ம யி லில் வ ரும்	க ரு ணா -	க - ர னே -
2	; ப மா ப தா நி ஸா ரி் ப் ம்	ரி் ஸா ஸ் நி த நி	பா மா பா த நி ‖
	- நீ - ல ம யி லில் வ ரும்	க ரு ணா - - -	க ர னே எ ந்
	ஸா ; ஸா ஸ் ரி ஸ் நி த நி பா மா	ரி , ஸ ரி மா	பா ; தா நி ‖
	நே - ர மும் என் - - னு டன்	நீ - - வி ளை	யா - டி ட

(வந்தருள்வாய்)


ஒவ்வொரு பாகமும் ஓர் முழுப்
பேனாவின் விலை பெறுமான
முள்ளது.
எப்பொழுதும் பளிச் சென்று இருக்கும் கிளிப் மேல் பாகத்தில் நீல நிற அடையாளத்தை பாருங்கள். மேல் கவரிலுள்ள ரிங்கில் பெயர் எழுதப்பட்டிருக்கும்.
கூர்மையாகவும், வழுவழுப்பாகவும் எழுத வேண்டி, நிப்பில் மூன்று நட்சத்திரக் குறிகளைகவனிக்கவும்.
பிளேட்டோ
லஸ்டர் கோல்ட்
குதன் இருடியம் கொண்ட நிப்பின் முனை
PLATO
REGD.
அவரவர்களுக்கு தகுந்தாற்போல் வாங்கக் கூடியதற்காக ரு. 5-12-0 முதல் 12-8-0 வரை.
மாத்ரே பென் & ப்ளாஸ்டிக் இண்டஸ்டிரீஸ் லிட்.,
பம்பாய்
ஏக விநியோகஸ்தர்கள்:
தி பெஸ்ட் பவுண்டன் பென் டெப்போ,
79, தேவ்கரன் மான்ஷன், பிரின்ஸஸ் தெரு, பம்பாய்-2



மூக்குத்தியின் கதை

ராஜாஜி

ராமய்யர் வீட்டுக் கூரையில் நல்ல இடம் பார்த்து இரண்டு குருவிகள் கூடு கட்டிக் கொண்டு முட்டை யிட்டிருந்தன.

''தங்கமே!'' என்றது ஆண் குருவி. ''என்ன விஷயம்?'' என்றது பெண் குருவி. ''இந்த வீட்டு அம்மா ஏன் இப்படி எப்போதும் புருஷனோடு சண்டை பிடிக்கிறாள்?'' என்று கேட்டது குருவி.

''எனக்கு எப்படித் தெரியும்?'' என்றது பெண் குருவி. ''நம் காரியம் நாம் பார்த்துக் கொண்டு போவோம்'' என்றது.

''நீ எப்போதும் இப்படித்தான். உன் சுய நன்மையையே கவனித்துக் கொண்டு போகிறாய். இந்த ராமய்ய பிராமணனுக்கு நாம் உதவி செய்ய வேண்டாமா?'' என்றது ஆண் குருவி.

''நீ உதவி செய்யப் போகிறாய், பார்க்கலாம். சும்மா அதிகப் பிரசங்கம் செய்யாதே. நம் கூடண்டை பூனை வராமல் பார்த்துக் கொள். அதுவே போதும்'' என்றது பெட்டை.

• • •

எங்கேயோ ஒரு குப்பையில் ஒரு வைரக் கல் மூக்குத்தி கிடந்தது. அதைத் தன் மூக்கில் கொத்தி எடுத்து வந்தது குருவி.

''பார்த்தாயா? இது உனக்கு வேண்டுமா?'' என்றது குருவி.

''எனக்கு மூக்குத்தியும் வேண்டாம்; காதுத் தோடும் வேண்டாம். சிறு புழு சிக்குமா பார்! இந்தக் குஞ்சுகளுக்குப் பசி'' என்றது தாய்க் குருவி.

ஆண் குருவி மூக்குத்தியைக் கீழே போட்டு விட்டுப் புழுத் தேடப் போய் விட்டது.

ராமய்யர் மனைவி வீட்டைப் பெருக்கிக் கொண்டிருந்த போது மூக்குத்தியைப் பார்த்தாள். எடுத்து வைத்துக் கொண்டாள்.

ராமய்யர்: ''ஏது உனக்கு இந்த மூக்குத்தி? எந்தப் போக்கிரி உனக்கு இதைத் தந்தான்?'' என்று மிகக் கோபமாகக் கேட்டார்.



"நேற்று இங்கே கிடந்தது, எடுத்து வைத்தேன். ஏன் தாறுமாறாகப் பேசுகிறீர்கள்?" என்றாள் மனைவி.

"கொண்டு போய் கிராம முனிசிபுகிட்ட கொடுத்து விடவேண்டும். நாளைக்கு போலீசார் வந்து வீட்டைச் சோதனை போட்டால் யாருக்கு அந்த அவமானம்?" என்றார் ராமய்யர்.

"நான் கொடுக்க மாட்டேன். எனக்குத்தானே இது அகப்பட்டது!" என்றாள் பிடிவாதக்காரி.

இன்னொரு வீட்டில் நடந்த பேச்சு:

"குளிக்கிறவீட்டில் வைத்திருந்தேன். அதைப் பெருக்கித் தள்ளிவிட்டிருப்பாள். இந்தக் குப்பாயிக்கு ஒன்றும் தெரியாது" என்றாள் லட்சுமி தன் தாயாரிடம்.

"தேடிப் பார்க்கலாம். அப்பாவுக்குச் சொல்லாதே. மூக்குத்தி போக்கடித்து விட்டாய் என்று தெரிந்தால் ரொம்பக் கோபித்துக் கொள்வாங்க" என்றாள் மீனாட்சியம்மாள்.

"என்ன ரகசியம் பேசிக் கொள்ளுகிறீர்கள்?" என்றார் ராமநாதம் பிள்ளை.

விஷயம் தெரிந்து போச்சு. பிறகு ஊருக்கெல்லாம் தெரிந்து போயிற்று. ராமநாதம் பிள்ளை வீட்டில் மூக்குத்தியை வேலைக்காரி குப்பாயி திருடி விட்டாள் என்று பேசிக் கொண்டார்கள். குப்பாயி வீட்டைப் போலீசார் சோதனை போட்டார்கள். ஒன்றும் சிக்கவில்லை.

ராமய்யர் வீட்டில் அவர் மனைவிக்குக் கடுஞ் சுரம் வந்து விட்டது. படுத்த படுக்கை. ராமய்யருக்கு நெஞ்சு படபட வென்று அடித்துக் கொண்டேயிருந்தது. ஆனால் அந்த வீட்டுக்கு யாரும் சோதனைக்கு வரவில்லை.

* * *

"தங்கமே, பார்த்தாயா வேடிக்கை?" என்றது குருவி.


"நல்ல வேடிக்கை! பாவம் இந்த வீட்டுக்காரிக்குத் திகில் பிடித்துக் கொண்டிருக்கிறது. சுரத்தில் செத்தே போய் விடுவாள்" என்றது பெண் குருவி.

"நல்ல காரியம்!" என்றது பொல்லாத ஆண் குருவி.


"எல்லாம் நீ செய்த வேலை" என்றது பெண் குருவி.


"திருட்டுத்தனம் செய்ய நானா சொன்னேன்? புருஷன் சொன்னதைக் கேளாமல் பிடிவாதம் செய்தால் இப்படித்தான் ஆகும்!" என்றது ஆண் குருவி வெகு கம்பீரமாக.

"உன் வார்த்தையை நான் ஒரு நாளும் தட்டமாட்டேன்!" என்றது தாய்க்குருவி! "நல்லது! குழந்தைகளுக்குக் கொஞ்சம் சிறு புழு கொண்டு வரப் போவோம்" என்று சொல்லிவிட்டு இரண்டு குருவிகளும் பறந்து சென்றன.



போக்கு வரத்து ஸ்தாபனங்களே!





டயர்ஸோல்ஸ்

பரிசீலனை செய்யுமுன்


தேய்ந்த டயர்களை எறிந்துவிடாதீர்கள்

டயர் உற்பத்தியாளர்கள் தற்காலம் தயாரித்து வரும் டயர்கள், மனித னுடைய சிருஷ்டித் திறமையின் முழுச் சிறப்பும் வெளிப்படும்படி அமைந் தவை. டயரின் டிரெட் பாகம் தேய் வதற்குள் டயரை புதுப்பித்துக் கொள் வது தேச நலனுக்கு இன்றியமையாத செயலாகும்.

டயர்ஸோல்ஸ் பொதுமக்களிடம் அவர்களுக்குள்ள பொறுப்பை உணர்ந்த வர்களாதலால் பொதுஜன பாதுகாப்பு விஷயத்தில் சந்தேகமுள்ளதாகக் கரு தப்படும் டயர்களை தயங்காமல் நிரா கரித்து விடுவர். இவ்வித நிராகரணத் திற்குக் காரணம், கோணல் புத்தி யல்ல. இதனால் பாதகமடையக் கூடிய எல்லா அம்சங்களையும் கருதியே செய்யப்படுகிறது.

டிரெட் பாகம் தேய்ந்தாலும் உறுதி யான உறையுடைய டயரை ஒதுக் குவது வீண் நஷ்ட முண்டாக்கும். தேய்ந்து மழு மழுப்பான டயர்கள் மதிப்புடையவை. டயருக்குமேல் டயர்ஸோல்ஸ் டிரெட் பொருத்தப் பட்டு விட்டால் புது டயர் உழைக் கும் காலத்திற்கு திரும்பவும் உழைக் கின்றது. இன்னொரு முக்கிய விஷயம், புதிய டிரெட் பொருத்தப்படும் போது பழைய உறை (கேஸிங்) சேதமாவ தில்லை. எனவே டயர் ஸோல்ஸ் டிரெட் தேய் ந்த பிறகுகூட மீண்டும் உபயோகமாகின்றது.

டயர்ஸோல்ஸ், டயர் பராமரிப்பு பிரச்னைகளை தீர்ப்பதில் ஒவ்வொரு டயர்மைலுக்கும் செலவு மிக மிகக் குறைவு.



டயர்ஸோல்ஸ்

ஸ்டேன்ஸ் மோட்டார்ஸ் (தைக் இந்தியா) லிட்.

கோயமுத்தூர்

கீழ்க்காணும் இடங்களில் பாக்டரிகள் உள்ளன:

திருச்சிராப்பள்ளி ரோடு, கோயமுத்தூர் ● 89, லைடன்ஹாம்ஸ் ரோடு, சூளை, மதராஸ் (7/1, பட்டன்லோஸ் ரோட்டில் டிப்போ) ● எம். எஸ். எச். மவுண்ட் போஸ்ட் ஆபீஸ், கோட்டயம் ● 13/90, பதி தெரு, விஜயவாடா ● 5, ஹைட் ரோடு, கித்தர்பூர், கல்கத்தா

பர்மா ரமணி

பாலர் தொடர் கதை

அழ. வள்ளியப்பா

28. குட்டு வெளிப்பட்டது!

வேதநாயகம் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது, ஆனந்தனின் அம்மா அவரைப் பார்த்து, "ஆனந்தனைப் பரிகாசம் பண்ணினீர்களே! பார்த்தீர்களா அவன் சாமர்த்தியத்தை! தந்தியைப் பார்த்ததும் என் நம்பிக்கு எவ்வளவு சந்தோஷமாக இருக்கும்!" என்று பெருமையோடு சொன்னாள்.

வேதநாயகம் சாப்பாட்டை முடித்துக் கொண்டு முகப்புக்கு வந்தார். வெற்றிலை போட்டுக் கொண்டே, "ரமணி, உன்னைக் காணாமல் மதுரநாயகம் ஏங்கிப் போய் விட்டான். ஆமாம், அந்த நாடக சபாவில் நீ சேர்ந்து எவ்வளவு காலமாகிறது?" என்று கேட்டார்.

"நானா?...நாடக சபாவிலே சேர்ந்து எத்தனை வருஷமாகுது என்றுதானே கேட்கிறீர்கள்? நாலு வருஷத்துக்கு மேலேயிருக்கும்."

இதைக் கேட்டதும் வேதநாயகம் திடுக்கிட்டார். "என்ன இது! நாடக சபா ஆரம்பித்து ஒன்றரை வருஷங்கூட ஆகவில்லையே! ஒரேயடியாக நாலு வருஷம் என்று சொல்லுகிறானே!" என்று சந்தேகப்பட்டார்.

உடனே மேலும் கேள்விகள் கேட்டார். "ஓகோ! நாலு வருஷத்துக்கு மேலேயிருக்குமா? அதுதான் மதுரநாயகம் உன் மேல் உயிரையே வைத்திருக்கிறார்! சரி, அந்த நாடக சபா முதலாளி... அவர் பெயர் ஏதோ சொன்னாரே! மறந்தே போய் விட்டது....அவர் பெயர் என்ன தம்பி?" என்று கேட்டார்.

"முதலாளி பெயரா?....அவர் பெயர் ....அவர் பெயர்....ராமசாமி....ஆமாம், ராமசாமிதான்."

முதலாளியின் பெயர் மோகனரங்கம் என்பது வேதநாயகத்துக்கு நன்றாகத் தெரியும். அப்படியிருக்கும் போது, ராமசாமி என்று அவன் சொன்னதும், அவரது சந்தேகம் வலுத்து விட்டது. ஆனாலும், வெளியில் காட்டிக் கொள்ளாமல், "ஆமாம், ஆமாம். ராமசாமியே தான். அவர் ரொம்பத் தங்கமானவர். மதுரநாயகம் சம்சாரம் கோதைநாயகி கூட ரொம்ப நல்லவள். ரமணி, நீ கோதைநாயகியை எப்போதாவது பார்த்திருக்கிறாயோ?" என்று கேட்டார்.

"என்ன அப்படிக் கேட்கிறீர்களே! கோதைநாயகி அம்மாளை எனக்கு நன்றாகத் தெரியும். சிலசமயம் சாப்பாடு எடுக்க வீட்டுக்குப் போவேன். அப்போது பார்த்திருக்கிறேன். நீங்கள் சொன்ன மாதிரி அந்த அம்மாள் ரொம்ப நல்ல அம்மாள்."

இப்படி அவன் கூறியதும் வேதநாயகத்தின் சந்தேகம் உறுதிப் பட்டது. 'மதுரநாயகத்தின் மனைவி கமலாதேவியைக் கோதைநாயகி என்று நான் மாற்றிச் சொன்னேன். அதை இவன் மறுத்துச் சொல்லவே இல்லை. அத்துடன், மதுரநாயகம் எழுதிய கடிதத்தில் அவன் வீட்டிலேயே ரமணி சாப்பிட்டு வந்ததாக அல்லவா எழுதியிருக்கிறான்? இவன் சொல்லுவது எல்லாமே பொய். இவன் ரமணியே அல்ல. ஆனந்தனை நன்றாக ஏமாற்றி விட்டான்' என்று தீர்மானித்துக் கொண்டு, அவனைப் பார்த்து, கண்டிப்பான குரலில், "டேய், உள்ளதைச் சொல். உன் பெயர் என்ன?" என்று மிரட்டினார்.

அவன் பேந்தப் பேந்த விழித்தான்.

"டேய்! உள்ளதைச் சொன்னால் தப்பினாய்! இல்லாத போனால், போலீஸில் ஒப்படைத்து விடுவேன். உம், சொல்லு" என்று கத்தினார்.

உடனே அவன் நடுநடுங்கினான். "சார், போலீஸ் வேண்டாம், சார். உள்ளதைச் சொல்லி விடுகிறேன், சார். என் பெயர் ரமணி இல்லை. முனியாண்டி!"

— இதை அவன் சொன்னதும், "என்ன! முனியாண்டியா!" என்று ஆனந்தனும், குண்டுமணியும் ஆச்சரியத்தோடு கேட்டார்கள். அவர்களுக்கு ஒரே ஏமாற்றமாக இருந்தது.

அவன் மேலும் சொன்னான்: "நான் ஒரு ஏழை. பிச்சை எடுத்துக் காலம் தள்ளி வருகிறேன். நேற்று முழுதும் எனக்கு ஒருவாய் சோறுகூடக் கிடைக்கவில்லை. பட்டினி கிடந்தேன். இரவிலே ஒரு தெருத் திண்ணையிலே படுத்திருந்தேன். பசியினாலே தூங்கவே இல்லை. அப்போது ஏதோ பேச்சுக் குரல் கேட்டது. நான் படுத்திருந்த திண்ணைக்குப்



பின்புறம் சாய்மானமுள்ள ஒரு திண்ணை இருந்தது. அதற்கு எதிர்ப் புறத்திலேயும் அதேமாதிரி ஒரு திண்ணையிருந்தது. அங்கு உட்கார்ந்து இவர்கள் ரமணி என்பவனைப் பற்றிப் பேசினது காதில் விழுந்தது.''

இதை அவன் சொல்லும் போதே, ''அட படுபாவி! நாங்கள் பேசியதையெல்லாம் கேட்டுக் கொண்டேயா இருந்தாய்?'' என்றான் ஆனந்தன்.

''ஆமாம். இவர்கள் பேச்சிலிருந்து பின் தெருவுக்குப் போகப் போகிறார்கள் என்பதையும் தெரிந்து கொண்டேன். இவர்கள் தண்ணீர் குடிக்கப் போன சமயம் பார்த்து, நான் பின் தெருவுக்கு ஓடி, ஒரு வீட்டுக்கு முன்னாலே படுத்துக் கொண்டேன். நான் நினைத்தபடியே இவர்கள் அந்தத் தெருவுக்கு வந்தார்கள். என்னைப் பார்த்ததும் எழுப்பினார்கள். என்னை விசாரித்தார்கள். நான் தான் ரமணி என்று சொன்னால் வயிறு ரச் சாப்பாடு கிடைக்குமே என்று நினைத்துத்தான் இப்படிச் செய்து விட்டேன். உங்களுக்குக் கோடிப் புண்ணியம். என்னை விட்டு விடுங்கள்'' என்று கூறி வேதநாயகம் காலிலே விழுந்து கெஞ்சினான் அந்த முனியாண்டி!

இவ்வளவையும் கேட்டுக் கொண்டிருந்த ஆனந்தனுக்கும், குண்டுமணிக்கும், என்ன சொல்வதென்றே தெரியவில்லை. முனியாண்டியின் மேல் ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. அவனையே முறைத்துப் பார்த்தார்கள்.

அப்போது வேதநாயகம், ''அப்பா, துப்பறியும் சிங்கங்களா! உங்கள் திறமை இப்போதாவது தெரிகிறதா? வேலையற்ற வெட்டிப் பயல்கள்! விருந்து வைக்கிறார்களாம் விருந்து!'' என்று அவர்களைத் திட்டினார்.

முனியாண்டியைப் பார்த்து, ''டேய், எழுந்திரு. இனி, ஒரு விநாடிகூட நீ இங்கே இருக்கக் கூடாது. உடனே எங்கேயாவது கண்காணாத இடத்துக்கு ஓடிப் போய்விடு. உம், நிற்காதே! ஓடு, ஓடு!'' என்று அவனை விரட்டி அனுப்பினார்.

பிறகு நேராகத் தபால் ஆபிசுக்குச் சென்றார். 'புறப்பட வேண்டாம். கடிதம் வருகிறது' என்று மதுரநாயகத்துக்கு ஒரு தந்தியை அனுப்பி வைத்தார். இல்லாவிட்டால், மதுரநாயகம் அன்றிரவே புறப்பட்டுக் காலையில் வந்து சேர்ந்து விடுவாரே!

அன்றே நடந்ததை விவரமாக மதுரநாயகத்துக்கு எழுதி அனுப்பினார். அத்துடன், கடிதத்தில் இன்னொரு விஷயத்தையும் குறிப்பிட்டிருந்தார். ''நானும் ஒரு வாரத்துக்கு முன்பு இங்குள்ள போலீஸ் ஸ்டேஷனில் ரமணியின் அங்க அடையாளங்களைக் கொடுத்து, அவனை எப்படியாவது தேடிக் கண்டு பிடித்துத் தரவேண்டும் என்று சொல்லியிருந்தேன். தந்தி கொடுத்த பிறகு, போலீஸ் ஸ்டேஷனுக்கும் சென்று 'ஏதாவது தகவல் கிடைத்ததா?' என்று கேட்டுப் பார்த்தேன். அவர்கள் இந்த வட்டாரம் முழுதும் தேடிப் பார்த்து விட்டார்களாம். ரமணி கிடைக்கவில்லையாம். ஆகையால், அவன் இந்தப் பகுதியில் இல்லை என்றே தெரிகிறது'' என்று எழுதி யிருந்தார்.

வேதநாயகம் விவரமாக எழுதியிருந்த கடிதத்தைப் படித்ததும் மதுரநாயகத்துக்குப் பெரும் ஏமாற்றமாகப் போய் விட்டது. 'எல்லாம் இப்படியா ஆக வேண்டும்? ஐயோ, ரமணி இப்போது எங்கு இருக்கிறானோ!' என்று எண்ணிப் பெருமூச்சு விட்டார்.

ஆனால், ரமணி மதுரை நகரிலே பத்திரமாக இருக்கிறான் என்பதும், அங்கிருந்து பர்மாவுக்குப் புறப்பட்டுப் போகப் போகிறான் என்பதும் அவருக்கு எப்படித் தெரியும்? (தொடரும்)

படித்துப் பாருங்கள்

அருட்கவி அமுதம்

தெய்வ பக்தி வாய்ந்தவர் பாடும் பாக்களே அருள் மயமான பாடல்கள். வெறும் இலக்கண அறிவினால் மட்டும் புனையும் பாட்டு ஜீவனுள்ள கவிதையாகாது என்பது நம் பழம் பெரும் நூல்களில் காணும் அரிய உண்மை. "நூலின் துணையினும் நூறு பங்கதிகம் தெய்வத் துணையாஞ் செந்தமிழ்க் கவிக்கே" என்று பழம்பாடல் கூறுகிறது.

உலகில் சமயமானது மனிதர்கள் அறிவு விளக்கம் பெற்று உறுதியெய்தி இன்பவாழ்வு அடைவதற்குச் சாதனமாய் அமைந்துள்ளது. ஒவ்வொரு சமயத்தினரும் தங்கள் தங்கள் சமயத்தில் வழிபடுகின்ற கடவுளையே முழுமுதற் கடவுளாகக் கருதி வணங்கி வருகின்றனர். எந்தத் தெய்வத்தை வழிபட்டாலும் முழுமுதற் கடவுள் அந்தந்தத் தெய்வமாகவே நின்று அருள் புரிவான் என்பது நமது முன்னோர் தேர்ந்த முடிவு. "ஒன்றாகிப் பலவாகிப் பலவாக் கண்ட ஒளியாகி வெளியாகி உருவமாகி" நிற்கும் தெய்வத்தைப் பல அருட் கவிஞர்கள் பாமாலை புனைந்து போற்றிப் பணிந்தனர். அத்தெய்விக இலக்கியக் கடலில் மூழ்கித் திளைத்து அமுதத்தை அள்ளிக் கொடுத்திருக்கிறார் திரு நாரண துரைக் கண்ணன். "பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டக் கவி பாடும்" நாயன்மார்கள், ஆழ்வார்கள், சித்தர்கள் இவர்களின் சிறந்த நன் முத்துக் கவின் மாலையாகத் தொகுத்து வெளியிட்டிருக்கிறார். பக்தியோடு பல சமயத்தினரும் பாராயணம் செய்வதற் கேற்ற நூல் இது.

தொகுத்தவர்: திரு நாரண துரைக் கண்ணன்: பிரசுரம்: தேவி பதிப்பகம், 4/27 பிராட்வே, சென்னை-1. விலை ரூபாய் 1.

Lawyer (லாயர்)

சுதந்திர பாரதத்தை உருவாக்கியவர்கள் வழக்கறிஞர்கள் என்று சொன்னால் அது முற்றும் உண்மையானதோர் வார்த்தை. ஏனெனில் காந்திமகான் ஒரு வழக்கறிஞர்; பண்டித நேரு ஒரு வழக்கறிஞர்; ராஜாஜி ஒரு வழக்கறிஞர் - இப்படி எத்தனையோ பேர். ஆனால் சுதந்திரம் பெற்ற பாரதநாடு முன்னேற்றப் பாதையில் வெகு வேகமாகச் செல்லுகிறது. அதற்கு ஏற்பச் சட்டங்கள் வகுத்துக் கொடுப்பவர்கள் சட்ட ஞானம் அதிகமில்லாத அங்கத்தினர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட டில்லி லோக சபை! எப்படியிருக்கிறது கதை! ஆனால் இதுதான் எந்த நாட்டிலும் நடக்கும் முறை!

சட்ட சபையில் நிறைவேற்றப்படும் சட்ட திட்டங்கள் நீதிமன்றங்களில் வழக்கறிஞர்கள் அலசி ஆராயும் போதுதான் அவை எப்படியெல்லாம் பொது மக்களைப் பாதிக்கின்றன; பாதிக்காமல் விடுகின்றன என்பதை நன்றாக அறிய முடிகிறது. இதை முன்னிட்டு ஒவ்வொருவரும் நீதிமன்றத்துக்குப் போய்க் கொண்டிருக்க முடியுமா! முடியாதல்லவா! சென்னை ராஜ்ய வக்கீல் சங்கத்தினர் 'லாயர்' (வழக்கறிஞர்) என்ற பெயரில் ஒரு பத்திரிகை ஆரம்பித்திருக்கிறார்கள். வருஷத்தில் நான்கு முறை வெளியாகும் இப்பத்திரிகையில் பொது மக்களைப் பாதிக்கும் சட்டங்களையும் பிரச்னைகளையும் பெரும் வழக்கறிஞர்கள் ஆராயும் கட்டுரைகள் இடம் பெறும்.

ஆனால் சட்டஞான முன்னவர்களே அறிந்து கொள்ளும் வகையாக அமையாமல், பொது ஜன ரஞ்சகமாகவும் அமையும். அதற்குச் சான்றாக டாக்டர் சி. பி. ராமசுவாமி அய்யர், நீதிபதி ஏ. எஸ். பி. அய்யர், ஸ்ரீ வேங்கடரமண ராவ், ஸ்ரீ வேங்கட சுப்பராவ், ஸ்ரீ வி. கே. திருவேங்கடாச்சாரியார், ஸ்ரீ எம். சுப்பராய அய்யர் முதலியோர்களின் கட்டுரைகள் கொண்டு முதலிதழ் அமைந்திருக்கிறது. இதில் ஹாஸ்ய சித்திரங்கள், ஹாஸ்ய துணுக்குகள் முதலியன இடம் பெற்று மகிழ்வூட்டுகின்றன. இப்பத்திரிகைக்குச் சென்னை பிரபல வக்கீல் ஸ்ரீ ராஜா அய்யர் முதலிய பல வழக்கறிஞர்கள் கொண்ட ஆசிரிய ஆலோசனைக் குழு இருக்கிறது. நிர்வாக ஆசிரியர்களாக ஸ்ரீ வி. வி. கோபாலரத்தினமும் ஸ்ரீ என். ஆர். ராகவாச்சாரியார் அவர்களும் பொறுப்பு ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். கல்கத்தா, பம்பாய் முதலிய நகரங்களின் விளம்பர வட்டாரத்தில் நன்கு அறிமுகமான ஸ்ரீ பி. ராமசந்திரய்யர் அவர்கள் இப்பத்திரிகையின் விளம்பர மானேஜராக இருக்கிறார். இப்பத்திரிகை சென்னை ராஜ்யத்தில் மட்டுமன்றி மற்ற ராஜ்யங்களின் வழக்கறிஞர் உலகிலும், பொது மக்களிடையேயும் பிரபலமடைந்தால் வியப்படைவதற்கில்லை.

கிடைக்குமிடம்: The Madras State Bar Federation, High Court, Madras. வருட சந்தா: ரூ. 5. தனிப் பிரதி ரூ. 1-8-0.

சர்தார் பட்டேல்

சர்தார் வல்லபாய் பட்டேல் சிறந்த தேச பக்தர்; செயலாற்றும் திறன் படைத்த தீரர். நாகபுரிக் கொடிப் போராட்டம், பர்தோலி வரி கொடா இயக்கம், சமஸ்தானங்களின் இணைப்பு முதலியவை அவரது தேச சேவைகளுள் மிகச் சிறந்தவை. அம் மாபெரும் தலைவரின் வரலாற்றை நாற்பது வெண்பாக்களால் கூறுகிறது இந்நூல். விரிவான உரையும் தரப்பட்டிருக்கிறது.

ஆசிரியர்: அறிந்தார்க்கினியன்: கிடைக்குமிடம்: செல்விருப்பம் இண்டஸ்ட்ரீஸ், பாம்பே பியூக்கல் பில்டிங் அனெக்ஸ், அங்கப்ப நாயக்கன் தெரு, சென்னை—1.



41 கல்யாணப் பேச்சு!

இந்த உலகத்தில் நல்லவர்கள் என்று சொல்லக்கூடிய உத்தம மனிதர்கள் இருப்பதனால்தான், கெட்டவர்கள் என்று சொல்லக் கூடிய கயவர்களும் இருக்கிறார்கள். இயற்கையின் தராசில் இரண்டு தட்டுக்களும் எப்பொழுதும் ஏறி இறங்கி நிற்கும் அம்மா. குதிரை என்று ஒன்று இருந்தால் அதற்குப் போட்டியாக, அதன் போலியாக போனிமட்டம் என்ற மிருகம் இருக்கும். மயில் என்று இருந்தால் அதற்குப் போலியாக வான் கோழி என்று ஒன்று இருக்கும். அசைப்பிலே வித்தியாசம் தெரியாது. வாழ்க்கையில் இந்த வித்தியாசங்களைச் சரியாகப் புரிந்து நடந்து கொள்வதுதான் நம்முடைய கல்வியும், அனுபவமும்!''

இவ்வாறு பேச ஆரம்பித்தார் டாக்டர் சுரேஷ். சாவித்திரி அம்மாளுக்கு அவர் ஏன் இப்படி ஒரு தத்துவ ஆராய்ச்சி செய்கிறார் என்று புரியவில்லை. கேட்டாள்:

''ஏன் டாக்டர்! திடீரென்று இப்படி ஒரு பெரிய ஆராய்ச்சியில் இறங்கி விட்டீர்கள்? அதற்கு என்ன அவசியம் வந்தது இப்பொழுது?''

டாக்டர் சுரேஷ் சிரித்தார். சிரித்து விட்டுச் சொல்லுவார்:

''அம்மா! இந்த வார்த்தை சந்திரிகாவுக்காகச் சொன்னது. ஏனென்றால் இந்த உலகில் நம்முடைய சமூக அமைப்பில் இல்லறம் என்று சொல்கிறோமே அது மிக மிக அவசியமான ஒரு வாழ்க்கை முறை. ஏதோ அபூர்வமாகச் சில மனிதர்கள் விவாகமே இல்லாமல் வாழ்க்கை நடத்த வேண்டியது நேர்ந்து விடுகிறது. அந்த மாதிரி வாழ்வதின் வெற்றி அவரவர்களுடைய மன வைராக்கியத்தைப் பொறுத்தது. அந்த மாதிரி வாழ்ந்து வெற்றி பெறக் கூடியவர்கள் இந்த பூமியில் மிக மிகக் குறைவு. ஒழுக்கம் என்பதும் கட்டுப்பாடு என்பதும் அத்தனை கஷ்டமான காரியங்கள். பொதுவாகப் பெண்கள் கல்யாணம் செய்து கொள்ளாமல் கன்னியராக வாழ்க்கை நடத்துவதை — அதாவது நடத்த முயற்சிப்பதை — நான் எதிர்க்கிறேன். என்னுடைய வைத்திய அனுபவத்தில் இம் மாதிரிப் பலரை நான் சந்தித்திருக்கிறேன். இவர்களுடைய வாழ்க்கையில் எத்தனை விபரீதங்கள் நேர்ந்தன என்பது எனக்குத் தெரியும். பால்யத்தில் அவர்களுக்கு இது புரியாது. வயது ஆக ஆகத்தான் இல்லறத்தின் சிறப்புப் புரிய ஆரம்பிக்கும். அப்படிப் புரிய ஆரம்பிக்கிற காலத்தில், அவர்களுடைய வயதானது வாழ்க்கை நிலையைத் தாண்டி விடுகிறது. பிறகு கஷ்டப்படுகிறார்கள். இப்படி நான் சொல்வதற்காக என்னை மன்னிக்க வேண்டும். என்னுடைய அனுபவத்தில் நான் கண்டு முடிவு செய்த விஷயத்தைச் சந்திரிகாவுக்குச் சொல்லலாம் என்று நினைத்தேன்! தவறு இல்லையே? என்ன சந்திரிகா?''

டாக்டர் இந்த மாதிரிக் கேட்டு விட்டு ஒரு நிமிஷம் மௌனமாகச்

சந்திரிகாவையே பார்த்தார். அவள் கண் கலங்கியது. அந்தக் கலக்கத்தைச் சமாளித்துக் கொண்டு சந்திரிகா பேசினாள்:

"டாக்டர்! எங்கள் குடும்பத்தில் உங்களுக்குள்ள உரிமை வேறு யாருக்கும் இல்லை. அதிலும் என் விஷயத்தில், என் வாழ்க்கை வரலாற்றை நீங்கள் எடுத்துச் சொன்ன பிறகு, உங்களுக்கு என் வாழ்வை நிர்ணயிக்க எத்தனை உரிமை இருக்கிறது என்பதை நான் நன்றாகப் புரிந்து கொண்டு விட்டேன். தவிரவும், நீங்கள் இப்பொழுது சொன்ன விஷயங்கள் அனைத்தும் கடந்த இரண்டு வாரங்களாக என் உள்ளத்தையும் கிளறிக் கொண்டு தான் இருக்கின்றன. உண்மையில் நான் இந்த வீட்டைவிட்டுச் சென்ற பிறகு என்னுடைய மனத்தில் ஒரு பெரிய மாற்றம் உண்டாகி விட்டது டாக்டர். உலகம் என்றால் ஒரு நாட்டிய அரங்கம் என்று எண்ணிக் கொண்டிருந்தேன். இந்த வீட்டின் நான்கு சுவர்களுக்குள்ளும் என்னுடைய நினைவுகள் அடங்கிகின்றன. இப்பொழுதுதான் உலகைப் புரிந்து கொண்டிருக்கிறேன். நீங்கள் சொல்வது முற்றிலும் உண்மையான வார்த்தை என்பது கடந்த இரண்டு வாரங்களில் எனக்கு நன்றாகப் புரிகிறது. ஆகையால் நீங்கள் தாராளமாகச் சொல்லலாம்!" என்றாள் சந்திரிகா. சாவித்திரி அம்மாளுக்குப் பொறுமை எல்லை கடந்து விட்டது.




"என்ன டாக்டர்! நீங்கள் இரண்டு பேரும் இந்த மாதிரி மூடி மறைத்துப் பேசிக்கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? பெரிய ஞானிகளைப்போல் தத்துவம் பேச ஆரம்பித்து விட்டீர்களே—"

டாக்டர் சுரேஷ் சிரித்தார். அவருக்குச் சாவித்திரி அம்மாளின் மன நிலை புரிந்தது.

"அம்மா! கோபப்படாதீர்கள். கொஞ்சம் பொறுமையாக இருங்கள். சந்திரிகாவின் மன நிலையைப் புரிந்து கொள்ளாமல் என்னுடைய திட்டங்களைச் சொல்வதில் அர்த்தமில்லை என்று நினைத்துப் பேசினேன். இப்பொழுது புரிந்து கொண்டு விட்டேன். இனி அவளுடைய வாழ்வை நிர்ணயிக்கும் பொறுப்பை, உரிய மனிதர்களிடம் ஒப்படைத்து விடலாம். ஆகையினால் கவலையில்லை. நான் இப்பொழுதே புறப்படுகிறேன். மறுபடி நாளைக் காலையில் உங்களைச் சந்திக்கிறேன்!" என்று சொல்லிவிட்டு டாக்டர் சுரேஷ் எழுந்தார்.

சாவித்திரி அம்மாளுக்கு இன்னும் மனத் திருப்தி ஏற்படவில்லை. தான் பேச நினைத்த, டாக்டர் தன்னோடு பேசுவார் என்று எதிர்பார்த்த, ஒரு முக்கிய விஷயத்தை இன்னும் பேசவில்லை என்ற குறிப்பு அவளுடைய முகத்திலே தெரிந்தது. அதை டாக்டர் சுரேஷ் கவனித்தும்



கவனியாதது போலக் கைகூப்பி நமஸ்கரித்து விட்டுப் புறப்பட்டார். சந்திரிகா கைகூப்பினாள். சாவித்திரி அம்மாளும் வேறு வழியின்றிக் கைகூப்பி நமஸ்காரம் பண்ணி விடை கொடுத்தாள்.

டாக்டர் சுரேஷ் வெளியே வந்ததும் "அப்புலிங்கம்" என்று கூப்பிட்டார். எதிர் பங்களாவிலிருந்து அப்புலிங்கம் வந்தான். இருவருமாக டாக்டர் சுரேஷின் காரில் ஏறிக் கொண்டு வேகமாகச் சென்றார்கள்.

* * *

திருச்சி டெலிபோன் எக்ஸ்சேஞ்சிலிருந்து தன்னுடைய வேலைநேரம் முடிந்து, லில்லி ஓட் அவுஸ் வெளியே வந்து தந்தி ஆபீஸ் கட்டடத்துக்கு அருகாகச் செல்லும் பாதை வழியே தன்னுடைய வீட்டை நோக்கி நடந்து கொண்டிருந்த போது, தந்தி ஆபீஸ் ஜன்னலுக்கு அருகே அப்புலிங்கம் நிற்பதைக் கண்டாள். ஏற்கனவே உஸ்தாத் மீரானோடும், தன் தந்தையோடும் அவள் அப்புலிங்கத்தைச் சந்தித்ததுண்டு. நாகரத்தினமும் பகோரானும் செய்த 'ஜிங்கிடஜிங்கிட ஜம்'மின் விருத்தாந்தம் எல்லாம் அப்புலிங்கத்துக்குப் பூரணமாகத் தெரியும் என்பதும் ஓட் அவுஸுக்குத் தெரியும். சமீபத்தில் சிலம்பப் போட்டியில் ஏற்பட்ட சமாதான முடிவுக்குப் பிறகு, அவள் அப்புலிங்கத்தையும் உஸ்தாதையும் சந்தித்துத் தன்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ள எண்ணியதுண்டு. இப்பொழுது அப்புலிங்கத்தைத் தந்தி ஆபீஸிலே பார்த்ததும் அவளுக்குக் கவலை ஏற்பட்டது. பகோரான் வீட்டுக்குத் தன்னுடைய தம்பி தலைமறைவாகச் செல்லும் கெட்ட பழக்கம் நின்று போனதில் அவளுக்கு ஏற்பட்டிருந்த மகிழ்ச்சியைச் சொல்லிக்கொள்ள, இப்பொழுது ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது என்று முதலில் நினைத்தாள். ஆனாலும் அப்புலிங்கம் தந்தி ஆபீஸுக்கு அந்த நேரத்தில் வரவேண்டிய அவசியம் என்ன நேர்ந்தது? ஒரு வேளை சிலம்பக் கோஷ்டிகள் மீண்டும் ஏதாவது சண்டையிலே இறங்கி 'எக்கச் சக்கமாக' ஏதும் விபரீதம் நடந்து விட்டதோ என்று மனம் துணுக்குற்றாள் லில்லி. அதிக நேரம் அங்கே நின்று குழம்பாமல், நேரே அப்புலிங்கத்தை நோக்கி நடந்தாள், 'ஹலோ' என்ற அவளுடைய வழக்கமான முகமனோடு!

அப்புலிங்கம் திரும்பிப் பார்த்தான்.

"ஓ! நீங்களா!" என்று வரவேற்றான் அப்புலிங்கம்.

பதிலுக்குக் காத்திராமல் வேகமான விறுவிறுப்பான, இலக்கணப் பிழைகள் மலிந்த, ஆனால் ஜீவனுள்ள ஓர் ஆங்கிலத்தில் லிவி ஓட் அவுஸ் தன் நன்றியையும் மகிழ்ச்சியையும் பொழிந்து கொட்டினான். கொட்டிவிட்டுத் தந்தி ஆபீஸுக்கு அப்புலிங்கம் வரவேண்டியதன் காரணம் என்ன என்பதை அறிய விரும்பியவன் போல், ஒரு கணம் தயங்கி நின்றான். அப்பட்டமாகக் கேள்வி கேட்பதற்கு வேண்டிய துணிவு இல்லை! ஆனால் அப்புலிங்கமோ அதற்கு மேல் ஏதும் பேசுபவனாகத் தெரியவில்லை.

லிவி ஓட் அவுஸ் மேலும் ஒரு நிமிஷம் தயங்கி நின்றான். 'இங்கே எதற்காக வந்தீர்கள்?' என்று கேள்வி கேட்பது ஆசாரக் குறைவு என்பது அவனுக்கு நன்றாகத் தெரியும். அதே சமயம் ஆவலை அடக்க முடியவில்லை!

"சரி; நாளைக் காலையில் 'கௌண்டர்க்ளார்க்'கைப் பார்த்து விஷயத்தைத் தெரிந்து கொள்ளலாம்" என்று ஒரு முடிவுக்கு வந்தவனாக லிவி ஓட் அவுஸ் 'பை பை' சொல்லிவிட்டு 'டக் டக்'என்று பூட்ஸை மிதித்து நடக்க ஆரம்பித்தான்!



* * *

அன்று திருச்சிப் பாலக்கரைப் பள்ளி வாசலில் காஸியார் அல்லாவைச் சிந்தித்துத் தொழுகை செய்யும்போது, விசேஷமாகத் தமது நன்றியை ஆண்டவனுக்குச் செலுத்தினார். சிலம்பச் சண்டைகள் எல்லாம் சமாதானமாக முடிந்ததிலும், உஸ்தாதின் மகளுடைய நிக்காஹைத் தொடர்ந்து எல்லா கோஷ்டிகளும் உறவாக ஒன்று கூடியதிலும், அவருக்கு அளவற்ற மகிழ்ச்சி.

'இந்த மகிழ்ச்சி நிலைத்து நிற்கும்படி செய் ஆண்டவனே!' என்று அல்லாஹுத் தாலாவின் திருவருளைச் சிந்தித்தார் காஸியார்.

அதே சமயம் சொக்கி குடியில் புதிதாகப் பிரதிஷ்டை செய்யப்பட்ட சிவபெருமானின் திருமுன்பு நின்று, கல்யாணி அம்மாள் தன்னுடைய வேண்டுதல்களையும் காணிக்கைகளையும் செலுத்தினாள்.

பொதிகைமலைக் காட்டிலே புள்ளி மானைப் போலத் துள்ளி வரும் வனமோகினியான சொக்கியோ என்றால், இலஞ்சிச் சாமியாரோடு ஒரு பெரிய தர்க்கத்திலே ஈடுபட்டிருந்தாள்.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை பாதிரி மரத்திலே பால் வடிய ஆரம்பிக்கும் என்று இலஞ்சிச் சாமியாருக்குத் தெரியும். அந்த மாதிரிப் பால் வடிய ஆரம்பித்தால், அதற்கு அடுத்த பௌர்ணமியன்று சொக்கிகுடியின் 'மலையரசுத் திருநாள்' நடைபெற வேண்டும் என்று அந்தப் பளியர்களின் நம்பிக்கை.

ஆமாம்; பாதிரி மரத்திலே அறிகுறி கண்ட ஒரு மாதத்துக்குள், சொக்கிகுடியின் தலைவன் தனக்குப் பிறகு யார் தலைவன் என்பதை அங்கீகாரம் செய்து, அவனுக்கு இளவரசுப் பட்டம் சூட்டுவது என்று ஒரு பழக்கம் வழிவழியாக, வம்ச பரம்பரையாக அந்த மலைக் காட்டிலே இருந்து வருகிறது. நாகரிகம் முதிர முதிர எத்தனையோ புதிய நடப்புக்களும் பழக்கங்களும் வெளி யுலகிலே ஏற்பட்டு வந்தாலும், மலைக் காட்டுக்குள்ளே இந்த மலை ஜாதி மனிதர்களின் பழக்கங்களும் சம்பிரதாயங்களும் எத்தனையோ ஆண்டுகளாக அவர்களுக்கு உரிய சடங்குகளின்படி எப்பொழுதும் நடந்தே வருகின்றன.

"உங்கள் பழக்கங்களில் நான் ஒன்றும் மாறுதல் செய்யத் தயாராயில்லை. நாங்கள் தான் எப்படியெப்படியெல்லாமோ மாறிக் கொண்டு வருகிறோம். உங்களை எதற்குக் கெடுக்க வேண்டும்!" என்று பேச்சை ஆரம்பித்திருந்தார் இலஞ்சிச் சாமியார்.

"அதை ஏன் அப்படிச் சொல்லுறீங்க சாமி!" என்று சாமியாரிடம் பதிலுக்குக் கேட்டாள் சொக்கி.

இதன் பேரில் ஒரு பெரிய சர்ச்சை தொடங்கிற்று. சொக்கப்பன் தனக்குப் பிறகு அந்தச் சொக்கிகுடிக்குத் தலைவன் கந்தப்பன்தான் என்று மனத்திலுள் தீர்மானித்திருந்தான். தன்னுடைய ஒரே மகள் சொக்கியைக் கந்தப்பனுக்குக் கல்யாணம் செய்து கொடுத்து, அவனுக்கு மலையரசுப் பட்டமும் சூட்டி விடலாம் என்று சொக்கப்பன் எண்ணம்! பாளையங்கோட்டையிலிருந்து பாதிரிமார்கள் வந்து கந்தப்பனைப் பள்ளிக்கூடப் படிப்புக்கு அழைத்துச்

சென்றபோது, முதலில் அந்தச் சொக்கி குடி மக்கள் யாருக்கும் அது இஷ்டமில்லை. வெளியே போனால் பின்னை கெட்டு விடும் என்று பயந்தார்கள். சிலர் அதைச் சொக்கப்பனிடமே வந்து கூடச் சொன்னார்கள். ஆனால் சொக்கப்பன் அந்த விஷயத்தில் பிடிவாதமாக இருந்தான். கந்தப்பனுடைய குணத்தில் அவனுக்கு அத்தனை நம்பிக்கை. எங்கே போனாலும் அவன் கெட்டுப் போக மாட்டான் என்று சொக்கப்பன் எல்லாரிடமும் உறுதியாகச் சொல்லித் தன்னுடைய எண்ணத்தை நிலைநாட்டி விட்டான்.

கந்தப்பனுக்கோ இத்தனை சர்ச்சை நடந்ததும் தெரியும். தன்னுடைய சீலத்தில் தன் மாமனுக்கு எத்தனை நம்பிக்கை என்று பல தடவைகள் எண்ணிப் பார்த்திருக்கிறான் கந்தப்பன். அந்த நம்பிக்கைக்குப் பழுது வராமல் திருச்சிக்கு வந்த பிறகும் நடந்து கொண்டிருக்கிறான்.

"அஞ்சும் மூணும் எட்டு
அத்தை மகளைக் கட்டு!"

என்று ஒரு வசனம்! அஞ்சும் மூன்றும் சேர்ந்து எட்டாவது எப்படிக் கிரமம் ஆகுமோ, அப்படியே அத்தை மகளைக் கல்யாணம் செய்து கொள்வதும் கிரமம் என்ற உறுதியான கோட்பாடு உள்ள சமூகம் அது. அந்தச் சமூகத்தின் சட்ட திட்டத்திலே கந்தப்பனுக்கு அத்தனை பிடிப்பு! இது இலஞ்சிச் சாமியாருக்கு நன்றாகத் தெரியும். ஆனால் அவர் சொக்கியிடம் சொன்னது மற்றொரு சட்டதிட்டத்தைப் பற்றித்தான்.



பொதுவாகச் சொக்கி குடியின் அரசனாக, தலைவனாக, வரக்கூடியவனுக்கு இரண்டு மனைவியர்கள் இருக்க வேண்டும் என்று ஒரு வழக்கம் நீண்ட காலமாகக் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. கந்தப்பனுடைய முதல் மனைவி சொக்கி என்பது அந்தக் காடு முழுதும் அறிந்த ரகசியம். ஆனால் இரண்டாவது மனைவி? அந்தப் புண்ணியவதி யார்?

பாதிரி மரத்தில் அறிகுறி தோன்றிவிட்டது. அடுத்த பௌர்ணமியன்று மலையரசுத் திருநாள் நடைபெற வேண்டும். அந்தத் திருநாள் அன்றுதான் இளவரசனுடைய திருமணமும் நடைபெறும். அந்தத் திருமணத்தில் கந்தப்பனுடைய வலது கையைப் பிடிப்பாள் சொக்கி! ஆனால் இடது கையைப் பிடிக்கப் போவது யார்? அது பலவிதத்திலும் மிக மிக முக்கியமான விஷயம் ஆயிற்றே!

"சாமி நீங்க என்னதான் சொல்லுங்க! நாங்க வழக்கத்தை விடப்போறது இல்லை. அடுத்த பௌர்ணமிக்கு இடது கையைப் பிடிக்கிறது யாருன்னு தானாத் தெரியப் போகுது பாருங்க!" என்று ஒரே உறுதியோடு சொன்னாள் சொக்கி!

இலஞ்சிச் சாமியார் சொக்கியின் பால் போன்ற முகத்தைக் கூர்ந்து பார்த்தார். அதில் கள்ளம் கபடு இல்லை. தன்னுடைய திருமணத்தைப் பற்றித்தான் பேசுகிறாள். ஆனாலும் கூச்சமோ பொருளில்லாத வெட்கமோ இல்லை. நம்முடைய பெண்கள் என்றால் தங்கள் கல்யாணத்தைப் பற்றி இரண்டு வார்த்தை சொல்லுவதற்குள் உடம்பெல்லாம் எத்தனை வளைப்பு வளைந்து நாணிக் கோணி விடுவார்கள்!

இவ்வாறு மனத்துக்குள்ளே எண்ணி ஆச்சரியப்பட்டார் சாமியார். ஆனாலும் அந்த இடது கையைப் பற்றி அவள் ஏன் அத்தனை புதிர்ப் போடுகிறாள்?

"என்ன சொக்கி! என்னிடத்திலே பேசக்கூட வெட்கமா உனக்கு? ஏன் விஷயத்தை என்னிடம் சொல்லப் பயப்படுகிறாய்?" என்று கேட்டார் சாமியார்.

"என்னது? பயமா? சாமி, அது எங்க குடியிருப்பிலே உள்ள முயல் குட்டிக்குக் கூடக் கிடையாதாக்கும் சாமி! பயமுன்னா அது என்னது சாமி? கருப்பாயிருக்குமா சிவப்பா இருக்குமா சாமி?" என்று இலஞ்சிச் சாமியாரை மடக்கினாள் சொக்கி.

இதன்பேரில் அவர்களுடைய சர்ச்சை இன்னும் பலத்தது!

சொக்கிகுடியின் நெருப்பு அணையக் கூடாது. அதற்காகத்தானே இரண்டு மனைவியர்கள் வேண்டும், தலைவனுக்கு? அதற்காகத்தானே இந்த மாதிரி ஒரு பழக்கம் இந்தக் குடியிருப்பிலே இருந்து வருகிறது?—இதை அகவல் மகனோடு பேசித்

தெளிவு படுத்திக் கொண்டதாகச் சொன்னான் சொக்கி. பகலில் நெருப்பைக் கவனித்துக் கொள்ள ஒரு மனைவியும் இரவில் அந்த நெருப்பைக் கவனித்துக் கொள்ள மற்றொரு மனைவியும் என்று இரண்டு மனைவியரைக் கல்யாணம் செய்து கொள்கிற வழக்கம் சொக்கிகுடியில் இருந்து வருவது சொக்கிக்கும் தெரியும். கந்தப்பனுக்கும் தெரியும். அந்த சமயம் கந்தப்பன் தன்னைத் தவிர வேறு எந்தப் பெண்ணையும் ஏறிட்டுக்கூடப் பார்க்கமாட்டான் என்றும்



அபார உறுதியோடும் நம்பிக்கையோடும் சொன்னான் சொக்கி. அதற்குமேல் அவன் மேலும் மேலும் புதிர் போட்டானே ஒழிய விவரமாக ஏதும் சொல்ல மறுத்தான்!

இலஞ்சிச் சாமியார் தாடியைக் கோதி விட்ட வண்ணம் பலமாக யோசனை செய்தார். கந்தப்பன் ஏகபத்தினி விரதனாக இருந்தால், இந்த சமூகத்தின் வழக்கத்துக்கு விரோதமாக அல்லவா மலையரசுத் திருமணம் நடக்க வேண்டியிருக்கும். மற்றப் பளிஞர்கள் அதற்கு எப்படிச் சம்மதிப்பார்கள்? அகவல் மகளோடு ஏதோ பேசித் தெரிந்து கொண்டதாகச் சொக்கி சொன்னானே. அது என்ன விஷயமாக இருக்கக் கூடும்? இவர்களாக ஏதாவது வழி கண்டு பிடித்து எங்காவது விபரீதத்திலே கொண்டு போய் விட்டு விடக் கூடாதே. கந்தப்பனுடைய கல்யாணத்தில் தான் சில திட்டங்கள் போட்டு வைத்திருக்கிறோமே, அதெல்லாம் நடைபெறாமல் போய்விடக் கூடாதே—இப்படிப் பலவாறு யோசனை செய்தார் இலஞ்சிச் சாமியார். அப்பொழுது தூரத்தில் பளிஞர்களின் கோஷ்டி கானம் கேட்டது.

'இரு தார விவாகம்' என்று சொல்லப்படும் பொருள் குறித்துக் குடிசைத் திண்ணையிலே நடந்து கொண்டிருந்த பலமான சர்ச்சையை இதுவரை ஒரே கவலையோடு கேட்டுக் கொண்டிருந்த கல்யாணி அம்மாள் இப்பொழுது இந்தக் கோஷ்டி கானம் தொலைவிலே கேட்டதும், குடிசைக்குள்ளேயிருந்து வெளியே வந்து திண்ணையில் நின்று பார்த்தாள். யாரையும் காணோம். ஆனால் அடர்த்தியான மரங்களுக்கு அப்பாலிருந்து பளிஞர்களின் குரல் கூட்டமாகக் கேட்டது:

முருகனு சாமி—அது
முதலான சாமி—எங்க
முன்னோரும் பின்னோரும்
முறை தொழுத சாமி!

கந்தனு சாமி—அது
கடவுளாம் சாமி—இன்னும்
சொந்தமான பேருக்கெல்லாம்
சுகம் கொடுக்கும் சாமி!

வேலவராம் சாமி—அது
வேண்டினோர்க்குச் சாமி—எந்தக்
காலமுமே நம்மை யெல்லாம்
காத்துவரும் சாமி

வெற்றி வேலுச் சாமி—அது
வீரவேலுச் சாமி—நம்மைச்
சுற்றியுள்ள பகைகள் எல்லாம்
தொலைத்துநின்ற சாமி!

வள்ளி யோட சாமி—அது
வரிசை தரும் சாமி—தெய்வ
ஆனையோட சாமி நம்மை
ஆதரிக்கும் சாமி!

குமரனு சாமி—அது
குலதெய்வச் சாமி
கும்பிட்டபேர் எல்லாரையும்
கும்பி காக்கும் சாமி

புள்ளிமயில் சாமி—அது
புஞ்சிரிப்புச் சாமி
வள்ளிதெய்வ யானையோடே
வரம் கொடுக்கும் சாமி!

மேற்கண்ட பாடல் வர வரச் சமீபத்திலே கேட்டது. சற்று நேரத்திற்கெல்லாம் ஆணும் பெண்ணுமாகப் பல பளிஞர்கள் ஒரே கூட்டமாகக் குடிசையை நோக்கிக் குதித்துப் பாடிக் கூத்தாடிக் கொண்டே வந்தார்கள். (தொடரும்)

Printed & Published by T. Sadasivam at the "Kalki" Press, No. 20, Dr. Guruswamy Mudaliar Road, Kilpauk, Madras - 10. Editor : Mi. Pa. Somasundaram



பதினைந்து கஜம் துணி எவ்விதம் போதும்?

நம் நாட்டில் சராசரி ஒருவருக்கு 15 கஜம் துணி தான் உற்பத்தியாகிறது. 1960 ம் வருடத்தில் ஒருவருக்கு 22 கஜம் துணி உற்பத்தி செய்வது துணி நெய்யும் தொழிற்சாலைகளின் திட்டம்

30 ஆண்டுகளுக்கு முன் நம் நாட்டின் உபயோகத்திற்கு வேண்டிய துணிகள் முழுவதும் வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு வந்தன. ஆனால் இப்பொழுதோ நம் நாடு உலகத்திலும் துணி உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளின் பெருக்கத்தில் இரண்டாவது ஸ்தானம் வகிக்கிறது. இந்த முக்கிய தொழிற்சாலையில் நம் நாட்டில் 100 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டிருக்கிறது. மேலும் 10 லக்ஷம் தொழிலாளர்கள் இதில் வேலை செய்கிறார்கள். 500 கோடி கஜம் துணிகள் பிரதி வருடமும் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. நம் நாட்டின் வளரும் செழிப்பிற்கு எஃகு அதிக அவசியமானது. இதனாலேயே டாடா அயரன் அண்டு ஸ்டீல் கம்பெனியார் தங்களுடைய தொழிற்சாலையின் உற்பத்தியை அதிகப்படுத்துவதற்காக பல்வேறு திட்டங்களை கையாண்டு வருகிறார்கள்.

இரும்பு உற்பத்தி:

1955	...	1,050,000 டன்கள்
1959	...	2,000,000 டன்கள்

தனியார் தொழில் தேச நலனுக்காகப் பாடுபடுகிறது

தி டாடா அயரன் & ஸ்டீல் கம்பெனி லிட்

TH.574

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

